இலங்கையில் 30/=

# தமிழ் உலகம் London

அனைத்துலக தமிழ் சஞ்சிகை
இல.15 January 2005

International Tamil Magazine




## பொருளாதாரத்தில் முன்னணி வகிக்கும் மொரிஷியஸ்



## நிழல் யுத்தம்



## சமாதானம் சேடமிழுக்கின்றது! போர் கதவை தட்டுகின்றது!! சர்வதேசம் சுட்டிக்காட்டுகின்றது!!!




## அமெரிக்காவின் பார்வையில் இலங்கை

‘ உலகத்தமிழர் பொருளாதார உயர்வை ஊக்கிறோம் ’

# futture homes

Mortgage Specialist



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

போதிய வருமானம் குறைவு!
நிரந்தர முகவரி இன்மை!!
நீதிமன்றப் பதிவுகள்!!!
வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!
அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.



வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவீடும்.

**மேலதிக விபரங்களுக்கு:- முரளி**

Futture Home
17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ
T: 0208 830 3457 F : 0208 830 4111 info@futturehome.com

* YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT. * Futture Home Limited is authorised and regulated by the Financial Services Authority. reg 302431




# HAPPY NEW YEAR 2005

## FOR ALL TAMILULAKAM READERS

## தமிழ்உலக வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

தமிழ்உலகம்
London

தமிழ்உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
Global Lanka Publications Ltd.
The United Kingdom

நிர்வாக / பொறுப்பாசிரியர்
சுப்பிரமணியம் கிருஷ்ணதாசன்

பிரதம ஆசிரியர்
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

இணை ஆசிரியர் & வடிவமைப்பு
ஷர்மிலா றெட்ணசிங்கம்

உதவி ஆசிரியர்
பிரதீபா சபாநடேசன்

விளம்பரம் - சந்தைப்படுத்தல்
கிருஷ்ணன் சந்திரமோகன்

Head Office:- TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

Sri Lanka Office:-
TAMILULAGAM
Meewella Building, 7th Floor
329, Galle Road,
Colombo - 04, Sri Lanka

Tel: 0094 112 59 1044
Fax: 0094 112 59 1047
E.Mail: tugloballanka@sltnet.lk

Printed by
Vakmee Printers

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளுக்கான
வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |

# January 2005



செய்தற்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்

குறள் 466

செய்யவேண்டாதன செய்தாற்கெடுவான்:
செய்யவேண்டியன செய்யாவிட்டாலும் கெடுவான்.

There are things that ought not to be done and if you do them you will be ruined; and there are things that ought to be done and if you don't do them you will be ruined also

## சக பக்கங்களில்

**அரசியலும் தற்கால நிகழ்வுகளும்**
தாயகம் - சமாதானம் சேடமிழுக்கிறது ........ 2
பொங்குவதற்கு பொங்கும் இதயங்கள் ........ 4
புலம் பெயர் மண் - புலம்பெயர்ந்தவர்களுக்கு ........ 5
உலகநோக்கு -அமெரிக்காவின் போர்வையில் ........ 6
**பொருளாதாரமும் அதன் வலிமையும்**
பொருளாதாரத்திற்கு உரமூட்டும் 'A 9' ........ 8
மலையகம் - பின்தங்கிய நிலையில் மலையகத்தவரின் ........ 9
உலகம் - பொருளாதாரத்தில் ........ மொறிஷியஸ் ........ 10
**கலையும் கலாசாரமும்**
இரண்டாம் மொழியாக தமிழை ........ 12
சொக்கனின் மறைவு ........ 13
**சமூகமும் சூழலும்**
நேர்முகம் நோட்டிங்ஹாம் M.P. கிரகம் அலன் ........ 14
மருத்துவம் - டாக்டர் சுவர்ணகுமார் ........ 15
மகளிர் பகுதி - வாழ்க்கை வாழ்வதற்கே - கல்முனை ராதிகா ........ 16
**காலமும் மாற்றமும்**
இராசி பலன் - சோதிட ஆய்வாளர் த.அழகேசன் ........ 18
விசேட தினங்கள் - சபரிமலை, அகவை 50 இல் அன்னை ........ 19
Woman & Children ........ 20
**கருத்தும் கணிப்பும்**
வாசகர் எண்ணங்கள் ........ 22
சந்தா, உலக சிரிப்பு தினம் ........ 23
**காட்சியும் கானமும்**
திரைவலம் ........ 24
**எண்ணும் எழுத்தும்**
தொடர்கதை - திக்கம் சிவயோகமலர் ........ 26
மழலைகள் மன்றம் ........ 28
கவி வலம் ........ 30
குறுக்கெழுத்துப்போட்டி ........ 31
சிறுகதை - தாரா ........ 32
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ........ 34
பாடசாலையும் தராதரங்களும் -க.இராதுரை ........ 36
**பொழுதும் ஓய்வும்**
உலக விநோதங்கள் ........ 37
சித்திரத்தொடர்கதை - தாரா - ........ 38
விளையாட்டு ........ 39
**விளம்பரமும் வியாபாரமும்**
மணமக்கள் தேடல் ........ 40
வர்த்தக விளம்பரங்கள் ........ 41

# சமாதானம் சேடமிழுக்கின்றது! போர் கதவை தட்டுகின்றது!! சர்வதேசம் சுட்டிக்காட்டுகின்றது!!!



அந்த இரண்டு தசாப்த கால கோரக் கனவுக் காட்சிகள் மீண்டும் மனக்கண்களில் தெரியத் தொடங்குகின்றன. மனிதவரலாறு என்பது மனிதன் வரலாற்றிலிருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை என்பதைக்காட்டும் ஒன்றுதானா என்ற கேள்வி மனிதநேய உள்ளங்களில் எழுவது இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாததாயுள்ளது.

வன்னி சென்று பேச்சுக்கள் நடத்திய நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் முக்கியமாக ஒரு விடயத்தை கேட்டறிந்தார் என்பது பல கேள்விகளை எழுப்புகின்றது. தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தின உரையில் குறிப்பிட்ட “எமது துயர வாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழி இல்லை” என்ற வரிகளுக்கு வியாக்கியானம் கேட்பதிலேயே கவனமாக இருந்தார்.



அகாஷி

முதலில் கொழும்புக்கு வந்து உயர் குழாத்தினருடன் பேசிவிட்டு வன்னி சென்ற விசேட தூதுவரின் மனதில் முந்துரிமை பெற்று நின்ற கேள்வியும் அதற்கான பதிலை பெற்றுத்திரும்பியதும் அதனை கொழும்பில் தெரிவித்து விடவேண்டிய தேவையும் சொல்ஹேய்மை உறுத்தியிருந்தது. ஏகோபித்த முறையில் எல்லோரும் சமாதானத்தையே எட்டி எட்டிப் பார்த்த வண்ணமிருந்தாலும் கொழும்பு மட்டும் குறிப்பான தனது நோக்கிலேயே கரிசனையுடன் இருந்துகொள்கின்றது. சமாதான தூதுவரை பயன்படுத்தி சண்டைக்கான ஆயத்தங்களை முன்னெடுக்கும் சாணக்கியம் கொழும்பிற்கு உண்டு என்பதும் கூட பலரும் அறிந்த வேறு ஒரு இரகசியம் தான்.

சொல்ஹேய்மின் கேள்விக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் வழங்கிய பதில் 3 வருட கால அமைதிக்குப்பின்னர் கொழும்பு நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட முதலாவது பாரிய ஒரு குண்டென்றால் அது மிகையானது. அதாவது, தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளை பெறுவதற்கு சாத்வீகப்போராட்டங்களை நடத்தி வந்தனர். அவை ஆயுதங்கொண்டு அடக்கப்பட்டதன் பின்னர் தாமும் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த வரலாறு தமிழருக்கு சொந்தமானது. “இன்றைய கட்டத்தில், அரசாங்கமும், அதன் படைகளும் எவ்விதமான பிரதிபலிப்பை காட்டுவர் என்பதை பொறுத்து தமிழர்களும் தமது போராட்டம் பற்றி முடிவு செய்வர்” என்று தமிழ் செல்வன் விளக்கமாக பதிலளித்துள்ளார். ஆயுதப்போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே தமிழர்கள் நடத்தி வந்த தற்காப்புப்போரின் தளத்திலிருந்தபடியே மிகுந்த தன்னடக்கத்துடன் இவ்வாறு பதில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த பதில் உரிய இடங்களைச் சென்றடைந்ததும் சிறிலங்கா அரசாங்கம் தனக்கே உரிய வகையில் ஆயத்தங்களில் ஈடுபடும் என்பதை கூறத் தேவையில்லை.

இது ஒரு புறமிருக்க, 2003 ஜூனில் நடைபெற்ற டோக்கியோ மகாநாட்டிற்கு கூட்டுத்தலைமை வழங்கிய யப்பான், அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்தித்து சமாதான முயற்சிக்கும், சமாதான அனுசரணையாளர்களுக்கும் எதிராக அரசின் முக்கிய பங்காளியான ஜே.வி.பி செய்து வரும் விஷமப் பிரசாரங்கள் பற்றி விசனம் தெரிவித்திருக்கின்றார்கள். ஜனாதிபதியின் வெளிப்படையான நிலைப்பாடு ஒன்றாகவும், ஜே.வி.பியின் நிலைப்பாடு அதற்கு முரணாகவும் இருப்பதை சுட்டிக் காட்டியுள்ளனர். பங்காளிக்கட்சியொன்றினால் முரணான பிரசாரத்தை மேற்கொள்ளக்கூடியதாகவிருப்பது எவ்வாறு என்பதை புரிந்துகொள்ள முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டு கூட்டு அறிக்கையும் வெளியிட்டனர்.

தென்இலங்கையின் அரசியல்வாதிகளுக்கென்றே உள்ள தனிரகமாக சூழ்ச்சி திட்டங்கள் பற்றி கடந்த மாத சஞ்சிகையில் நாம் குறிப்பிட்ட வரிகள் இப்படியிருந்தன.“கடந்த 50 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் பல போராட்டங்களினூடாக உணர்ந்தும்,தெளிந்தும் கொண்டுள்ளவற்றை இனிமேல்தான் அனுசரணை நாடுகள் புரிந்து கொள்ளப்போகின்றன” என்று எழுதியிருந்தோம். இது தவிரவும், ஆளும் கூட்டணியின் இரு பெரும் கட்சிகளும் ஒரே நடைமுறையையும் வித்தியாசமான சொற்சிலம்பங்களையும் வெளிப்படுத்தியவாறே கணவன்-மனைவி சண்டையில் ஈடுபட்டிருப்பதாக காண்பித்துக்கொண்டிருக்கின்றன என்பதும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

டோக்கியோ மகாநாட்டு கூட்டுத்தலைமையின் அதிருப்திக்கு ஜே.வி.பி.பதிலளித்திருக்கின்றது. “இணங்காமலிருப்பதற்கு இணங்கிக்கொண்டோம்” (Aagreed to disagree) என்று இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் பிரதான கட்சிக்கும் பிரதான பங்காளியான தமக்குமிடையே உள்ள புரிந்துணர்வை வெளிப்படுத்தியிருக்கின்றது ஜே.வி.பி. இனப்பிரச்னை தீர்வு தொடர்பில் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் தமக்குள் கருத்து வேறுபாடு இருப்பதாக கூறியே ஒப்பந்தங்களை கைவிட்டது வரலாறு. சிங்களக் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடு இருக்கின்றது என்று காட்டி ஒரு சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமைகளை வழங்காது தட்டிக்கழித்து வந்த வரலாற்றுக்கேவலமே இம்முறையும் முன்வைக்கப்படுகின்றது. இம்முறை தென்னிலங்கையின் இந்த நடிப்பு கூர்மையடைந்தும் உள்ளது. அதாவது, இனப்பிரச்சினை விடயத்தில் ஒன்றுபடுவதில்லை என்பதை ஒப்பந்த வரிகளாக சேர்த்துக்கொண்டு ஆளுங்கூட்டணிக்குள்ளேயே இரு கட்சிகளும் இருக்கின்றன. ஆளுங்கட்சிகளுக்குள்ளேயே எதிர்க்கட்சியும் இருக்கும் விசித்திர நிலைப்பாடு இதுவாகும்.

முன்னைய காலங்களில் தமிழ் தரப்புடன் ஒப்பந்தம் செய்யும் ஒரு ஆளும் கட்சி அன்றைய எதிர்க்கட்சியை சுட்டிக்காட்டி “இவர்கள் எதிர்ப்பதால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கிறதே” என்றே கூறினர். அதாவது ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியுமே இனப்பிரச்சினை விவகாரத்தில் “ இணங்காமலிருப்பதற்கு இணங்கிக்கொண்டு” சிங்கள இனத்தின் விசுவாசிகளாக இருந்து வந்தன. கணவன் - மனைவி சண்டையை நடித்துக்காட்டினர். இதனையும் வரலாறு குறித்துக்கொண்டுள்ளது.


இது மட்டுமன்றி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்றுக்கொண்டு பேச்சுக்களை தொடரும்படி கேட்டு வரும் எதிர்க்கட்சி நீட்டும் ஆதரவுக் கரத்தை ‘வேண்டாம்’ என்று அப்பட்டமாக நிராகரித்துவிட்டு ‘ஆதரவு இல்லை’ என்று காட்டுவது மேலும் இரட்டிப்பான விசித்திர நிலைப்பாடாகவும் இருக்கின்றது. ஜே.வி..பியின் கூற்றுப்படி ‘இணங்காமலிருப்பதாக இணங்கிக்கொண்ட நிலைப்பாடு இருக்குமாயின் இது தொடர்பில் பிரதான ஆளும் கட்சித்தலைவியான ஜனாதிபதியின் நிலைபாடு என்ன? அவர் தன்னிச்சையான தீர்மானமெடுத்து சமாதான பேச்சுக்களுக்கு உடன்பட்டால் ஜே.வி.பியும் தன்னிச்சையான ஒரு நிலைப்பாட்டை எடுத்து ஆட்சியிலிருந்து வெளியேறலாம். அதனால் அரசு கவிழலாம். ஆனால் இதற்கு இரு கட்சிகளும் ஆயத்தமில்லை. இரு கட்சிகளும் பரஸ்பரம் தமக்குள் பூட்டுப்போட்டு வைத்திருக்கின்றன.

இதனால் இடைக்கால தன்னாட்சி கோரிக்கைக்கு இடமளிக்காமல் நடந்து கொள்ளவதை விட மாற்று வழியில்லை என்பதே அவர்களின் நிலை. சொற் சிலம்பங்களும், இழுத்தடிப்புக்களும் தொடரும் என்பதும், ஆட்சிப்பசிக்கு நாடு பலி! என்ற நிலையும் கருத்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதே உண்மை. மொத்தத்தில் சுதந்திரக்கட்சி தலைமைக்கும் ஜே.வி.பி தலைமைக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வானது, விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையரசுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்விலும் பல மடங்கு பலமுள்ளதாகவே காணப்படுகின்றது. இதுவே வரலாற்று ரீதியாக தென்னிலங்கையின் கட்சிகளை அரசியலுக்கப்பாலும் நின்று பிணைத்து வைத்ததாகும்.

ஜே.வி.பியினர் தமது குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித பதிலை அறிக்கையாக வெளியிட்டாலும் அவர்களது நடத்தைப்போக்குகள் அவர்களின் உண்மை நிலையை காட்டுவதாக மீண்டும் டோக்கியோ மகாநாட்டின் கூட்டுத்தலைமைகள் சுட்டிக்காட்டத்தவறவில்லை. 2003 நவம்பர் 1 ஆம் திகதி இடைக்கால நிர்வாக சபை கோரிக்கை முன்வைக்கப்பட முன்னர் ஜே.வி.பியினர் சமாதான பேச்சுவார்த்தைகளை வரவேற்றிருந்தவர்களா? என்னும் கேள்வியையும் எல்லோரும் கேட்டுப்பார்க்க முடிந்தது.

இதனால் வேறு மாற்று வழியற்ற நிலையிலேயே விடுதலைப்புலிகள் தமிழீழத்தை அமைக்கும் இறுதி முயற்சியில் இறங்கி விட்டனர் என்று சர்வதேச நாடுகள் நம்புவது தமிழீழத்திற்கு வழங்கப்படும் அங்கீகாரம் என்பது உணரப்படட்டும். அத்துடன் அது புலிகளின் உறுதியான நிலைப்பாட்டிற்கும், ராஜதந்திரத்திற்கும் கிடைத்த வெற்றியென்பதையும் வரலாறு குறித்துக்கொள்ளும்.

- கலைவாணன்.



# அன்று பாரதப்பிரதமர் ராஜீவ் காந்திக்கு! இன்று பாரத நடிகர் சாருகானுக்கு!!

இலங்கையில் இனப்போர் கோரமாக நடை பெற்றுக்கொண்டிருந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி தானே முதலாவது ஜனாதிபதியாகவுமிருந்து தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களின் மீது கோரயுத்தத்தை நடத்திக்கொண்டிருந்தார் ஜே.ஆர்.ஜயவர்த்தன. விடுதலைப்புலிகளை அழிப்பதாக கூறிக்கொண்டு, அப்பாவிப்பொது மக்கள் மீதும் வீடுகள், பொது இடங்களிலும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் வணக்க தலங்களின் மீதும் விமானங்கள் குண்டுகளை வீசின. எறிகணைகள் வீசப்பட்டன. ஹெலிகொப்டர்கள் கோரத்தாண்டவமாடின. வடக்கு கிழக்கு மக்கள் இவற்றைத் தாங்க முடியாமல் உள்ளூரிலேயே கையில் அகப்பட்டதை எடுத்து கொண்டு இடம் பெயர்ந்தனர். பலர் செத்து மடிந்தனர். மருந்துப்பொருட்களும் தடைகள் விதிக்கப்பட்டதால் காய மடைந்தவர்களில் பலர் உரிய மருத்துவ சிகிச்சையின்றியே பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆபத்து நிறைந்த கடற்பயணத்தை மேற்கொண்டு பலர் அண்டை நாடான இந்தியாவுக்கு சென்றனர். அவ்வாறு செல்லும்போதும் கடற்படையினரால் கொல்லப்பட்டனர். யுத்தம் மேலும் வலுப்பெற்ற நிலையில் எமது உறவுகள் கட்டுநாயக்கா விமானநிலையமூடாக ஐரோப்பிய நாடுகளுக்கும், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றனர். ஜயவர்த்தனாவின் காலத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத்முதலியினால் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கை வடமராட்சியில் ஆரம்பமானது. இதன்போது அமைச்சர் அத்துலத்முதலி தமிழர் அழிக்கப்படுவதை விமானத்திலிருந்தபடி பார்த்து மனங்குளிர்ந்தார். யுத்தமொன்று நடைபெறும்போது தமது நாட்டு குடி மக்களுக்கு அவர்கள் தமக்கான பாதுகாப்பை தேடுவதற்கு குறைந்த பட்ச கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் சில துண்டுப்பிரசுரங்களை ஹெலிகொப்டரிலிருந்து வீசிவிட்டு பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே முப்படையினரும் தாக்குதல்களை தொடருவார்கள். மக்கள் இடம்பெயர்ந்து செல்லும்போதே மரணமடைய நேரிடும். அவர்களெல்லாம் விடுதலைப்புலிகளே என்று பேரினவாத பிரச்சார ஊதுகுழலகள் மூலம் உலகிற்கு அறிவிப்பார்கள். ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கைக்கு புலிகளிடமிருந்து வீராவேசமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனை தொடர்ந்து தமது இலக்கு நிறைவு பெற்றதாக அறிவித்த அரசு நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்தியது.

இந்நிகழ்வுகள் தமிழ்நாட்டை கொதித்தெழ வைத்தது. அப்போது முதலமைச்சராக இருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கடும் அழுத்தத்தை ராஜீவ் காந்திக்கு கொடுத்தார். அந்தச் சூழ் நிலையில் பெங்களூரில் ஒரு மகாநாடு நடந்தது. அங்கு ஈழத்தமிழர் நிலை குறித்து நன்கு எடுத்துக்கூறப்பட்டது. அங்கு ராஜீவ் காந்தி, ஈழத்தமிழர்கள் இலங்கை அரசின் யுத்தத்தினால் துன்பங்களை அனுபவித்து வருவதை இந்தியா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. குறித்த இராணுவ நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இதன்பின்னரே ஆகாயத்திலிருந்து உணவுப்பொருட்களை போடுமாறு தனது விமானப்படைக்கு உத்தரவிட்டிருந்தார். தமிழக மக்களின் நெருக்குதலால் இவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

அக்காலத்தில் தமிழர் சார்பில் பாரதம் மட்டுமே உறுதியுடன் இருந்தது. இந்தியாவுக்கு எதிரான நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, அமெரிக்கா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா ஆகியன தமிழருக்கெதிரான யுத்தத்திற்கு ஒத்துழைப்பும் பயிற்சியும், விமானங்களும் வழங்கிக் கொண்டிருந்தன.

நிலைமையின் தாற்பரியத்தை உணர்ந்து கொண்ட நிலையில் தான் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து யுத்தத்தை நிறுத்த வேண்டிய நிலையில் இருப்பதாக ஜயவர்த்தன அறிவித்தார். தனது படைகளுக்கு போரிடும் திராணி இல்லாத தன்மையையும் எடுத்துக்கூறி, அதற்கு சிங்கள மக்கள் உடன்படாவிட்டால் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கால்களில் வீழ்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும் உரையாற்றினார். பின்னர் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு ராஜீவ்-ஜே.ஆர். உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. தென்னிலங்கையின் பௌத்த, சிங்கள, பேரினவாத சக்திகள், 'புலிகளுக்கு ஜே.ஆர். தமிழீழம் கொடுத்து விட்டார்.' என்னும் பிரச்சாரத்தையும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளையும் ஆரம்பித்தன.

ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பும் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்நிலையில் வடக்கு - கிழக்கை தற்காலிகமாக இணைப்பதை உள்ளடக்கிய ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. அன்றைய தினம் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கு காலிமுகத்திடலில் விமானப் படையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றபோது, விமானப்படை வீரன் ஒருவன் ராஜீவ்காந்தியன் பிடரியை நோக்கி துப்பாக்கியால் தாக்கினான். சூரிய வெளிச்சத்தில் அதன் அசைவைக்கண்டு மயிர் இழையில் உயிர் தப்பினார் ராஜீவ் காந்தி. தாக்கிய ராஜபக்ஸ என்பவன் ஒரு மனநோயாளி என்று சாட்டுக் கூறப்பட்டது. ஆனால் அந்த ராஜபக்ஸ பின்னர் இரண்டு பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டிருந்தார்.

ஆனால் இன்றோ நோர்வேயின் அனுசரனையினால் யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருக்கின்றது. சிங்கள மக்கள் இதன் பயனை கடந்த மூன்று வருடங்களாக அனுபவிக்கின்றனர். தாயக மக்கள் யுத்த கால சூழ்நிலையினின்று விடுபடவில்லை. இன்னல்களுடன் வாழ்கின்றார்கள். யுத்த நிறுத்த அமைதியின் பயன்களாக தலைநகரில் அன்றாடம் பல களியாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 11 ஆம் திகதி கொழும்பு குதிரைப்பபந்தைய திடலில் வட இந்தியாவின் பிரபல திரைப்பட நடிகர் சாருக்கான் நிகழ்ச்சியொன்றை நடத்தினார்.

அன்றைய தினம் கங்கொடவில சோம தேரர் என்ற பௌத்த மதகுருவினது நினைவு நாள். இதனால் கலை நிகழ்வுகளுக்கு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், கலகங்களும், கண்ணீர்ப்புகை சம்பவங்களுடன் குண்டு வெடிப்பும் நடைபெற்றது. இருவர் மரணமடைய பத்துப்பேர்கள் வரையிலான கலா ரசிகர்கள் காயமடைந்து கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



சாருக்கானும் குழுவினருடன் அந்த நள்ளிரவுடனேயே விமானத்திலேறி பறந்தோடினர். இந்நிகழ்வு அரசுக்கு பலத்த அடியாகும். இதனை விடுதலைப் புலிகள் மீது சுமத்தலாமா என்று பார்த்தனர். விசேட புலனாய்வுத்துறை உடன்படவில்லை. யார் மீது பழியைப்போட்டு இந்தியாவிடமிருந்து தப்பலாம் என்பது பலத்த பிரச்சினையாக உள்ளது. இன்னுமொரு ராஜபக்ஸவை தேடுவதாக இருக்கலாம்.கடந்த 2003 ஆம் ஆண்டு இந்துக்களின் தீபாவளி நாளன்று, எதிர்ப்புகளை பொருட்படுத்தாது அரசியல் போராட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. மத உணர்வுகள் உதாசீனம் செய்யப்பட்டது. ஒரு மலையக எம்.பி. கட்சி மாறினார். இன்று பௌத்த மதத்தினரின் அஞ்சலி நிகழ்வும் அலட்சியம் செய்யப்பட்டது. அசம்பாவிதங்களுக்கும் இடமளித்தது.

- ரகுபதி சர்மா.



கேள்வி: ஆளும் அணியின் இருபெரும் கட்சிகள் இணங்காதிருப்பதென்று இணங்கியிருக்கின்றார்களாமே!

பதில்: புரியுதில்லையா? பிரியாதிருக்கட்டுமே யென்று பிரிக்கப்போகின்றார்கள்!

# பொங்குவதற்கு பொங்கும் இதயங்கள்

**வீ**ட்டு முற்றத்தில் புதுப்பானைப்பால் பொங்க, உள்ளங்கள் நிறைவால் பொங்க, ஊரிலும் நாட்டிலும் புலம் பெயர் தமிழர்களின் வீடுகளிலும் இன்பம் பொங்க, தமிழர்கள் கொண்டாடும் இப்புனிதப் பொங்கல் தமிழினத்தின் ஒரு புனிதச்சொத்து. நன்றிக்கும் நானே! நட்புக்கும் நானே! யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் தத்துவத்திற்கும் நானே! என்று தமிழரெல்லாம் மார்தட்டும் இனிய விழா. திருவள்ளுவராண்டான தை முதலாம் திகதி (ஜனவரி 14) கொண்டாடப்படுகின்றது. புனித நாளே வருக, வருக!

உலகில் மிகவும் ஓங்கி வளர்ந்து, உன்னதமான ஒரு பண்பாட்டு நிலையை அடைந்து நின்றபடி பெருமைப்படுவது தமிழினம். இதற்கான பல காரணிகளுள் சிறப்பாக குறிப்பிடத்தக்கவை தமிழினம் இன்றுவரை தன்னுடன் இறுகப்பிணைத்து வைத்து பேணிக்கொள்ளும் நன்றியுணர்வும், நட்புணர்வும் என்றால் மிகையல்ல.

உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படைகளை இனங்கண்டு கொண்டு அவற்றை பாதுகாத்து, பேணி வளர்த்து முன்னெடுப்பதற்கு முந்துரிமை வழங்குவதுடன், அதற்கான உட்கட்டுமாணங்களை சரியாக இனங்கண்டு முன்னோடியாக செயற்பட்டான் தமிழன். ஒரு புறம், விவசாய நிலத்தையும், நெல்லுற்பத்தியையும் அதற்கு நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் இயற்கையால் வழங்கப்படும் இலவச பொருட்களான சூரிய சக்தி, அதனால் கிடைக்கும் மழை வீழ்ச்சி என்பனவற்றிற்கும், மறுபுறம் அவற்றை நிறைவேற்றுவதில் நேரடிப்பங்களிப்புச் செய்த அனைவற்றினுள்ளும் மாடுகளையும் கூட விட்டு வைக்காமல் நன்றி தெரிவிக்க எடுத்த தொன்மை வாய்ந்த திருவிழாவே பொங்கல் விழா என்பதிலேயே எமது பெருமையின் பெரும்பகுதி உள்ளது. இது எந்தவொரு மதத்திற்கும் உரியதல்ல. இதில் அறிவியல் கண்ணோட்டமே பெரிதும் இனங்காணக்கூடியதாகவும் உள்ளது. நான்கு கால்கள் கொண்ட விலங்குகள் தானே என்று மாடுகள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. இறைச்சிக்கான விலங்குகள் என்றும் கருதப்படவில்லை. கலப்பையை கழுத்தில் ஏற்று இழுத்துக் களைத்த மாடுகளுக்கும் பாற்பசுக்களுக்கும் விழா எடுத்தான் அன்று எமது மூதாதைத்தமிழன். மலர் மாலையும் வடை மாலையும் அணிவித்து வணங்கும் வரலாற்றை தொடக்கி வைத்தான். நட்புக்கு எல்லை வகுத்தான். உழைப்பை பகிர்வது போல் ஊதியத்தையும் பகிர்வதே சிறப்பு என்பதை உணர்த்தி வைத்தான். இன்றைய தைப்பொங்கல் இத்தகைய பெருமைகளின் பின்னணியிலேயே கொண்டாடப்படுகின்றது.

புது நெற்கதிரை அறுத்துக்குற்றி பச்சை அரிசி எடுத்து, பால் பொங்கும் புதுப்பானையிலிட்டு, பாசிப்பயறும் கரும்பு வெல்லமும், நெய்யும் சேர்த்து செய்யும் பொங்கலை முதலில் சூரியனுக்கு படைத்து வணங்கும் காட்சி தமிழரின் மனப்பதிவுகளில் அழிக்க முடியாத ஒன்று. பொங்கலுக்கு மறு தினம் ஏர் இழுத்த காளைகள், பால் தந்த பசுக்கள் எல்லாவற்றையும் நீராட்டி, மலர் மாலைகள் அணிவித்து மகிழ்வர். மாட்டின் உழைப்புக்கு நன்றி தெரிவித்து தமிழினத்தின் பெருமையை நிலை நிறுத்தும் மாட்டுப்பொங்கல் அல்லது பட்டிப்பொங்கல் இது.



### தை பிறந்தால் வழி பிறக்கும்

சாதாரண விவசாயிகள் தங்கள் வயல்களில் வியர்வை சிந்தியும், ஓய்வு ஒழிச்சலின்றியும் பாடுபடுவர். நெல் விதைப்பது தொட்டு அறுவடை வரை பெரும் செலவு ஏற்படுவதால் பெருமளவு கடன்படுவது சாதாரணமானது. இதனால் கடனைத் திருப்பிச்செலுத்துவதற்கு தை மாதம் எப்போது வரப்போகின்றது என்று பெரும் ஆவலுடன் காத்திருப்பர். அறுவடை தொடங்கிவிட்டால் விளைச்சலைப் பொறுத்து செல்வம் வீடு வந்து சேர்ந்ததும் சுமைகள் இறங்கி மகிழ்ச்சியடைவர் என்பதை நாம் புரிந்து கொள்வது சுலபம். இதனால் இன்னல்கள் தீருவதற்கு தை பிறக்க வேண்டும். விளைச்சல் கிடைப்பதற்கு சூரியனும், மழையும் உரியபடி கிடைக்க வேண்டும் என்றெல்லாம் இவற்றையே 'காப்புறுதி' எனக்கருதி காத்திருந்தவர்களே வழிபிறப்பதற்கு தை பிறக்க வேண்டும் என்று ஏங்கினர். இதுவே இன்றும் நிலைத்து நிற்கும் பழமொழியுமாகியுள்ளது.

கடந்த இரு தசாப்தங்களில் தமிழர் தாயகத்தில் மிகையாக பொங்கி வழிந்தது தமிழரின் கண்ணீரும், செந்நீருமென்பது வரலாறாகி நிற்கின்றது.

போர்ப் புயலினால் தாயகத்திலிருந்து தூக்கிவீசப்பட்ட தமிழர்கள் உலகின் பல நாடுகளில் சென்று வாழ்கின்ற காலம் இது. உள்நாட்டிலும் அகதிகளாக தமிழன்! அவனது வயல்களோ எதிரிக்கு பாதுகாப்பு வழங்கும் வலயம்! பெற்றோரை இழந்த பிள்ளைகள். கணவரை இழந்த பெண்கள், பிள்ளைகளை இழந்த பெற்றோர். கல்லறைகளில் தியாகிகள் நிறைந்த தாயகப்பகுதிகள்.

நெல் விளையப்பூமியற்ற நிலையிலும் தைப்பொங்கல் எனும் சொல் தமிழர்களை உந்தித்தள்ளி உயிர்த்தெழ வைக்கும் ஒன்று. அடுத்த பொங்கலில் இதுவும் இருக்குமோ என்று இரகசியமாக எச்சரிக்கும் இதயம்! இந்நிலையிலும் பொங்குவதற்காக பொங்கும் இதயங்கள்.

உலகம் உணவில் தன்னிறைவு பெறவில்லை என்னும் விடயம் எங்கிருந்தோ செவிகளில் விழுகின்றது. அபிவிருத்தியடையா நாடுகள், குறை அபிவிருத்தி நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் வறுமை உள்ளது. வறிய பிரிவினர் உள்ளனர். உலகம் இன்னும் தானிய உற்பத்தியில் தன்னிறைவை அடையவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

**நீரன்**

ஆயுத உற்பத்தி மிகுந்து நிற்கின்றது. தானிய உற்பத்தியே தாழ்ந்து நிற்கின்றது. உணவு தானியத்தை உற்பத்தி செய்யும் உழவர் பெருமக்கள் உரிய வகையில் முதன்மைப்படுத்தப்பட்டு போற்றப்படல் உலக அரசாங்கங்கள் முன்னுள்ள பணி.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

(குறள் 1032)

தொழிலாளர்களுக்கு உலக தினம் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது போல உழுதுண்டு வாழ்ந்து உலகுக்கும் உணவூட்டும் உழவர்களுக்கும் ஒரு தினம் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். அது தைப்பொங்கல் தினமாகவும் இருத்தல் வேண்டும். இதுவே வள்ளுவனை மகிழ்விக்கும் செயல்.

# புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு மூளைச்சலவை

சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு அதிகமாக இலங்கையில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சினை உலக நாடுகள் பலவற்றிலும், எதிரொலித்தவண்ணம் உள்ளது. இதன் காரணமாக வெளிநாடுகள் பலவற்றில் இலங்கை இனப்பிரச்சினை, மனித உரிமைமீறல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் அமெரிக்காவை தளமாகக்கொண்டியங்கும் 'மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு' 'சிறுவர்களும் ஸ்ரீலங்காவின் ஆயுத முரண்பாடும்' என்ற தலைப்பில் அண்மையில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள 'கலில்' மண்டபத்தில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தி ருந்தது.

திருமதி ஜோ.பேக்கர் (மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு), அன்டி லவ் (பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்), ஒரு தமிழ் பிரதிநிதி ஆகியோர் உரையாற்றுவார்களென விளம்பரத்தில் குறிப் பிடப்பட்டிருந்தது. மாலை 6.00 மணிக்கு ஆரம்பமான கூட்டத்தில் 'இனறைய உலகம்' என்ற சஞ்சிகையின் ஆசிரியர் தலைமை தாங்கி பேச்சாளர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

இவரைத்தொடர்ந்து உரையாற்றிய திருமதி ஜோ பேக்கர் "இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் 20 வருடங்களுக்கும் அதிகமாக இடம்பெற்று வரும் யுத்தம் மிகவும் மோசமாக சிறுவர்களைப் பாதித்துள்ள தாகவும்,60,000 மேற்பட்ட தமிழர்கள் இப்போரினால் உயிரிழந்துள்ளதாகவும், அனேகமான சிறுவர்கள் தமது பெற்றோரையும் குடும்ப அங்கத்தவர்களையும் இழந்துள்ளதாகவும், பாடசாலைகள் உட்பட பல கட்டடங்கள் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும், பெருந்தொகையானோர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் கூறிய இவர் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மீதான தனது கண்டனங்களை கூறத் தொடங்கினார். அதில் விடுதலைப்புலிகளமைப்பின் முன்னாள் கிழக்கு பிராந்திய தளபதியாக இருந்த கருணா பற்றியும் விபரித்தபோது, "கருணா பற்றிய உமது பிரச்சாரத்தைக் கேட்க நாங்கள் இங்கு வரவில்லை" என்று கூட்டத்திலிருந்த சிலரால் கூறப்பட்டது. திருமதி பேக்கர் தனது உரையின் இறுதியில் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் விடுதலைப்புலிகளுக்கு எந்த விதமான நிதி உதவியையும் செய்ய வேண்டாமென கேட்டுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து தமிழ் பிரதிநிதி 'புலன்' ' உரையாற்றுவார் என்று கூறப்பட்டதும் சபையிலிருந்து 'யார் இந்தத் தமிழ்ப் பிரதிநிதி?', 'இவரது பின்னணி என்ன?', 'இவரது முழுப் பெயர் என்ன?',இவர் ஏன் இங்கு உரையாற்ற வேண்டும்?' என பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

நிலைமை மோசமானதை அவதானித்த ஒரு பிரித்தானியப்பெரியவர், தமிழ்ப்பிரதிநிதி பெயரை எழுத்துக்கூட்டி கூறுமாறு வேண்டினார். இதனையடுத்து தமிழ்ப்பிரதிநிதி தனது பெயர் 'பூலோகசிங்கம்' என்று கூறி பேச்சை தமிழில் ஆரம்பித்தார்.

ஆனால் இவரது பேச்சுக்கும், மனித உரிமை, சிறுவர் உரிமைக்கும் எந்தச்சம்பந்தமுமிருக்கவில்லை. மாறாக மிகவும் மோசமாக தமிழீழவிடுதலைப்புலிகள் மீது வசைமாரி பொழிந்தார். இவர் பேசி முடித்ததும் பேச்சின் மொழியாக்கம் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டது. ஆனால் இவரது தமிழ்ப்பேச்சுக்கும், ஆங்கில மொழிபெயர்ப்புக்கும் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை. இதனை தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரிந்தோர் கடுமையாக கண்டித்து சத்தமிட்டனர். இறுதியாக கேள்விநேரம் வந்ததும். திருமதி ஜோ. பேக்கரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

"இலங்கையில் தமிழ் மக்கள் கடந்த 50 வருடங்களுக்கும் அதிகமாக பல இன்னல்களை அனுபவிக்கிறார்கள், அப்பொழுது நீங்கள் எங்கு போனீர்கள்?"

"நீங்கள் முன்னுரையில் கூறியது எதுவும் உங்கள் அறிக்கையில் இல்லையே?", "ஸ்ரீலங்கா சர்வதேச சட்டங்கள் பலவற்றையும் மீறியுள்ளது அதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?", "சிறுவர் உரிமைகள் பற்றி பேசுகின்றீர்கள், அப்படியானால் தெற்கில் 40,000 சிறுவர்கள் விபசாரத்தில் ஈடுபட்டுள்ளனரே இது பற்றி உங்கள் அறிக்கையில் என்ன உண்டு?", "யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒரு பகுதியினரான தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றி மட்டும் உங்கள் அறிக்கையில் குறை கூறியுள்ளீர்கள். அரசாங்கம் பற்றிய ஒரு குறையும் உங்கள் அறிக்கயில் இல்லையே?", இது மனித உரிமைக்கூட்டமல்ல, ஒரு கபடமான அரசியல் கூட்டமென்றும் கூறினார்கள். இப்படியான பல கேள்விகள் கேட்கப்பட்டன. திருமதி பேக்கர் இறுதியில் எல்லாவற்றுக்கும் பதில் கூறுவதாக கூறிவிட்டு தனது பதிலில் 'உங்களில் சிலர் கூறியது உண்மைதான். இவற்றைப் பற்றி நாம் கவனத்தில் எடுப்போம்' என்றார் இவ் விபரங்களை கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல வார இதழ் தெரிவித்திருந்தது.

இந்த வகையான நிகழ்வுகள் சில கேள்விகளை எழுப்புகின்றன என்பது உண்மையே. அதாவது புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் அகதிகளாக காலம் தள்ளும் இலங்கைத்தமிழர்கள் மத்தியில் திட்டமிடப்பட்ட பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா? தமிழினத்தின் தேசிய உணர்வை மழுங்கடிக்கச்செய்யும் பகீரத முயற்சி நடைபெறுகின்றதா? மூளைச்சலவை செய்யப்படுகின்றதா? இவர்கள் ஏதேனுமொரு விதத்தில் ஆதாரமற்றவர்களாக வாழ்ந்து வருவதனால் அவர்களை பகடைக்காய்கள் ஆக்கிவிடலாமா என்றெல்லாம் தன்னை வெளிப்படுத்தாத சக்தியொன்று எண்ணிச் செயற்படுகின்றதா?

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தேசிய உணர்வோடுதான் இருக்கின்றார்கள். அந்த உணர்வினால் தாயகத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றார்கள். விடுதலைக்கு விரோதமான சக்திகள் இதனைக் குறிவைத்து இயங்க முனைவது என்பது ஒன்றும் புதினமல்ல. பொங்கு தமிழ் நிகழ்வுகளை குழப்ப எடுத்த முயற்சிகளையும் பற்றி ஊடகங்களில் செய்திகள் பல வந்தன.

தொண்நூறுகளின் பிற்பகுதியில் அரச வங்கிகள் இயங்காத புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாழும் உறவு களுக்கு புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணம் விடுதலைப் புலிகளின் 'வைப்பகம்' மூலம் மாற்றி வழங்கப்பட்டு வந்தது.

அப்போது அதனைப் பெற்றவர்களின் விபரங்கள் பத்திரிகைளில் வெளிவந்தன. அப்போதும் வெளிநாடுகளில் தமிழர்கள் புலிகளுக்கு நிதி வழங்குகின்றார்கள் என்ற பிரச்சாரம் தீவிரமடைந்திருந்தது. இன்றும் அத்தகைய சமிக்ஞைகளே தெரிகின்றன.

-யூகி


# இலங்கையருக்கு லண்டனில் விருது.

இலங்கையரான போல் துரைசாமி சத்தியநேசன் இங்கிலாந்து, வேல்ஸ் ஆகிய இரு மாநிலங்களிலும் மிகச்சிறந்தவர்கள் 100 பேரில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். பொதுச்சொத்துக்களை சிதைத்தல், காடைத்தனங்கள் புரிதல் தொந்தரவு தரும் அயலவர்கள் போன்ற சமூகச்சீர்கேடுகளைக்கட்டுப்படுத்துவதில் முன்னின்று உழைப்பதற்காக இவருக்கு இந்த கௌரவம் கிடைதிருக்கிறது.

நியூஹாம் பகுதியின் Wall End Ward ஐ பிரதிநிதித்துவம் செய்யும் சத்தியநேசனுக்கு மேர்மெய்ட் தியேட்டரில் இடம்பெற்ற வைபவத்தில் உட்துறை அமைச்சர் ஹசெல் பிளெயர்ஸ் மற்றும் பீ.பீ.சியின் கிரைம் வாச் வழங்குனரான பியோனா புறூஸ் ஆகியோரினால் இதற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

தத்தமது கலாசாரங்களையும், பாரம்பரியங்கள், விழுமியங்கள் என்பவற்றை பேணி வாழ்வதற்கு அம்மக்களை ஈடுபடுத்த வேண்டும். தாம் நம்பப்படுகின்றார்கள், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள், தமது அபிலாஷைகள் நிறைவேற்றப்படக்கூடியன என்றெல்லாம் அவர்களும் உணர்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறாக வழங்கப்படும் விருதினால் வேறு பலரும் சேவைகளில் ஊக்கம் பெறுவார்கள் சமூகங்களுக்கிடையில் தொடர்புப்பாலங்களை அமைக்கவும் பரஸ்பர நம்பிக்கைகளை வளர்க்கவும் இது பயன்படுமென்று நம்புகிறேன் என்று விருது பெற்ற சத்தியநேசன் கருத்துரை வழங்கினார்.சமூக விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதே மிகப்பெரும் சவாலாக இருக்கின்றது. சத்தியநேசன் எடுக்கும் பெருமுயற்சி பாராட்டத்தக்கது என்று நியூஹாம் மேயர் சேர் ரொபின் வேல்ஸ் அங்கு தெரிவித்தார். தனது சமூகத்தவரின் பங்கு பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளவரான சத்தியநேசனை அவரது சகாக்கள் சார்பிலும் நியூஹாம் கவுண்சில்



சார்பிலும் பாராட்டுகின்றேன் என மேயர் தெரிவித்தார். நியூஹாம் பகுதி மக்கள் சமூக விரோத நடத்தைகளை எதிர்த்து தினந்தோறும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். சகல சமூகத்தவரும் ஒருமித்து செயற்படுவது எல்லோருக்குமே பாதுகாப்பானதாக இருக்கும் என்று உட்துறை அமைச்சர் அங்கு எடுத்துக்கூறினார். 'ஒருமித்த நிலைப்பாட்டிற்கான விருது' என்னும் இதனை உட்துறை அமைச்சே வழங்கி வருகின்றது.




# அமெரிக்காவின் பார்வையில் இலங்கை

உலகின் பல நாடுகளினுள் விவகாரங்களில் தலையை நுழைத்துக் கொள்வது அமெரிக்காவின் வழக்கம். தென்கிழக்காசிய நாடான இலங்கையின் விகாரத்தில் அமெரிக்கா பெரும் சாணக்கியத்திட்டங்களுடன், மெதுவாக கடந்த 50 ஆண்டு வரலாற்றில் தனது தலையை நுழைத்து வந்துள்ளது. என்பது மிகையான கூற்றல்ல. மீண்டும் ஒரு யுத்தம் மூண்டால் அமெரிக்காவோ இந்தியாவோ இலங்கையில் களமிறங்கி இலங்கையைக் காப்பாற்றும் என்று தென்னிலங்கையின் கட்சிகள் நம்புவதற்கு பின்னணி காரணங்கள் உள்ளன. முக்கியமாக அமெரிக்க, இந்திய படைத்தலைவர்கள் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்து வருவதும், ஆயுத தளபாடங்களை வழங்குவதும் இத்தகைய நம்பிக்கையுணர்வை அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி சாதாரண மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது. இந்நாடுகள் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்ய எடுக்கும் பிரயத்தனங்கள் மேற்படி நம்பிக்கைகளை மேலும் உரமூட்டுகின்றன.

இலங்கை வெளிநாடுகளின் உதவிகளை தாராளமாக பெற்று வரும் நாடு. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே பிரித்தானியாவுடன் இராணுவ பயிற்சி மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தத்தினை இலங்கை ஏற்றுக் கொண்டதுடன், திருகோணமலை கடற்படைத்தளம், கட்டுநாயக்க விமானப் படைத்தளம் ஆகியவற்றில் பிரித்தானிய படையினர் நிலைகொள்ள இடமளிக்கப்பட்டது. ஆயினும் பின்னர் படைகள் மீளப்பெறப்பட்டன. எனினும் 1983 இன் பின்னைய காலத்தில் மீண்டும் மேற்கு நாடுகள் தலையை நுழைப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டன. விக்டோரியா அணைக்கட்டு திறப்பு விழா, 1985 இல் இடம்பெற்ற பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தச்சர் விஜயம் போன்றவற்றின்போதும், 13.4.1985 இல் பிரிட்டிஷ் பிரதமருக்கு வழங்கிய விருந்துபசாரத்தின்போதும் பிரித்தானியா இலங்கைக்கு தனது படைகளை அனுப்பி உதவவேண்டுமென்ற கோரிக்கை அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் நேரடியாக முன்வைக்கப்பட்டது.இதனைத்தொடர்ந்து பிரித்தானியா ஆயுதத்தளபாடங்களையும், துறை சார் நிபுணர்களையும் கொடுத்து உதவியது. பேய்களோடும், பிசாசுகளோடும் இணைந்தாவது தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்கு திடசங்கற்பம் பூண்டிருந்த இலங்கை அமெரிக்கா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா போன்ற பேயாவேசம் கொண்ட நாடுகளுடன் படைத்துறைத் தொடர்புகளை வளர்க்கத் தொடங்கியது. இங்கே மறைந்திருக்கும் உண்மை என்னவெனில் பிரித்தானியாவின் பின்னணியில் இது தொடர்பான தீர்மானங்களை நெறிப்படுத்தி வந்த நாடு அமெரிக்கா என்பதே.

இலங்கையினது இருப்பானது அமெரிக்க வல்லரசின் உதவிகளிலேயே தங்கியிருந்தது. அன்றைய சோவியத் யூனியன் மிகப்பலமுடனிருந்ததுடன் அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்தது. பனிப்போர் காலம் தொட்டு சோவியத்யூனியனும் இந்தியாவும் ஒன்றுபட்டு களமிறங்கிய காலம் வரை இலங்கை மீது அமெரிக்காவின் பார்வை மிக மிக அவசியமானதொன்றாகவே தென்பட்டது.

இவ்வாறு அமெரிக்காவின் பார்வையில் இலங்கை வேண்டப்பட்ட ஒரு நாடாக கருதப்பட்டமை அது இந்து சமுத்திரத்தின் கேந்திர மையத்தில் அமைந்திருந்ததனால் ஆகும். இவ்வாறு இலங்கையானது இந்து சமுத்திர மையத் தில் அமைந்திருப்பதனால் ஆசியா, மற்றும், அரபு பிராந்தியங்களில் அமெரிக்கா ஆதிக் கம் செலுத்துவதற்கு பெரிதும் உறுதுணை யாயிருந்தது.

அன்று ஆட்சியிலிருந்த ஜே.ஆர், இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று பறை அடித்தக்கூறியது இன்றும் நம் நினைவுகளை விட்டுக்கலையவில்லை. இவ்வாறு அவர் கூறியதற்கு ஒரே காரணம் யாதெனில் இலங்கை முற்று முழுதாக அமெரிக்காவின் பிடியில் வீழ்ந்திருந்தமையே.

ஆனாலும் ஆசியப்பிராந்தியத்தின் அன்றைய வல்லரசுகளாக வளர்ச்சியடைந்திருந்த சீனா, இந்தியா போன்ற நாடுகளின் வேகமான வளர்ச்சியானது அமெரிக்காவை அன்று அச்சத்துடனேயே வைத்திருந்ததை மறந்து விடவும், மறுத்து விடவும் முடியாது.

இலங்கையின் இயற்கைத்துறைமுகமாய் அமைந்திருக்கும் திருகோணமலை துறைமுகமே அமெரிக்காவை இலங்கையின் பால் வெகுவான கழுகுப்பார்வைக்கு ஆளாக்கியிருந்தது.

மேற்கூறப்பட்ட காரணங்களே இலங்கை மீது அமெரிக்காவின் மித மிஞ்சிய அக்கறைக்கு காரணமான விடயமாகும். இவ்விவகாரம் தொடர்பாக அமெரிக்காவின் கபடத்தனமான சிந்தனை யாதெனில் இந்த வசதி வாய்ப்புக்களை தாங்கள் பெறவேண்டும் என்பதுடன் வேறு எத்தரப்பும் இவ்வாய்ப்புக்களை பெற்று விடக் கூடாது என்பதுமாகும்.


இக்காலப்பகுதியில் நடைபெற்ற காரியம் என்னவெனில் அமெரிக்காவின் மாயையினால் கட்டுப்பட்ட இலங்கையானது அமெரிக்காவுக்கு இசைந்து கொடுத்தும் செயற்பட்டது. இதனை சாதகமாக்கிக்கொண்ட அமெரிக்கா இலங்கையின் தேவைகளை கிரமமாக நிறைவேற்றியும் கொடுத்து வந்தது.

அமெரிககாவானது இலங்கையுடன் இராணுவத்தொடர்பு கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் அவை திரை மறைவில் இருந்து வந்த போதிலும், நாளடைவில் அனைத்து இரகசிய நடவடிக்கைகளும் வெளித்தெரியவே செய்தன.

அமெரிக்கா இலங்கைக்கு இராணுவ ரீதியாக உதவி செய்து வருவது பற்றி 1980 ம் ஆண்டு அமெரிகாவின் காங்கிரஸ் பகிரங்கப்படுத்தியது.

அவ்வாறு அமெரிக்காவானது இலங்கைக்கு வழங்கும் உதவிகள் அந்நாடு தனது இராணுவத்திறனை காத்துக்கொள்வதற்காகவானதென்றும், அவ்வாறு வழங்கப்படுகின்ற உதவிகள் மூலம் குறிப்பிட்ட அந்நாடு இராணுவ ரீதியாக பலப்பட்டு விடுமேயாகில் வேறு எந்தவொரு வல்லரசையும் அந்நாடு எதிர்பார்க்கவேண்டிய நிலை உருவாகாது என்றும் அப்படி அவைகள் வேறு நாடுகளை எதிபாராது தனித்து நிற்பின் அவை தமக்குத்தான் சாதகமானது என்றும் தெரிவித்திருந்தது.

1980 ஆம் ஆண்டு வெளியான 'மிலிடெரி போஸ்டர்' என்ற பத்திரிகையில் அமெரிக்காவின் கடற்படைத்தளபதி சீ.ஜோன்ஸ் கருத்துக்கூறுகயில், அமெரிக்காவுக்கு வாய்ப்பான



கடற்படைத்தள வசதிகளுள் திருகோண மலை துறைமுகம் ஒன்று என்றும் கூறியுள்ளார்.

1881 ஆம் ஆண்டு இலங்கை வொய்ஸ் ஒப் அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையானது மேலும் விஸ்தரிக் கப்பட்டது என்று கூறுவதையும் விட நாளடைவில் மேலும் வலுவூட்டப்பட்டது என்று கூறுவதே சாலப்பொருத்தமானது. அதனைத் தொடர்ந்து நாத்தாண்டியா விலுள்ள 800 ஏக்கர் நிலப்பரப்பிலும் 200 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இரணுவில நிலப் பரப்பிலும் வாழ்ந்த மக்கள் பலவந்த மாகவே அங்கிருந்து வெளியேற்றப்பட்டு நிலம் 18.01.1985 இல் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பகுதியில் அமெரிக்கா நிலை கொண்டு அங்கு அதிசக்தி வாய்ந்த டிரான்ஸ்போமரை நிறுவியது. இவ் டிரான்ஸ்போமரின் துணை கொண்டு செயற் கைக்கோளுடன் தொடர்பை ஏற்படுத்தவும், நீர்மூழ்கிக்கப்பல்களுடனும் குறைந்த அதிர்வலைகளுடன் தொடர்பு கொள்ளும் வசதிகளுடன் அத்தொடர்பு வசதிகளை எதிரிகள் ஒட்டுக்கேட்க முடியாத அளவுக் கும், எதிரிகளின் தொடர்புகளை குழப்பி விடவும், அல்லது ஒட்டுக்கேட்கக்கூடிய வசதிகளும் கொண்டு இந்நிலையம் அமைக் கப்பட்டது அமெரிக்காவின் தந்திரமான முயற்சியாகும்.

1983 இல் ஏற்பட்ட ஜுலைக்கலவரம் காரணமாக இலங்கைக்கு உதவி வந்த நாடுகள் தமது உதவும் கரங்களை நிறுத் திக்கொண்டன. இவ்வாறு ஏனைய நாடு களின் உதவிகள் இலங்கைக்கு கிடைக் கப்பெறாததை அமெரிக்கா சாதகமாக்கிக் கொண்டு தனது சகாக்களான இஸ்ரேல், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தானின் மூலமாக வும் நேரடியாகவும் இலங்கைக்கு உதவி வந்தது. அவ்வேளையில் 01.10.1983 அன்று அமெரிக்காவின் பாதுகாப்பமைச்சர் காஸ்பர் வெயின்போர்க் இலங்கைக்கு அனுப்பப்பட்டு, இலங்கைக்கு வேண்டிய ஆயுத தள பாடங்களை தாங்கள் வழங்குவதற்கு தயா ராக உள்ளனர் என்ற செய்தியும் தெரிவிக் கப்பட்டது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயத்தை தொடர்ந்து இரா ணுவ ஜெனரல் வோர்ணன் வால்டர் இலங் கைக்கு விஜயம் மேற்கொண்டார். இவரு டைய இந்த வருகையின்போது இலங் கைக்கும் அமெரிக்காவுக்கு மிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றும் பிரகடனப் படுத்தப்பட்டது. இவ் ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டதன் உள்நோக்கம் என்னவெனில்: தமிழ் மக்களுக்கு சார்பாக இந்தியா தனது இராணுவத்தை அனுப்பி விடும் என ஜே.ஆர். ஜயவர்த்தன நினைத்ததனால் இதனைத்த தடுக்கும் நோக்குடனேயே இவ்வொப்பந்தம் செய்யப்பட்டது.

அதனை அடுத்து 26.10.1984 இல் மத்திய கிழக்கு ஆசியா தொடர்பான விட யங்களுக்கான வெளிவிவகார அமைச் சுக்குழு இலங்கைக்கு வருகை தந்து தாங்கள் மேலும் பல உதவிகளைத்தர தயாராக உள்ளதாக தெரிவித்தது.

இவர்களின் வருகையும் உடன்பாடு களும் போதாது என்று கருதிய ஜே.ஆர்., லலித் அத்துலத் முதலி ஆகியோர் அமெரிக்கா சென்று மேலும் பல இரகசிய ஒப்பந்தங்களை திரை மறைவில் செய்த தாகவும் தகவல்கள் வெளிவந்தன. ஆச்ச ரியப்படத்தக்க விடயம் என்னவெனில் ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை காலம் வரை மாறி மாறி வந்த இலங்கை அரசுகள் அமெரிக்காவுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளன என்பதே.

3.0.1984, 12.09.1984 ல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குவிக்கப்பட்ட ஆயு தத்தளபாடங்களை அமெரிக்காவே இலங் கைக்கு அனுப்பிவைத்துதவியது. இதில் குறிப்பிடத்தக்க விடயமாவது, போர்த் துக்கேய விமானத்தின் மூலம் அனுப் பப்பட்ட ஆயுதங்கள் 08.02.1985 இல் இந்தி யாவின் திருவனந்தபுரத்தில் தடுத்து நிறுத் தப்பட்டதும் பின்னர் விடுவிக்கப்பட்டதும் மறைக்கமுடியாத உண்மையாகும்.

1984 இல் இஸ்ரேலிடமிருந்து இரு பீரங்கிப்படகுகளையும் இலங்கை கொள்வனவு செய்தது. அதனைத் தொடர்ந்து 1 1/2 கோடி பெறுமதி யான 12 பெல்ஜெட் றேஞ்சர் உலங்கு வானூர்திகளையும் இலங்கை பெற்றுக்கொண்டது. இவைகள் அமெரிக்காவின் தயாரிப்பில் உரு வானது என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே. இவைகள் இந்தியப் படைகளின் இலங்கை வருகைக்கு முன் நிகழ்ந்தவை என்பது கவ னத்தில் கொள்ளப்பட வேண்டியது.

ஆனால் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுள்ள தற்போதைய நிலைப்பாடு வேறாகும். இலங்கைக்கு உதவி வழங்கு கின்றோம் என்ற போர்வையில் அமெரிக் காவின் 'கிரீன் பரட்ஸ்' பயிற்சியாளர்கள் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அழிக்கின்றமை, அமெரிக்க வல்லுனர் கள் இலங்கையின் வடபகுதிக்கு சென்று பலவேறு ஆலோசனை கூறியமை, இவை தவிர ஆயுதங்கள், மல்டி பரல் கள், கப்பல்கள், விமானங்கள் என அவர் களின் நடவடிக்கைகள் காணப்படு கின்றன.

இலங்கை அரசு எதனைக்கேட் பினும் அதனைத்தரக்கூடிய திராணி அமெரிக்காவிடம் காணப்படுகின்றது. என்பது இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆனபோதும் இரு விடயங் களில் அமெரிக்கா பின் தள்ளி நிற்கக் கூடும். முதலாவது தியாகோ காஷியா எனும் தீவில் அமெரிக்கா அமைத்துள்ள தளம், இந்து சமுத்திரம் மாத்திரமன்று உலகம் முழுதையுமே கண்காணிக்க போதுமாயுள்ளதாலும், அமெரிக்காவின் ஏவுகணைகள் மிக சக்தி வாய்ந்ததாக இருப்பதாலும் திருகோணமலை துறை முகத்தின் முக்கியத்துவம் அமெரிக்

குணறுபேஸ்

காவைப பொறுத்தவரை குறைந்ததா கவே காணப்படு கின்றது.


இரண்டாவது, இஸ்லாமியத் தீவிர வாதத்திற்கு ஈடு கொடுக்க முடியாது ஆடிப்போன அமெரிக்கா நூற்றுக்கணக் கான தற்கொலைப்போராளிகளைக் கொண்ட விடுதலைப்புலிகளை எந்த நெஞ்சு அழுத்தத்துடன் பகைத்துக் கொள்ளும் என்பதும் புரியாத பதிராகவே உள்ளது.

எது எவ்வாறாயினும் நடக்க வேண்டிய காரியங்கள் நடக்கட்டும் வானம் இடிந்து விழும் நேரத்தில் இடிந்து விழட்டும் என தமிழ்த்தேசியத் தலைவர் கூறும் கூற்றுத் தான் நாளைய உலகில் உண்மையாகி விடும் என்பது போல் தான் சமிக்ஞைகள் தெரிகின்றன.



# 9.0/2004 – பூகம்பம்





கிறிஸ்மஸ் தினத்திற்கு மறுதினம் 26.12.2004 அன்று இந்துமகா சமுத்திரத்தின் இந்தோனேசியாவுக்கு சமீபமாக சுமாத்ரா தீவருகே ஞாயிற்றுக்கிமை காலை 6.58மணிக்கு மிகப்பெரிய பூகம்பம் வெடித்ததில் வரலாறு காணாத பேரழிவு நிகழ்ந்துள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் நிகழ்ந்த அனர்த்தங்களில் 12,000 த்திற்குமதிகமான மனித உயிர்கள் பலியாகியுள்ளன் என்ற செய்தி குருதியை உறைய வைப்பதாகவுள்ளது. இலங்கையில் மட்டும் 5000 த்திற்கும் அதிகமானவர்களை இந்த அனர்த்தம் பலி கொண்டுள்ளது. இத்தனையும் ஒரு சில மணிநேரங்களுக்குள்ளேயே நடந்து முடிந்திருக்கின்றன. ஏற்கனவே நீண்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை தற்காலிக தீர்வையேனும் காண முடியாமல் உள்நாட்டிலேயே துன்ப துயரங்களுடன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த வடக்கு,கிழக்கு மக்கள் மீதே இந்த அனர்த்தத்தின் பெருஞ்சுமை வீழ்ந்திருக்கின்றது.

வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆரம்ப புள்ளி விவரங்களின்படி மாலைதீவின் மூன்றில் இரண்டு பகுதி நீரில் மூழ்கியிருப்பதாக அறியப்பட்டுள்ளது. இதனால் கணக்கெடுப்புக்களே இன்னும் நடத்தப்படாத நிலை. இந்தியாவில் 3,000 வரை என்றும், இந்தோனேஷியாவிலும் இலங்கையின் அளவாக, அதாவது 5,000 பேர் வரையிலென்றும் விவரங்கள் கிடைத்துள்ளன. இவற்றை விட மியன்மார், தாய்லாந்து, மலேசியா, பங்களாதேஷ் நாடுகளிலும் கணிசமானளவு சேதங்கள் நிகழ்ந்துள்ளன.

இலங்கையின் கிழக்கு மாகாணம் மிக நன்றாகவே பாதிக்கப்பட்டிருக்கின்றது. மூதூர் பகுதி பெரும் அழிவைக்கண்டிருக்கின்றது. 550 பேர் பலி. அம்பாறை மாவட்டத்தில் சுமார் 2000 பேர்களும், மட்டக்களப்பில் 2000 பேர் வரையிலானவர்களும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதிகளில் சுமார் 2000 பேர்கள் பலி கொள்ளப்பட்டிருப்பதாகவும், முல்லைத்தீவில் 1000 பேர்களும் என்ற வகையில் பட்டியல் நீண்டு செல்கிறது.

பாதிப்படைந்த காட்சிகள்



இறந்த உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. தேசியப்பேரழிவு என்று அரசாங்கம் இதனை பிரகடனம் செய்திருக்கின்றது. முப்படைகளும் மீட்புப்பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன. ரஷ்யா, பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவித உதவிகளையும் செய்து கொண்டிருக்கின்றன. பலியானவர்களில் கரையோரங்களில் வாழ்ந்தவர்களே அநேகமானவர்கள். முக்கியமாக சிறு வயதினர், குழந்தைகள் பெருமளவில் பலியாகியுள்ளனர்.

கடல் திடீரென கொந்தளித்து கடலோரமாகவுள்ள தரைப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டது. கடற்கரையோர வீடுகள் அடித்துச்செல்லப்பட்டன. பல கிராமங்களே நீரில் மூழ்கின. முல்லைத்தீவின் கள்ளப்பாடு, செல்வபுரம், சின்னத்தன்காடு, செம்மலை, அலம்பில் கிராமங்கள் ஒன்றில் முற்றாக அழிந்துள்ளன. இல்லை பெரும் அழிவைக் கண்டிருக்கின்றன.

வைத்தியசாலைகள் இறந்த உடல்களால் நிரம்பி வழிகின்றன. இலட்சக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர். தென்னிலங்கையின் காலி, மாத்தறை, கொழும்பின் சில பகுதிகளும் பேரழிவுக்குள்ளாகியுள்ளன.

சர்வதேச, மனிதாபிமான அமைப்புக்களின் உதவிகளை இலங்கையரசும், தமிழீழ நிர்வாகத்தினரும் கோரிப்பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கடல் கொந்தளிப்பு அனர்த்தம் மேலும் தொடருமா? என்பது பற்றிய கவலை மக்கள் மனங்களில் குடி கொண்டிருக்கிறது. மொத்தம் 20 இலட்சம் பேர்களாவது பாதிக்கப்பட்டுள்ளனர்.கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த இரண்டு இராணுவ முகாம்களும் முற்றாக அழியுமளவுக்கு இலங்கையையும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களையும் இந்த இயற்கையின் சீற்றம் வஞ்சித்துள்ளது. மொத்தத்தில் இலங்கை ஒரு மரண வீடு போல் காட்சியளிக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு வருடங்கள் பல ஆகவேண்டியிருக்கும்.

பாதிப்புற்ற மக்களுக்கு ஈர நெஞ்சம் கொண்ட புலம் பெயர் மக்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்குவார்கள் என்று தமிழ் உலகம் எதிர்பார்க்கின்றது.





# பின்தங்கிய நிலையில் மலையகத்தவரின் பொருளாதார வளர்ச்சி; காரணம் என்ன?

– சத்யநிதி



எந்தவொரு சமூகமும் தலை நிமிர்ந்து சொந்தக்காலில் நிற்பதற்கு சுயபொருளாதார பின்பலம் மிகவும் அவசியம். இலங்கையின் பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த இந்திய வம்சாவளித் தமிழர் சமூகம் சகல துறைகளிலும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றது என்றால், அதற்குக்காரணம், இம்மக்களின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான எந்தவொரு குறுகிய கால மற்றும் நீண்ட கால செயல் திட்டங்கள் எவையுமே மலையகத்தில் நடைமுறையில் இல்லாதிருப்பதேயாகும்.

இலங்கைக்கு மிகக்குறைவான கூலி பெறும் தொழிலாளர்களாக தென்னிந்தியாவில் இருந்து இந்தியத்தமிழர்கள் அழைத்து வரப்பட்ட அதே காலப்பகுதியில் தான் தென்னாபிரிக்கா, மொரிஷியஸ், பிஜி, மலேசியா போன்ற நாடுகளுக்கும் இந்தியர்கள் கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நாடுகளில் எல்லாம் இந்த இந்திய வம்சாவளியினர் 'கூலி' என்ற நிலையில் இருந்து விடுபட்டு இன்று சுதந்திரமாகவும், ஏனைய சமூகத்தினரைப் போலவும் வாழ்ந்து வருகின்றனர். இப்போதும் இறப்பர், கரும்பு தோட்டங்களில் பணியாற்றுபவர்கள் இருந்தாலும், இலங்கை பெருந்தோட்டங்களில் காணப்படும் பின் தங்கிய சூழலில் அவர்கள் இல்லை.

ஆனால் இவர்கள் தமது மொழியையும் கலாசாரத்தையும் பெரும்பாலும் மறந்து விட்டனர் என்பது உண்மை. இலங்கையில் இந்நிலை கிடையாது. இங்கே வடக்கு, கிழக்கு பகுதி ஒரு தமிழ்ப்பிரதேசமாக இருப்பதாலும், தமிழகம் நாட்டுக்கு அருகே இருப்பதாலும் மலையகத் தமிழர்கள் தமது மொழியையும், கலாசாரத்தையும் மதத்தையும் பேணி வருவதில் கரிசனையுடன் இருக்கின்றார்கள். இதேவேளை மலையகத்தமிழர்கள் பின் தங்கிய நிலையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருப்பதற்கும் கூட இது ஒரு காரணமாக இருக்கலாம்.

1977 பொதுத் தேர்தலின் பின்னர் முதல் தடவையாக இந்திய வம்சாவளித்தமிழர் ஒருவர் கபினட் அந்தஸ்து பெற்ற அமைச்சராக பொறுப்பேற்றார். திம்பு பேச்சுவார்த்தையின் பயனாகவும் அமைச்சர் தொண்டமான் முயற்சிகள் காரணமாகவும் பறிக்கப்பட்ட குடியுரிமையும், வாக்குரிமையும் மீண்டும் இந்திய வம்சாவளியினருக்கு வழங்கப்பட்டது. ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தைக்கட்டி எழுப்புவதற்கான மூலக்கூறுகள் இவையானாலும் மலையக பொருளாதார வளர்ச்சிவேகம் நத்தை வேகமாகவே இருக்கின்றது. நத்தை கூட ஸ்திரமான ஒரு வேகத்தில் முன்னேறி நகர்ந்து கொண்டிருக்கும். மலையக வளர்ச்சி இந்த வேகத்தில்கூட இல்லை என்பதே உண்மை.

சிறுபான்மை சமூகங்களின் உண்மையான வளர்ச்சிக்கான வளங்களை எந்தவொரு இலங்கை அரசும் தாமாகவே வழங்கியதாக வரலாறு இல்லை. எனவே, மலையகத்தின் கல்வி வளர்ச்சியும் மெதுவாகவே நிகழ்ந்து வருகின்றது. இதே சமயம் மலையக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்க வேண்டுமென்பதால் நியமனம் செய்யப்பட்ட மலையக ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அக்கறையுடன் செயல்படாமையும் மலையகக் கல்வி வளர்ச்சியின் மந்த நிலைக்கு ஒரு பிரதான காரணம் எனலாம். மலையகத்தின் ஒரே உயர்கல்வி நிறுவனமான பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியும், ஒரே தொழில் கல்வி நிறுவனமான தொண்டமான் தொழில்நுட்ப கல்லூரியும் அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் செயல்படும் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் கிடையாது. பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி கடந்த ஒரு வருட காலமாக விக்கினமின்றி இயங்கிவருகின்ற போதிலும் அக்கல்லூரியின் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டு விஸ்தரிக்கப்படுவதற்கான அறிகுறிகளைக் காண முடியவில்லை.

தொண்டமான் தொழில் பயிற்சிக்கல்லூரி நோர்வேயின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள பிரமாண்டமான ஒரு கல்லூரி. பல்வேறு தொழில் கல்விக்கான வசதிகள் இங்கே உள்ளன. ஆனால், தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெ.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணிக்கும் இடையிலான நானா,நீயா என்ற கட்சி அரசியல் பூசல்கள் காரணமாக இக்கல்லூரி சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுக் கிடந்தது. முதல் கட்டமாகவும் இரண்டாம் கட்டமாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தமது படிப்பை முடித்துக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டன. தற்போது தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கும் இக்கல்லூரி அமைதியாக இயங்கி வந்தாலும், இதன் சில பகுதிகளே இயங்கி வருகின்றன.

மொத்தத்தில் இக்கல்லூரி, எதிர்பார்ப்புகளை ஈடு செய்யவில்லை. அல்லது ஈடு செய்ய அனுமதிக்கப்படவில்லை.

மேலும் மலையக பாடசாலைகளில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதைத்தீர்ப்பது தொடர்பான உறுதி மொழிகள்தான் வழங்கப்பட்டு வந்துள்ளனவே தவிர உருப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

அடுத்த பெரிய முட்டுக்கட்டையாக பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையைக் குறிப்பிடலாம். மலையகத்தில் போதிய பட்டதாரிகள் இல்லாததும் வடக்கு கிழக்கில் இருந்து பட்டதாரி ஆசிரியர்களை மலையகத்துக்கு அழைத்து வருவதிலும் சிக்கல்கள் இருப்பதால் க.பொ.த உயர்தர வகுப்புக்களை நடத்துவதில் சிரமங்கள் உள்ளன. மலையக மாணவர்கள், போதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாததால் கணித, விஞ்ஞான. இரசாயன மற்றும் ஆங்கில பாடங்களில் பின் தங்கியவர்களாகக் காணப்படுகின்றனர்.

மலையக சமூகம் பொருளாதார வளர்ச்சி குன்றி நிற்பதற்கு இவை பிரதான காரணங்களாக இருக்கின்ற அதே சமயம் தோட்டச் சிறை வாழ்வில் இருந்து இம்மக்கள் விடுபடுவதற்கான வாய்ப்புகளும் கானல் நீராகிக் கொண்டிருக்கின்றன.

இப்பின்னணியில். இம்மோசமான சூழ்நிலையில் இருந்து மலையக சமூகத்தை மீட்பதற்கான திட்டங்களை மலையகக் கட்சிகள் கைவசம் கொண்டுள்ளனவா என்றால், அப்படியான எந்தவொரு சிந்தனையும் அவற்றிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசியல் கட்சிகளை எடுத்துக்கொண்டால் அவற்றுக்கு மாத வருவாய் கிடையாது. இதே சமயம் ஒவ்வொரு மாதமும் பல லட்சம் ரூபாவை தொழிலாளர்களிடமிருந்து தொழிற்சங்க சந்தாப்பணமாகப் பெற்றுக்கொள்ளும் அரசியல் கட்சிகளாக மலையக அரசியல் கட்சிகள் மட்டுமே விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் ஏற்படக்கூடிய கல்வி விழிப்புணர்வும் வளர்ச்சியும் மற்றும் பொருளாதார வளமும் தமது இருப்பையும் வருமானத்தையும் கேள்விக்குறியாக்கி விடும் என்பதால் மலையகத் தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் மலையகம் இப்படியே இருப்பதையே விரும்புகின்றன என்ற பரவலான சந்தேகங்கள் உள்ளன.

இவ்விடயத்தில் நம்பிக்கையூட்டக்கூடிய எந்தவொரு பதிலையும் அல்லது மறுப்பையும் இத்தொழிற் சங்கத்தலைமைகள் வெளியிட்டதாக இல்லை. அரசியலே பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் பரிதாபநிலை.

# பொருளாதாரத்தில் முன்னணி வகிக்கும் மொரீஷியஸ்

ஆபிரிக்காவின் தென்கிழக்கில் சுமார் 2400 கிலோ மீற்றர் தொலைவில் இந்து சமுத்திரத்தில் மொரீஷியஸ் தீவு இருக்கின்றது. 720 சதுர மைல்கள் (1865 சதுர கிலோ மீற்றர்) பரப்புடைய இது பவளக்கற் பாறைகளால் சூழப்பட்ட தீவாகும். இலங்கைத்தீவிலும் பார்க்க 35 மடங்கு சிறிய தீவு மொரீஷியஸ். இதன் மத்தியில் எரிமலை எழுச்சிக்கான ஏது நிலைகள் உள்ள மலைகளினால் சூழப்பட்ட பீடபூமியொன்றுள்ளது. இது ஒரு வெப்பவலய நாடு. நல்ல மழை வீழ்ச்சியைப்பெறும் நாடாகும்.

இலங்கையை போர்த்துக்கேயர் ஆக்கிரமித்த காலப்பகுதியில் இந்த மொரீஷியஸ் தீவும் அவர்களின் வருகைக்கும் புழக்கத்திற்கும் உள்ளாகியிருந்தது. பின்னர் 1598 இல் ஒல்லாந்தர் இதனை ஆக்கிரமித்து தமது இளவரசரின் நினைவாக,



மொரீஷியஸ் என்று பெயர் சூட்டி வைத்தனர். அவர்களே அங்கு கரும்புப்பயிர் செய்கையையும், ஜாவா ரக மான்களையும் அறிமுகம் செய்து வைத்தனர். இதனையும் தொடர்ந்து 1715 இல் பிரான்சியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மொரீஷியஸ் கடைசியாக 1810 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அவர்களிடமிருந்தே இறுதியில் 1968 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி முழுமையான சுதந்திரத்தையும் பெற்றிருந்தது.

மொரீஷியஸ் அடர்த்தியான குடிமக்கள் நிறைந்த தீவு. அங்கு பன்னிரண்டு இலட்சத்திற்குமதிகமான மக்கள் வாழ்கின்றனர். பல்வேறு இன, மத, பிரிவினர் அங்கு வாழ்கின்றனர். மூன்றில் இரண்டு பங்கினர் இந்திய வம்சாவளியினர். அதற்கடுத்ததாக குடிமக்களில் காற்பங்கினராக கிரியோல் (Creole) மக்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பிரான்ஸ் ஆபிரிக்க கலப்பினத்தவராவார். சீனர்கள், பிரான்சியர் ஆகியோரும் உள்ளனர். அரச கரும மொழி ஆங்கிலம். வேறு மொழிகளும் பேசப்படுகின்றன. மத ரீதியாக இந்துக்கள் 52 சதவீதமாகவும் கிறிஸ்தவர்கள் 30 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 16 சதவீதமாகவும் உள்ளனர். இதன் தலைநகரம் போட் லூயிஸ்.

1968 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் மொரீஷியஸ் பெரும் பொருளாதார அபிவிருத்திகளை கண்டு வருகின்றது. விவசாய உற்பத்திகளின் மூலமான குறைந்த வருமானத்தை கொண்டிருந்த மொரீஷியஸ் தொழிற்துறை, நிதித்துறை, உல்லாசப்பிரயாணத்துறை, ஆகியவற்றை விருத்தி செய்து ஒரு நடுத்தர பொருளாதார வளர்ச்சியை இன்று அடைந்திருக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் 5% - 6% அளவிலான பொருளாதார வளர்ச்சியை அது தவறாது அடைந்து வருகின்றது.

அதன் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அது நன்கு பெருக்கிக் கொண்டுள்ளதுடன் வருவாயை மக்கள் மத்தியில் நிறைவாக பகிர்ந்து கொள்ளவும், சமூக நலத்திட்டங்களில் முன்னேற்றம் அடையவும் இடமளித்து வந்துள்ளது. அதன் ஏற்றுமதியில் 25 சதவீதம் கரும்பு ஆகும். வங்கித் துறையில் அதன் முதலீடு ஒரு பில்லியன் டொலர்களாகும். யூரோ நாணயமொன்றின் பெறுமதி மொரீஷியஸ் ரூபாவில் 33.80 வரையிலுள்ளது. வெளிநாடுகளின் மூலதனங்களையும் மொரீஷியஸ் நன்றாக கவர்ந்துள்ளது. புடைவைத் தொழில் துறையிலும் அது பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. தேயிலை உணவு தானிய உற்பத்தி மற்றும் கடலுணவு உற்பத்தி ஆகிய வற்றிலும் மிகுந்த தன்னிறைவை அது




கண்டுள்ளது. அண்மைக்காலத்தில் அது சீனியுற்பத்தியில் பெருமளவுக்கு தங்கியிராத வகையில் பொருளாதார துறையில் மாற்றங்களை செய்துள்ளது. சுதந்திர வர்த்தக்துறையை விரிவாக்கிக் கொண்டு பல தரப்பட்ட தொழிற்துறைகளையும் அரவணைத்து வருகின்றது. அதனது வர்த்தகம் பெருமளவுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனும், அமெரிக்காவுடனுமேயுள்ளது.

சர்வன்

1835 இல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அடிமை முறையை தடை செய்தததையடுத்து மடகஸ்கார், செனகல், மொசாம்பிக் ஆகிய இடங்களிலிருந்து அடிமைத் தொழிலாளர்கள் தருவிக்கப்படுவது நிறுத்தப்பட்டது.

இதனால் குறைந்த ஊதியத்துடன் வேலைக்கமர்த்தப்படக்கூடிய இந்தியத் தொழிலாளர்கள் அங்கு வரவழைக்கப்பட்டு கரும்புத்தோட்டங்களில் அமர்த்தப்பட்டனர். இவர்களே காலப்போக்கில் குடியுரிமை பெற்றவர்களாக மொரீஷியஸில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அங்கு இலவச கல்வி முறை அமுலில் இருக்கின்றது.

மொரீஷியஸ் பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறையிலுள்ள நாடு. அரசுத்



தலைவர் ஜனாதிபதியாவார். பாராளுமன்ற தேர்தல்கள் ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறுகின்றது. 66 எம்.பிக்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். சுதந்திரம் பெற்ற பின்னர் அதன் முதலாவது பிரதமராக சேர்.சிவசேகர் ராம்கூலம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1947 இன் அரசியல் யாப்பின் பிரகாரம் மொரீஷியஸ் மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் அரசியல் அதிகாரம் இந்தியர்களின் கைகளில் கிடைத்தது. இந்தியர்கள் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டனர்.

ஆனால் கிரியோல் மக்களும், பிரான் சுக்காரர்களும் அவ்வாறு விரும்பவில்லை. பிரிட்டனுடனான தமது உறவுகளை வைத்துக்கொள்ளவே அவர்கள் விரும்பினர். இந்தியர்கள் பெரும்பான்மையினராக இருந்ததனால் இந்தியாவின் ஆதிக்கம் ஏற்பட்டு விடலாம் என்று அச்சமடைந்தனர்.

1992 இல் மொரீஷியஸ் ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த தேர்தலில் 1995 இல் முன்னாள் பிரதமரின் மகனான நவின் சந்திர ராம்கூலம் பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். பின்னர் 2003 இல் கூட்டணிக்கட்சியொன்றின் சார்பில் போல் பெரென்சா என்பவர் பிரதமரானார்.இவரே இந்தியரல்லாத முதலாவது பிரதமராவார்.

ஆபிரிக்காவில் மிகவும் பலம் வாய்ந்த பொருளாதாரத்தை கொண்டது மொரீஷியஸ். 2001 இல் இதன் மொத்த தேசிய உற்பத்தி 4.5 பில்லியன் டொலர்கள். தனிநபர் வருமானம் 3,800 டொலர்கள். 173 நாடுகளை ஒப்பிட்டு மனித அபிவிருத்தி சுட்டெண் கணிப்பிட்டபோது, நடுத்தர பொருளாதாரநாடுகள் வரிசையில் ஆபிரிக்காவில் இரண்டாவதாகவும் உலகில் 67 ஆவதாகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் 40 வதாகவும் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக சென்மதி நிலுவையை மிகையாக கொண்டிருக்கின்றது.

***

## மொரீஷியஸ் பற்றிய புள்ளி விபரங்கள்

| | | |
|---|---|---|
| பரப்பளவு | - | 2040 ச.கி.மீ. |
| நாணயம் | - | மொரீஷியஸ் ரூபாய் |
| தலை நகரம் | - | போட் லூயிஸ் |
| பிறப்பு விகிதம் | - | 16.4/1000 |
| இறப்பு விகிதம் | - | 7.0/1000 |
| குடிமக்கள் | - | 1,220,481(ஜூலாய் 2004) |
| இன விகிதாசாரம் | - | இந்தியர் 68 % |
| | - | கிரியோல் 27 % |
| | - | சீனர் 2 % |
| மத விகிதாசாரம் | - | இந்து 52 % |
| | - | கிறிஸ்தவம் 28.3 % |
| | - | இஸ்லாம் 16.6 % |
| சராசரி வயது | - | ஆண்கள் 68.9 வருடம் |
| | - | பெண்கள் 73.95 வருடம் |
| நிர்வாக மாவட்டங்கள் | - | ஆறு. |

1970-1996 ஆம் ஆண்டு வரையான நாட்டின் மொத்தத்தேசிய உற்பத்தி



# இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பித்தல்

அவர்களின் பிள்ளைகள் தமிழர்கள் கூடுதலாக வாழும் நகரங்களில் நடத்தப்படும் தமிழ் வகுப்புகளுக்குச் சென்று தமிழ் மொழியைப்படிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

விக்ரோறிய மாநிலத்தில் வார இறுதி நாட்களில் 13 தமிழ்க்கல்வி நிலையங்களில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. இப்பள்ளிகளில் 600 மாணவர்கள் வரை தமிழ்மொழியைக் கற்கின்றனர். ஆனால் குடித்தொகை மதிப்பீட்டிற்கு அமைய 1,800க்கும் அதிகமான பிள்ளைகள் விக்ரோரிய மாநிலத்தில் தமிழைக்கற்க வேண்டும். எனவே மூன்றிலொரு பங்குத் தொகையினரே இம்மாநிலத்திலும் தமிழைக்கற்கின்றனர். நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தைப்போலவே விக்ரோறிய மாநிலமும் பெரியது. பரந்த இம்மாநிலத்திலும் தொழில் காரணமாகத் தூரமான இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களின் பிள்ளைகளும் தமிழர்கள் கூடுதலாக வாழும் நகரங்களிலுள்ள தமிழ்ப் பள்ளிகளுக்கு சென்று தமிழ் மொழியைப்படிக்க முடியாதவர்களாக இருககின்றனர்.

அவுஸ்திரேலியத்தலைநகர் மண்டலத்தில் குறைந்த எண்ணிக்கையான தமிழர்களே வாழ்கின்றனர். இங்கு மூன்று தமிழ்க்கல்வி நிலையங்கள் தமிழ்மொழியைக் கற்பிக்கின்றன. ஏறக்குறைய 200 பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்கின்றனர். குயின்லாந்தில் நடைபெறும் தமிழ்வகுப்பில் மிகக்குறைந்த தொகையான பிள்ளைகளே தமிழ் படிக்கின்றனர். ஏனைய மாநிலங்களிலும் மண்டலங்களிலும் குறைந்த எண்ணிக்கையான தமிழர்களே வாழ்கின்றனர். தமிழ்மொழியைக்கற்கும் பிள்ளைகளும் குறைவாகவே இருக்கின்றனர். தமிழ் வகுப்புகளும் ஒழுங்காக நடைபெறுவதில்லை.

விக்ரோறிய மாநில அரசு தமிழ் மொழியை விக்ரோறியன் கல்விச்சான்றிதழ்த்தேர்வுக்கு ஒரு பாடமாக 1997 ஆம் ஆண்டிலிருந்தும், நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு உயர்வகுப்புச்சான்றிதழுக்கு ஒரு பாடமாக 2001 ஆம் ஆண்டிலிருந்தும் அனுமதித்துள்ளன. விக்ரோறிய மாநிலத்தில் பல மாணவர் கல்விச்சான்றிதழ்த் தேர்வுக்கு தமிழை ஒரு பாடமாக எடுத்துள்ளனர்; நியூ சவுத் வேல்ஸ் மாநிலத் தில் பல மாணவர் தேர்வுக்குத் தயார் செய்து கொண்டிருக்கின்றனர்.

## கற்பித்தல் முறைகள்

அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வி நிலையங்களில் வார இறுதி நாட்களில் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் மட்டும் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. இத் தமிழ்க்கல்வி நிலையங்களைப் பெற்றோர்களே ஒழுங்கு செய்து, அரசாங்கம் அளிக்கும் சிறிய தொகை நிதியுதவியுடன் நடத்துகின்றனர். மொழி கற்பித்தலில் பயிற்சி பெறாத, தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் அனுபவம் இல்லாதவர்களே வகுப்புகளை நடத்துகின்றனர். சில கல்வி நிலையங்களில் பெற்றோர்களே வகுப்புகளை நடத்த வேண்டியும் உள்ளது.

மேலும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஊதியம் எதுவுமின்றிப்பணியாற்றுகின்றனர். 'தமிழ்ப்பணி' என்ற உள்ள விழைவோடு பணியாற்றுகின்றனர். எனவே பல பள்ளிகளில் மரபு முறையான கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. மேலும் ஒழுங்காகவும் அக்கறையாகவும் ஆசிரியர்கள் தமிழ் மொழியைக்கற்பிக்கின்றனரா? பிள்ளைகள் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் தமிழ்மொழியைப் படிக்கின்றனரா? இவை விடைகாண முடியாத வினாக்களாக உள்ளன.

தமிழ் வகுப்புக்களில் மாணவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர்; தமிழில் சிந்திப்பதையும் தமிழில் பேசுவதையும் காண்பது அருமை. சில ஆசிரியர் ஆங்கில மொழி வாயிலாக தமிழைக்கற்பிப்பதையும் காணலாம். சமயம், நடனம், இசை வகுப்புக்களில் மாணவர்கள் தமிழை ஆங்கில எழுத்துக்களில் எழுதிப்படிக்கின்ற அவல நிலையும் உண்டு.

அவுஸ்திரேலியாவில் தமிழ்மொழியைக்கற்பிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முறைகளே, தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மற்றைய நாடுகளிலும் நடைமுறையில் இருக்குமென நம்பகின்றேன். கனடா, பிரித்தானியா, பிஜித்தீவுகள், மொரிசஸ் போன்ற நாடுகளில் நடைபெறும் தமிழ் வகுப்புகள் குறிப்பிடத்தக்கவை. இந்நாடுகளில் தமிழ் மொழியை ஆக்கபூர்வமான முறையில் கற்பிப்பதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் அந்தந்த நாட்டின் அரசாங்கமே தமிழ் கற்பித்தலை நடைமுறைப்படுத்துகின்றது. மொரிசஸ் நாட்டிலும் அரசாங்கம் தமிழ் ஆசிரியர்களை நியமித்துத் தமிழ் கற்பித்தலை ஊக்குவிக்கின்றது. ஏறக்குறைய 250 தமிழ் ஆசிரியர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்பித்தலுக்கு ஏனைய நாடுகளிலும் பார்க்கக் கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் தமிழ் மொழி வாயிலாகப் பிள்ளைகள் கல்வியை கற்கின்றனர். தமிழ் நாட்டிலும் மலேசியாவிலும் முதனிலைப்பள்ளிகளில் மட்டும் தமிழ் மொழி வாயிலாகத் தமிழ்ப் பிள்ளைகள் கல்வியைக் கற்கின்றனர்;



ஆ.கந்தையா

2

சிங்கப்பூரில் தமிழ் மொழி ஒரு பாடமாக உள்ளது. ஆனால் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஏனைய நாடுகளில் அநேகமாக வார இறுதி நாட்களில் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் மட்டும் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. எனவே இலங்கை, தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் தமிழ் மொழி கற்பித்தல் முறை, தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் வேறுபட்டதாக அமைய வேண்டும்.

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் தமிழ் மொழிக்கு அரசு மட்டத்தில் இடம் அளிக்கப்படவில்லை. ஆனால் தமிழ்ப்பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி கற்பித்தலை ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

"நாம் தமிழர்கள்; தமிழைக் கற்றுத் தமிழ் பேசுபவர்களாக வாழ வேண்டும்" என்ற ஆர்வத்தினால் மேற் கொள்ளப்படும் முயற்சி என்றே கூறவேண்டும்.

இப்போது இரண்டாவது மொழியாகத் தமிழைப்படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கச் சில கருத்துக்களைக் கூறலாமென எண்ணுகின்றேன். சிலர் எனது கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். நான் தமிழ் மரபைப்போற்றி வாழ்பவன். ஆனால் தற்காலத்திற்குப்பொருந்தக் கூடியதாக நாம் நமது கருத்துக்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல". தமிழ் வாழ்வதற்காக நாம் இக்கருத்துக்களை நடைமுறைப் படுத்த வேண்டுமெனக் கருதுகின்றேன்.

(தொடரும்.)

# சொக்கனின் மறைவு தமிழ் இனத்திற்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பேரிழப்பு

- அனுதாபச்செய்தியில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம்


சொக்கன்

மூதறிஞர், கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் மறைவுச்செய்தி எம்மீது இடியாகத் தான் இறங்கியது. எம்மண்ணில் முதுபெரும் தமிழறிஞரும், தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கு அளப்பரிய தொண்டாற்றியவரும், தமிழீழ விடுதலையைத்தன் அந்திமத்துக்கிடையில் காண அவாவுற்றிருந்தவரும், எழுத்தாளரும், கவிஞரும், நாடக ஆசிரியருமான சொக்கன் ஐயா காலமானதறிந்து நாங்கள் கலங்கியுள்ளோம். "தமிழ்மொழியின் ஆழ வேரறிந்த மூத்தோனாக எம்முடன் இவர் வாழ்ந்திருந்தார். எம் மொழியின் சீரையும், செம்மையையும், மொழியின் வழுவிலா இலக்கண வகையையும் தெரிந்தும், தெளிந்தும் இருந்த பேரறிஞராக இவர் பிரகாசித்தார்" என விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

இளமை தொட்டு, தள்ளாமை வந்துற்ற முதுமை வரை ஓயாது சிந்தித்தும் எழுதியும் செயற்பட்டு வந்தவர். சிந்திப்பதை நிறுத்தி விட்டார் என்பது எம் தேசத்திற்கும், தமிழினத்திற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பேரிழப்பாகும். இவர் தமிழ் மொழியின் மீது நிலை மாறாத காதலும், தமிழீழ விடுதலை மீது ஆழமான பற்றும் கொண்டிருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையும், எம் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது வழிகாட்டலையும் நெஞ்சார ஏற்றுத்தன் எழுத்திலும் அதனைப் பதிவு செய்தார்.

'சங்கிலியன் தொடக்கம் பிரபாகரன் காலம் வரை' என்ற இவரின் பிரபலமான கட்டுரை மூலம் தன் உள்ளக்கிடக்கையை உலகுக்கு உணர்த்தியிருந்தார். 'ஈழ சேனன்' என்ற புனை பெயரில் எழுதிய சிறுகதைகளில் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் உண்மை நிலையை உணர்த்தினார்.

அரங்குகளில் கூட எந்த அச்சமுமின்றி தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்குத் தன் ஆதரவை வெளிப்படுத்தினார். தூய தமிழ்ப்பழக்கத்தை மீண்டும் வழக்கத்துக்கு கொண்டு வரும் எத்தனிப்புக்கும், கருத்துருவாக்கத்திற்கும் இவர் காட்டிய உற்சாகம் எமக்கு உறுதுணையாக விளங்கியது. உடல் தளர்ந்திருந்த வேளையிற்கூட எமது அழைப்பையேற்று கலை, இலக்கிய அரங்குகளில் கலந்து கொண்டு காத்திரமான பங்களிப்பை நல்கினார்.

எம்மண்ணில் கலை, இலக்கியதுறையிலும், தமிழைச் செம்மையாகக் கற்றறிந்து தெளியும் அறிவுப்புலத்திலும் புதிய தலைமுறை ஒன்று புலர்வதற்கு இவர் ஆற்றிய பெரும்பணி காலத்தால் அழியாததாகும். கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் எம் மண்ணையும் நேசித்த நாட்டுப்பற்றாளராகவும் சொக்கன் ஐயா எம்முடன் வாழ்ந்து போனார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடனும், கலை, இலக்கிய படைப்பாளிகளுடனும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் இணைந்து கொள்கின்றது. எம் தேசத்தின் மூதறிஞர் ஒருவரின் பிரிவால் எமது விடுதலை அமைப்பு துயருற்றிருக்கின்றது. வந்தபோதும், எம்முடன் இருந்த போதும் இவர் பதித்த தடங்கள் அவரின் மறைவுக்குப்பின்னும் எங்களுடன் இருக்கும்.

## கர்நாடக சங்கீத மேதை எம்.எஸ்.


எம். எஸ். சுப்புலட்சுமி

தமிழகத்தின் பிரபல கர்நாடக சங்கீத மேதை எம். எஸ். சுப்புலட்சுமி அண்மையில் காலமானார். 16.9.1916 இல் பிறந்த எம்.எஸ். சிறு வயதிலேயே மிகுந்த இசைஞானம் உடையவர். புகழ்பெற்ற இசை விற்பன்னர்களான ஸ்ரீனிவாச அய்யங்கார், முசிறி சுப்பிரமணிய ஐயர், செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர் ஆகியோரிடம் முறைப்படி கர்நாடக இசை பயின்ற எம்.எஸ் தனது 10 வயதிலே முதல் இசைக்கச்சேரியை அரங்கேற்றினார்.

'சேவாசதன்' என்ற படத்தில் பாடிய இவர் தொடர்ந்து 'சகுந்தலை', 'மீரா' ஆகிய படங்களில் பாடி நடித்தார். 'மீரா' திரைப்படத்தில் அவர் பாடிய 'காற்றினிலே வரும் கீதம்' என்ற பாடல் புகழ் பெற்றது. எம்.எஸ்.சுப்புலட்சுமி 1940 இல் சதாசிவத்தை கைபிடித்தார்.

1966 இல் ஐ.நா. சபையிலும், 1982 இல் இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் முன்னிலையிலும் பாடி சர்வதேச தலைவர்களை தன் குரலால் கவர்ந்தார். 1954 இல் பத்ம பூஷன், 1968 இல் சங்கீத கலாநிதி, 1974 இல் ராமன் மகசேச, 1975 இல் பத்ம விபூஷன், 1990 இல் இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது, 1997 இல் ஸ்வர லய புரஸ்கரம் உட்பட பல விருதுகளுடன் 1998 இல் மிக உயரிய 'பாரத ரத்னா' விருதையும் பெற்றுக்கொண்டவர்.1997 இல் கணவரின் மறைவுக்குப்பின்னர் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்தார்.

எம்.எஸ் வீணை,மிருதங்கம் உட்பட பல இசைக்கருவிகளையும் வாசிக்கும் வல்லமை படைத்தவர். ஆலயங்களிலும், வீடுகளிலும் ஒலிக்கும் வெங்கடேச சுப்பிரபாதத்தை பாடிய வரும் இவரே.இசை உலகின் ஆதாரமாகத் திகழ்ந்த எம்.எஸ். மறைந்து விட்டாலும் அவர் பாடிய கர்நாடக இசைப் பாடல்கள் என்றும் காற்றினிலே கலந்து அனைவரது காதுகளிலும் ஒலித்துக்கொண்டிருக்கும் என்பது நிதர்சனம்.

'குளோபல் ரவர்ஸ்' ஹோட்டலின் அனுசரணையுடன் தென்னிந்திய பிரபல பாடகி சுசிலாவின் 'நெஞ்சம் மறப்பதில்லை' இசை நிகழ்ச்சி கடந்த மாதம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த திருமதி சுசிலா குளோபல் ரவர்ஸ் ஹோட்டலில் வரவேற்கப்பட்டு உள்ளே செல்வதையும், இசைநிகழ்ச்சியில் அவர் பாடுவதையும், குளோபல் ரவர்ஸ் ஹோட்டலின் பிரதித்தலைவர் திரு. ராஜு சிவராமன் திருமதி சுசிலாவினால் கௌரவிக்கப்படுவதையும் இங்கே காணலாம்.






# இங்கிலாந்து நோட்டிங்ஹாம் M.P. கிரகம் அலன்

இங்கிலாந்தின் நோட்டிங்ஹாம் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் கிரகம் அலன் 'Confluence' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியை நன்றியுடன் எமது வாசகர்களுக்கு தருகின்றோம்.

**கே:** சர்வகட்சி பாராளுமன்ற குழுவுக்கு தலைமை தாங்கி ஸ்ரீலங்காவுக்கு சென்றிருந்தீர்கள். அங்கு இன்றுள்ள சமாதான நடவடிக்கைகளின் நிலை பற்றி கூறுவீர்களா?

கிரகம் அலன்: பெரும்பாலான கட்சிகள் தம்மை சமாதான நடவடிக்கைகளுடன் ஈடுபடுத்திக்கொண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. நாம் வட அயர்லாந்திலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களினடிப்படையில் பேச்சுக்களின் மூலம் நல்ல வழி பிறக்க முடியும் என்பதை எடுத்துக் கூறினோம்.

**கே:** ஆட்சியிலுள்ள கூட்டணியில் சமாதான பேச்சுக்களுக்கு எதிரானவர்களான மாக்ஸிய வாதிகளின் ஜே.வி.பி இருக்கிறது. உங்கள் அனுபவங்களுடன் இந்த யதார்த்த நிலையை எவ்வாறு பொருத்தி பார்க்கப்போகின்றீர்கள்?

கிரகம் அலன்: இத்தகைய பிரச்சினைகளை வென்றெடுக்கும் திறமை ஏதேனுமிருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இது தொடர்பில் நாம் எவ்வாறு சிந்திக்கின்றோம் என்பதை அறிவதில் இலங்கையர்கள் ஆறுதலடையக்கூடும். அதனையே நாம் செய்தோம். சமாதானத்தை ஏற்படுத்துவது எவ்வளவு சிக்கலானது என்பதை வட அயர்லாந்தின் அனுபவத்திலிருந்து எம்மால் கூற முடிகிறது. எவ்வளவு சிக்கலான தாயினும் இதனை இலங்கையின் சம்பந்தப்பட்ட தரப்புகளே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே இலங்கையர் விரும்பும் நிரந்தர சமாதானமாக இருக்க முடியும்.

**கே:** நீங்கள் மிகவும் அண்மையில் அங்கு சென்றிருக்கின்றீர்கள் என்பதால் அங்கு நெருக்கடியை தீர்ப்பதில் அனைத்து கட்சிகளிடையேயும் ஒரு பொது உடன்பாடு ஏற்படும் சாத்தியங்கள் இருப்பது பற்றி கூற முடியுமா?


அலன்: இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையே மிகவும் உணர்வு பூர்வமான உறவு உண்டு. 30 ஆண்டுகளுக்கு முன் நான் இலங்கையில் கல்வி கற்றபோது கிரிக்கெட் விளையாடியது நினைவில் இருக்கிறது. அங்கே உள்நாட்டுப்போர் நடப்பதை அறியும்போது வேதனையாக இருக்கின்றது. அங்கு ஒரு பிரிட்டிஷ் எம்.பியாக சென்ற நான் சமாதான நடைமுறைகளை முன் னெடுத்து பேச்சுக்களை நடத்த வேண்டுமென்று சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களிடமும் கேட்டு வைத்தேன். காத்திரமான சமாதான நடைமுறையொன்றிற்கு பிரிட்டிஷ் மக்கள் ஆதரவு தரக்காத்திருக்கின்றார்கள் எனவும் கூறி வைத்தேன்.

**கேள்வி:** நீங்கள் வட அயர்லாந்து பற்றி குறிப்பிட்டீர்கள். இது இலங்கையின் பிரச்சினையுடன் எந்தளவு தொடர்புபடுகின்றது. இரு பிரச்சினைகளுக்கும் பொதுவான அல்லது சமாந்தரமான தீர்வை நோக்கிய காரணிகளாக எவற்றை காண்கின்றீர்கள்?

அலன்: வட அயர்லாந்தின் அனுபவத்தின்படி பிரதான அரசியற்கட்சிகள் இறுதியில் ஒருமைப்பாட்டிற்கு வந்து பேச்சுக்களில் ஈடுபடும் என நம்பலாம். வன்முறையிலீடுபட்ட தரப்பினர் மட்டுமன்றி அவர்களுடன் உடன்பட்டு செயற்பட்டவர்களும் கூட பேச்சுக்களில் கலந்து கொள்வதவசியம். வட அயர்லாந்தில் இது நடப்பதற்கு பல ஆண்டுகள் பிடித்தது. அந்த அனுபவத்தை இலங்கையர்களும் பொருத்தமாயின் பகிர்ந்து கொள்ளலாம்.

**கே:** சண்டையிலீடுபட்டிருக்கும் இரு தரப்பினருள்ளும் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு பாதகமான வகையில் சர்வதேச சக்திகள் இலங்கைப் பிரச்சினையில் தலையீடு செய்வதற்கு ஒஸ்லோ பிரகடனம் வழிவகுத்து விட்டதாக கருதப்படுகின்றது. நிச்சயமாக சர்வதேச சக்திகளின் தலையீடு வலுச்சமநிலையை பாதித்து உணர்வுகளை கிளறி விடக்கூடியதல்லவா?

அலன்: இது முற்று முழுதாக இலங்கையைப் பொறுத்த விடயம். வெளியார் எவரும் இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்மானங்களை திணிக்கக்கூடாது. கோரிக்கை விடப்பட்டால் தலையிட்டு உதவிபுரிவது மட்டுமே வெளியாரின் பணியாகும். சமாதான நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு உதவுவது மட்டுமே எமது பணி.பலர் விரும்புகின்றார்கள் என்பதனால் இவ்வகையான விடயங்கள் நிறைவேற முடியாது. சர்வதேச சமூகத்தையே வேதனைப்படுத்துகின்ற வன்முறைக்கு இறுதி முடிவு காண்பதில் இலங்கையர்கள் விரும்பும் பட்சத்தில் மட்டுமே வெளியார் தலையிடுதல் நடைபெற முடியும்.



இங்கிலாந்து -நோட்டிங்ஹாம் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் கிரகம் அலன்

**கேள்வி:** விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கி விட்டது. தாம் சமாதான செயல்திட்டங்களில் ஈடுபட்டிருப்பதாக மீண்டும் மீண்டும் அறிவித்தும் அதே வேளை அல்குவேதா அமைப்பு போன்று சர்வதேச நடவடிக்கைகளில் ஈடுபடாத நிலை கண்டும் பிரிட்டன் ஏன் புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி யோசிக்கவில்லை?

அலன்: நாம் பிரிட்டிஷ் அரசின் சார்பில் பேசவில்லை. பல அரசியற் கட்சிகளினதும் ஒரு குழுவாகவே நாம் சென்றோம். அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசினோம்.

**கேள்வி:** இலங்கைக்கு நேரில் சென்று பார்வையிட்டவர்கள் என்ற வகையில் பிரிட்டிஷ் அரசுக்கு ஒரு சிபாரிசு செய்யலாமே?

அலன்: இல்லை. எமது பொறுப்புக்களாக இருந்தவை சக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பேச்சுக்கள் மூலமான சமாதானம் பற்றி எடுத்துரைப்பது மட்டுமே.

**கேள்வி:** ஒரு சமாதான நடவடிக்கை ஆரவாரமேதுமின்றி ஜனாதிபதியால் பாராளுமன்றக் கலைப்பினால் தடை செய்யப்பட்டது. விடுதலைப்புலிகளுடன் பேசுவதை முற்றாக நிராகரிக்கும் ஒரு பங்காளியையும் உள்ளடக்கிய புதிய அரசு தோன்றியது.

அதேவேளை அரசாங்கத்தினது பலத்தை தானும் கொண்டிருக்கும் எதிர்கட்சி சமாதான பேச்சுக்களை ஆதரிக்கும் நிலையிலுள்ளது.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாடும் இதுவே. உண்மையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை எதிர்க்கும் பலமான அமைப்பு இல்லையல்லவா?

அலன்: உள்நாட்டின் கட்சி அரசியல் குழப்பங்கள் பற்றி கருத்துக்கூறுவது அழகல்ல. சமாதான பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பதையே எம்மால் வலியுறுத்த முடியும்.

# விசேட வைத்திய நிபுணரை தீர்மானிப்பது குடும்ப வைத்தியரா, நோயாளியா?

பண்டையவைத்திய முறைகளிலிருந்து நவீன மருத்துவ முறையான மேற்கத்தேய மருத்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டு பல தசாப்தங்களாகின்றன. தற்கால கட்டத்தில் நவீன மருத்துவ முறை சிறந்த வளர்ச்சியடைந்து பற்பல புதிய முறைகள் மூலம் நோய்களைக்கண்டு பிடிப்பது மட்டுமல்லாமல் வைத்திய நிபுணர்களின் கண்டுபிடிப்பின் மூலம் Computer மற்றும் Robot போன்றன அறுவைச்சிகிச்சைகள் கூட செய்யுமளவுக்கு மருத்துவத்துறை முன்னேற்றமடைந்துள்ளது சகலரும் அறிந்ததே.

இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் மருத்துவத்துறை முன்னேற்றமடைந்துள்ள வேளை மேற்கத்தேய மருத்துவத்துறை மூலம் பயிற்சி பெற்ற பட்டதாரி மருத்துவர்களின் எண்ணிக்கை (MBBS பட்டதாரிகள்) ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது.

இதே வேளை மருத்துவ உப துறைகளில் (Speciality & Sub speciality) பயிற்சி பெற்று விசேட வைத்திய நிபுணர்களாக (Consultant) கடமையாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் கணிசமான எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது.

இவ்வாறான மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நோயாளர்களின் மனதில் ஒரு வித திருப்தியுணர்வையும் ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாக நோயாளிகள் தங்களது சிறிய சிறிய மருத்துவப்பிரச்சினைகளுக்கும் கூட விசேட வைத்திய நிபுணர்களை நாடுகின்ற மனப்போக்கையும் எமது நாட்டில் காணக்கூடியதாகவுள்ளது. இது ஆரோக்கியமான முறையல்ல. இவ்வாறான போக்கின் காரணமாக நோயாளிகள் தம்முடைய நேரம், பணம், ஆள் விரயம் போன்றவற்றை தேவையின்றி விரயமாக்குகின்ற நிலைமையை நாம் அவதானிக்கின்றோம்.

ஒரு நோயாளி நேரடியாக ஒரு விசேட வைத்திய நிபுணரை (Consultant) அணுகுவதன் மூலம் விசேட நிபுணரின் வேலைப்பளு அதிகரிக்கின்றது. இதனால் ஒரு நோயாளியுடன் செலவிடும் நேரம் குறைவடைகின்றது. இதனால் நோயாளி திருப்தியின்மையுடன் சில வேளைகளில் தங்களது உண்மையான பிரச்சினைக்கு தேவையான விளக்கம் கிடைக்காமல் ஆலோசனையறையில் இருந்து வெளியேறும் நிலை சில வேளைகளில் ஏற்படுகின்றது.

நோயாளிகளின் கூட்டம் அதிகமாகவுள்ள விசேட வைத்தியரே சிறந்த வைத்திய நிபுணர் என்னும் தவறான நோயாளிகளின் கணிப்பும் அதிகமான நோயாளிகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பார்த்து



முடித்து விட வேண்டும் என எண்ணும் சில மருத்துவர்கள் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களின் தவறான போக்குமே இவ்வாறான நிலைக்கு காரணமாகும். இதன்மூலம் மருத்துவர்களைப்பற்றிய தவறான அபிப்பிராயம் நோயாளிகளிடையே ஏற்படுவதுடன் அதிருப்தியும் அடைகின்றனர்.

பொது மருத்துவர்கள் தம்முடைய திறமைக்கு மேற்பட்ட சில நோய்களை, விசேட வைத்திய நிபுணருக்கு அனுப்பாது, தாமே கையாளுவதன் மூலம் அதிருப்தியடைந்த நோயாளர் அடுத்த தடவை நேரடியாக

வைத்தியநிபுணர் Dr.சுவர்ணகுமார்
MS(SL) FRCS (Edin)

நிபுணரைநாடுவதும் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் மருத்துவத்துறையில் நோயாளிகளை பரிமாறும் முறை (Referral System) சரியான முறையில் செயற்படாமையும், மருத்துவர்களின் எண்ணிக்கை போதாமையுமே காரணமாகும்.

சாதாரண தடிமன், காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, நெஞ்சுவலி, வயிறு மற்றும் முதுகு வலி போன்ற நோய்களுக்கு கூட விசேட வைத்திய நிபுணரை நாடும் நோயாளர்கள் கணிசமானளவில் உள்ளனர். இவ்வகையான போக்கு முக்கியமான நேரங்களில் அதிகமாக காணப்படுகின்றது. இது ஒரு தவறான முறையாகும்.

இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே குடும்ப வைத்தியர்கள் (Family doctors) எனப்படும் பொது வைத்தியர்கள் (General practitioners) உள்ளனர். நோயாளி முதலில் தனது குடும்ப வைத்தியரை அணுகி இவ்வாறான பிரச்சினைகளை அவர் மூலம் தீர்த்துக்கொள்வதே சிறந்தது. அதை விடுத்து நேரடியாக விசேட வைத்தியநிபுணர்களை சந்திப்பது தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப வைத்தியரை நோயாளியே தீர்மானிக்கும் அதே வேளை அவர் உண்மையில் தேர்ச்சி பெற்ற மருத்துவரா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலைமை நிலவுகின்றது. ஏனெனில் தேர்ச்சி பெறாத மருத்துவர்களின் வீதம் இலங்கையில் அதிகமாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் முறையாகக்கடைப்பிடிக்கப்படும் நோயாளரை பரிமாறும் முறை (Referral system) மூலம் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படுகின்றது. அதாவது ஒரு நோயாளி நேரடியாக ஒரு விசேட நிபுணரை சந்திக்க முடியாது. நோயாளி தனது எந்தப் பிரச்சினைக்கும் முதலில் தனது குடும்ப வைத்தியரையே நாட வேண்டிய கட்டாயம் உள்ளது. அவர் தன்னுடைய திறமைக்குட்பட்ட பரிசோதனைகள் செய்து, உரிய சிகிச்சை அளித்து தன்னால் முடியாதவிடத்து அவர் விசேட நிபுணரின் ஆலோசனையை அணுகுவார் அல்லது நோயாளியை அவரிடம் அனுப்பி வைப்பார். அதாவது விசேட நிபுணரிடம் போக வேண்டுமா என தீர்மானிப்பது குடும்ப வைத்தியரே தவிர நோயாளியல்ல.

இம்முறை மூலம் விசேட வைத்திய நிபுணர், தனது நேரத்தை உண்மையில் தேவையான ஒரு நோயாளிக்கு அளிக்கக்கூடியதாகவுள்ளது. தன்னுடைய விசேட நிபுணத்துவத்திற்கேற்ப சிகிச்சையளித்தபின் நோயாளி மீண்டும் குடும்ப மருத்துவரிடம் அனுப்பப்படுகின்றார்.

அரச மருத்துவ நிறுவனங்களில் இம்முறை ஓரளவு நடைமுறையில் இருந்தாலும், தனியார் துறையில் இது ஒரு நடைமுறைச்சிக்கலாகவே உள்ளது. இதற்கு மருத்துவர்களிடையேயுள்ள போட்டியும் ஒரு காரணமாகும்.

இம்முறையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மருத்துவ நிபுணர்களின் கையிலே முக்கியமாக தங்கியுள்ளது. பொது மருத்துவர்கள் தேவையான நோயாளர்களை ஆலோசனைக்காக உரிய நேரத்தில் அனுப்புவதும் நிபுணர்கள் பொது வைத்தியர்களினால் அனுப்பப்படும் நோயாளர்களை மட்டுமே பார்வையிட கட்டாயமாக்குவதும் அவர்களின் விசேட வைத்திய ஆலோசனையின் பின்னர் மீண்டும் குடும்ப மருத்துவரிடமும் அனுப்பும் முறையை கடைப்பிடிக்க வேண்டும். இந்நிலையில் நிபுணர்கள் அதிக பணத்தை அறவிடவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டாலும் தேவையான நோயாளர்கள் பலனடைவது நிச்சயம். இம்முறை கடைப் பிடிக்கப்படாதவிடத்து பாதிக்கப்படுவது அப்பாவி நோயாளரே.

# எது சரியான அணுகுமுறை?



பிள்ளைகள் பரீட்சையில் குறைவான புள்ளிகள் பெற்றுவிட்டால், பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டிப்பது வழக்கம். "இனி பாடசாலைக்கு போகவேண்டாம். வீட்டிலேயே இரு, அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்" இப்படி பல வாறு சொல்லி பிள்ளைகளை பெற்றோர் கண்டிப்பார்கள். இவ்வாறு பிள்ளைகளை கண்டிப்பது சரியான அணுகுமுறையா?

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" கள்ளங்கபடமில்லாத வெள்ளை உள்ளம் படைத்த பிளளைகளை ஒரு போதும் கடுமையான வாாத்தைகளைப்பிரயோகித்து கண்டிக்கக்கூடாது. பரீட்சையில் குறைவான புள்ளிகளைப்பெற்ற பிள்ளைகளுக்கு புரியும் படியாகவும் அதே சமயம் அன்பாகவும் எடுத்துக் கூறினால் அவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள்.

போஷாக்கு மிக்க உணவுகளை பார்த்துப் பார்த்து ஊட்டி பிள்ளைகளின் ஆரோக் கியமான வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டும்

நீங்கள், கூடவே அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் ஊட்டினால் அவர்களின் எதிர்காலம் வளமானதாக இருக்கும் அல்லவா?

திறமை இல்லாதவர்கள் என்று எவரையுமே

ஒதுக்கி வைத்து விட முடியாது. ஒவ்வொரு பிள்ளையிடமும், ஏதோ ஒரு திறமை இருக்கின்றது. அதைக் கண்டுபிடித்து ஊக்கப்படுத்துவது பெற்றோரது கடமை! எனக்குத் தெரிந்த பெண்ணுக்கு ஒரு மகன், அவன் சுமாராகத்தான் படிப்பான். ஆனால் வீட்டில் வானொலி செயல்படா விட்டால் திருத்துவான். எந்த இடத்தில் என்ன பொருள் உள்ளது என்பதை சரியாக சொல்லுவான்.அவனது தாய் சில விஷயங்களை நினைவுபடுத்த முயலும் போது, அந்தச்செயல் நடைபெற்ற சந்தர்ப்பம், நாள், நேரம், பற்றிய விவரங்களை சரியாகச் சொல்லி ஞாபகமூட்டுவான்.

சில பிள்ளைகள் நன்றாகப்படங்கள் வரைவார்கள், சில பிள்ளைகளுக்கு நல்ல குரல் வளம் இருக்கும். சிலர் நன்றாக நடனம் ஆடுவார்கள். இப்படி ஒவ்வொரு பிள்ளையிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கின்றது. படித்தவர்கள் எல்லோரும் புத்திசாலிகளலல்ல, படியாத எல்லோரும் முட்டாள்களுமல்ல, எனவே பெற்றோர்கள், பிள்ளைகள் படிக்கவில்லையே என ஆதங்கப்பட்டு அவர்களைக்கண்டிக்கக்கூடாது. 'உன்னால் சாதிக்க முடியும்' என்ற தன்னம்பிக்கையை பிள்ளைகளுடைய மனதில் விதையுங்கள். எதிர்காலத்தில் அவர்கள் நிச்சயம் சாதிப்பார்கள்.

# புதிய ஆண்டை வரவேற்போம்..!

2005



மலர்ந்துள்ள புத்தாண்டின் முதல் மாதத்தில் செய்ய வேண்டிய சில பிரதான வேலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

* புதிய ஆண்டின் முதல் மாதம் அனைவருக்கும் உற்சாகத்தை தரும் மாதம். ஒரு குடியிருப்பு என்பதை விடவும் இனிய சூழலும், சுற்றமும் அமைந்த இல்லம் வெகு சிறப்பானது. எனவே வீட்டை மனதுக்கு பிடித்த முறையில் அழகாக ஒழுங்குபடுத்த வேண்டும்.

* கடித உறைகள், அஞ்சல் அட்டைகள், முத்திரைகள், கடிதம் எழுதும் தாள்கள், பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள் இருப்பில் வைக்கப்படல் வேண்டும். சில்லறைச்செலவுகளும், கணக்குகளும் பதிவதற்கு ஒரு பதிவேடு வைக்கவும்.

* பஸ், ரயில் வண்டிகளில் பருவச்சீட்டுகளைப்பயன்படுத்தி பயணிப்பவர்கள் அவற்றை பெற்று வைக்க வேண்டும்.

* மாதத்தின் ஐந்தாம் நாள் கிறிஸ்மஸ் மரங்கள், சோடனைகளை அகற்றவும்.

* தக்காளி மலிவாகக்கிடைக்கும் காலம் என்பதால் அதிலிருந்து ஜாம் ஆகியவற்றை தயாரித்துக்கொள்ளலாம்.

# டிப்ஸ்

* நாலைந்து மிளகை அரைத்து பசு வெண்ணெயுடன் சேர்த்து மூன்று நாட்கள் காலையில் சாப்பிட வயிற்று வலி நீங்கும்.

* வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வெந்தயத்தை அரைத்து தயிரில் போட்டு சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.

* நம்மைத்தாக்கும் பல கிருமிகள் முதலில் நம் கைகளில் தான் தஞ்சமடைகின்றன. கையிலிருந்து வாய், மூக்கு வழியாக உடலினுள் புகுந்து விடுகின்றன. எனவே அடிக்கடி கைகளை கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். நோய்கள் விரைவில் அண்டாது.

* இசைக்கு உற்சாகப்படுத்தும் ஆற்றல் உள்ளது. எனவே நல்ல இசையை எப்பொழுதும் கேளுங்கள்.

# கொஞ்சம் சிந்தியுங்கள்!

'ஒத்துப்போதல்' என்ற வார்த்தையை பேச்சு வழக்கில் நாம் பல தடவைகள் உபயோகப்படுத்துகின்றோம் . எனினும் அதனை ஒரு சாதாரண வார்த்தையாக நினைக்கின்றோமே தவிர அந்த வார்த்தையின் சரியான அர்த்தத்தை நம்மில் பலர் புரிந்து கொள்வதில்லை.

நாம் செய்யும் எல்லா வேலைகளிலும் 'ஒத்துப்போகும்' தன்மை இருக்க வேண்டும். அலுவலகத்தில் ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒத்திசைந்து வேலை செய்தால் தான் வெற்றியடைய முடியும். ஆடலும், பாடலும் ஒத்துப்போனால் தான் நடனம் நன்றாக இருக்கும். இயற்கை ஒத்திசைவாகச் செயற்பட்டால் தான் அழிவுகளின்றி உலகம் சீராக இயங்கும். தச வாயுக்களும் சரியாக செயற்பட்டால் தான் நாம் நோய், நொடிகளின்றி ஆரோக்கியமாக வாழலாம். இப்படி இருக்கையில் குடும்பத்தில் மட்டும் ஏன் 'ஒத்துப்போதல்' இல்லை?, எல்லா இடத்திலும், எல்லாச்செயலிலும் 'ஒத்துப்போதலை' எதிர்பார்க்கும் நாம் ஏன் வீட்டில் மட்டும் ஒருவரையொருவர் அனுசரித்து, விட்டுக்கொடுத்து போக மறுக்கின்றோம்.

கணவன் மனைவியைத்திட்ட, மனைவி கணவனைத்திட்ட, இருவரும் சேர்ந்து பிள்ளைகளைத்திட்ட இப்படியே வார்த்தைகளை ஒருவர் மீது ஒருவர் அள்ளி வீசுகின்றோம். ஒருவர் ஏதோ உணர்ச்சி வேகத்தில் குழம்பிய மனநிலையில் வார்த்தைகளை கொட்டி விட்டால் பதிலுக்கு நாமும் பேசினால் என்ன அர்த்தம்? கொஞ்சம் பொறுத்து போவதாலும், பதிலுக்கு மௌனம் சாதிப்பதாலும் ஒன்றும் குறைந்து விடப்போவதில்லை. எதிராளி உணர்ச்சி வசப்பட்டு பேசும்போது நாம் எவ்வளவு தான் எடுத்துச்சொன்னாலும் அவர் புரிந்து கொள்ள மாட்டார். அவர் அமைதியடைந்த பின்னர் பக்குவமாக சொல்லி புரிய வைக்கலாமே....?

உலகம் ஒரு கிராமமாக சுருங்கி வருகின்றது என்ற அடிப்படையில் பரபரப்பு மிக்க வாழ்க்கை காரணமாக எல்லோருமே பரபரப்புடனேயே காணப்படுகின்றனர். நின்று, நிதானித்து செயல்படுவதற்கு எவருக்குமே அவகாசம் இல்லை. இவ்வாறான பரபரப்பான வாழ்க்கை முறையினால் ஏற்படுகின்ற அசௌகரியங்கள் வீட்டினுள் கோபம் எரிச்சலாக மாறுகின்றன. இதனால் குடும்ப உறுப்பினர்களிடையே மனவேற்றுமைகளும், விரிசல்களும் மலிந்து காணப்படுகின்றன. வீட்டுக்குள்ளே போராடிக்கொண்டும், புழுங்கிக்கொண்டும் இருந்தபடி வீட்டுக்கு வெளியே மட்டும் ஒத்துப்போதலை எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்....? வீட்டுக்கு வெளியே உறவில்லாத, அறியாத யார் யாருடனோ எல்லாம் பொறுத்துக்கொண்டும், அனுசரித்துக்கொண்டும் ஒத்துப்போகின்ற நாம் வீட்டுக்குள்ளே எம்மவர்களுடன் ஒத்துப்போனால் எல்லோருடைய வீடுகளிலும் இனிமையான இசையைக்கேட்கலாம்.

-தீபா

# வாழ்க்கை வாழ்வதற்கே!

இன்று நாம் வாழும் உலகம் ஆக்கப் பாதையை விட்டு அழிவுப்பாதையை நோக்கி பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொருவர் மனதிலும் கோபங்களும், விரோதங்களும், வெறுப்புகளும் மேலோங்கி அதன் காரணமாக கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்பு, நம்பிக்கைத்துரோகம் போன்ற குற்றச்செயல்கள் தாராளமாக நடைபெறுகின்றன.

குறிப்பாக மனிதனை மனிதன் அழிப்பது தான் பெரும் கொடுமை. ஐந்தறிவு படைத்த பிராணிகளுக்கு இருக்கும் ஒற்றுமைத் தன்மை, சிந்தித்து செயலாற்றும் ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு இல்லை. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அடிப்படையில் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு வாழாமையே பிரதான காரணமாகும். சமூகத்திலுள்ள மனிதர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அடுத்தவர் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளித்து வாழ்வார்களேயானால் வாழ்வில் மகிழ்ச்சியைத் தவிர வேறிருக்காது.

ஆனால் இன்று அன்பு, பாசம் பற்றி பேசக்கூட நேரமில்லாது எல்லோரும் சுயநலமாகவே வாழ்கின்றார்கள். இன்று நம்மில் எத்தனை பேர் நியாயம், நன்றி விசுவாசத்துடன் இருக்கின்றார்கள்?

இன்று விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து உலகத்தொடர்புகள் சுருங்கிவர மனிதர்களுடைய மனங்களும் விசாலமின்றிச் சுருங்கி விட்டது. ஏமாற்றுப்புத்திகளும் சுயநலப்போக்குகளும் சுயலாபத்திற்காக எந்தத்துரோகச் செயல்களையும் புரியும் துணிகரமும் தான் எம்மத் தியில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

மனிதன் மனிதத்தை சாகடித்துக் கொண்டிருக்கின்றான். ஒருவனுடைய அழுகையில் ஒருவன் ஆறுதலடைகின்றான்.

அப்படியானால் மனிதர்களுக்கேயுரித்தான அன்பு, பாசம் போன்ற குணவியல்புகள் ஆரம்பத்திலேயே இவர்களுக்கு இல்லாமல் போய் விட்டதா? என்ற கேள்வி எழுகின்றது.

அனைவருமே மனிதர்கள். அன்பிற்கு அடிமையாகக்கூடியவர்கள் தான். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் தீய குணங்கள் தலை தூக்குவதற்கு காரணமாகின்றது.

இதற்கு வளர்ப்பு முறையும் ஒரு காரணமாகும். 'எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்பது உண்மை தான்.

நம் வாழ்க்கையின் அடி, அத்திவாரம் குடும்பம் ஆகும். அதன் பிரதான அங்கத்தவர்கள் கணவன், மனைவி. இன்று பல கணவன், மனைவி உறவுகள் பிளவுபட்டு நிற்கின்றன. கருத்து வேற்றுமைகளும், புரிந்துணர்வின்மையும் ஈகோ எனப்படும் தன்முனைப்பு பிளவுக்கு காரணங்கள். சிலர் தினமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டு அவற்றை உலகுக்கு மறைப்பதற்காக சேர்ந்து வாழ்கின்றார்கள்.



இப்படியானவர்களின் குடும்பத்தில் அவர்களுடைய மகிழ்ச்சி மட்டுமன்றி இவர்களைச்சார்ந்திருக்கும் பிள்ளைகள், பெற்றோரின் மகிழ்ச்சியும் தொலைக்கப்படுகின்றது. இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது குழந்தைகளே. அவர்களுக்கு உரிய முறையில் அன்பும் அரவணைப்பும் கிடைப்பதில்லை. தாய்க்கும் தந்தைக்கும் இடையில் எந்நேரமும் முறுகல் நிலை காணப்படுவதால் அவர்கள் மனம் குழம்பியே இருக்கும். எதற்கெடுத்தாலும் பேசுவார்கள், அடிப்பார்கள். இதனால் பிள்ளைகளின் மனத்தில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகி விரக்தி ஏற்படும். ஈற்றில் அவர்கள் தவறான வழிகளை நாடிச்செல்ல தலைப்படுவார்கள்.

இன்னும் பல குழந்தைகள் தந்தை முகம் பாராமலும், சிலர் தாய் முகம் பாராமலும் பாசங்கள் மறுக்கப்பட்டவர்களாக வெறுப்படைந்து காணப்படுவர். இப்படிப்பட்ட பிள்ளைகளே எதிர்காலத்தில் நிலவும் நூற்றில் 99 வீதமான குற்றச்செயல்களுக்கும் காரணம் ஆகின்றனர்.

இதற்குப் பதில் கூற வேண்டியவர்கள் பெற்றோர்கள் அல்லது அவர்களுடைய பாதுகாவலர்கள்.

எனவே தாய், தந்தையர் சற்று சிந்திக்க வேண்டும். நமக்காக மட்டுமல்ல குழந்தைகளின் எதிர்காலமே நம் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணர்வுபூர்வமாக அறிதல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமான குணங்கள் இருக்கின்றன. அது மற்றவரின் குணத்துடன் முரண்படுகின்ற போது தான் பிரச்சினை வருகிறது.

இதனை தவிர்க்க முடியாது. எனினும் அதைச் சரிசெய்து தான் ஆகவேண்டும். நீங்கள் இருவரும் உங்கள் பொறுப்புகளிலிருந்து சற்று விலகினால் கூட குடும்பம் சரிந்து விடும். எனவே விட்டுக்கொடுத்து அனுசரித்துப்போக பழகிக்கொள்ள வேண்டும். குடும்பம் ஆலயத்திற்கு ஒப்பானது. அவ்வாலயத்திலிருந்து வெளி வரும் எந்தப்பிள்ளையும் கெட்டவழியில் செல்லாது.

இந்த உலகத்தில் மகா சக்தி படைத்தது நம்முடைய மனம். முதலில் அலை பாயும் இம்மனதை அடக்கி நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

அன்பும் தெளிவும் நிறைந்த உள்ளத்தில் உதிக்கும் சிந்தனைகள் மிகவும் நேர்மையானதாக இருக்கும். நாம் பொறுமையாக இருப்பதன்மூலம் அடுத்தவரது உணர்வுகளைப்புரிந்து கொள்ளலாம். அவர்களுக்கு நம் பூரணமான அன்பினை வழங்க முடியும். கோபத்தைப் போலவே அன்பும் காதலும் நாம் ஒரு மடங்கு காட்ட பல மடங்கு கிடைக்கும்.

குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். அப்போது பிள்ளைகளும் நேர்மையும் ஒழுக்கமும், அன்பும் நிறைந்த நற்பிரஜைகளாக உருவாவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வாழ்க்கை வாழ்வதற்கே அதை அனுபவித்து வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்! மலர்ந்துள்ள புதிய ஆண்டில் உலகெங்கும் அமைதி நிலவ வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியான தாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவோம்.

**ஆர். ராதிகா, கல்முனை**

# மாதபலன்கள்

சோதிட ஆய்வாளர் த.அழகேசன்- யாழ்ப்பாணம்

01.01.2005 - 31.01.2005




**அஸ்வினி, பரணி, கார்த்திகை-1**

கல்வி முன்னேற்றம், திரவிய லாபம், வியாபார நன்மை, சகோதரர் உதவி, உறவினர் உதவி, தாழ்மையானநிலை, இடமாற்றம், உத்தியோக மாற்றம், சண்டை சச்சரவு, தாய், தந்தைக்கு நோய், புதிய நண்பர்கள் சேர்க்கை, திரவிய நாசம், கெட்ட பெயர், எதிர்பாராத உதவி, விபத்துக்கள், கணவன்-மனைவி உறவு கசப்பு, ஆயுத பீடை, இடறிவிழுதல், அன்னிய தேச வாசம், பிரயாண அலைச்சல், பங்காளிகள் பிள்வு, பயணத்தில் திருட்டு பயம், திருமணப் பேச்சு, கடன் தொல்லை, நண்பர் விரோதம், தர்மம் செய்தல், அதிகாரிகள் தொல்லை, 14 ஆம் திகதிக்கு பின்பு பணவரவு, உத்தியோக உயர்வு, காரிய வெற்றி, தொழில் முன்னேற்றம், வேலை கிடைத்தல், கல்வி முன்னேற்றம் என்பன ஏற்படலாம். சனி வக்கிரம், யோகமான பலன்கள் சற்று குறைவடையலாம். கூடாத நாட்கள்: 6,7,8




**கார்த்திகை - 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் - 1,2**

கல்வி முன்னேற்றம், திருமண சுபகாரியம், புத்திரர் பிறப்பு அல்லது உருவாகுதல், குடும்பப்பெண்களுடன் மனஸ்தாபம், நோய், துக்கம், தந்தையார் உடல் நிலை பாதிப்பு, எதிர்பாராத விபத்துக்கள், பணத்தட்டுப்பாடு, பொருள் நட்டம், திருடர் பயம், அரங்க பயம், மருத்துவச்செலவு, இடமாற்றம், பிரயாணக்கஷ்டம், கண்நோய், பண நட்டம், எதிரியால் பயம், புத்திரர் விரோதம், திருமணப்பேச்சு குழப்பம், பாகப்பிரிவினை, தூரதேச பிரயாணம், விருந்து உபசாரம், யாத்திரை செல்லல், நண்பர் வரவு, புதிய மனை செல்லுதல், 14 ஆம் திகதிக்கு பின்பு பணத்தட்டுப்பாடு, பொருள் நட்டம், திருடர் பயம், பிரயாணக்கஸ்ரம், மனைவியுடன் மனஸ்தாபம் ஆகியன ஏற்படலாம். சனிக்கிரகம் திடீர் அதிஷ்டங்கள் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 9,10,11




**மிருகசீரிடம் - 3,4, திருவாதிரை, புனர்பூசம் - 1,2,3**

கல்வி முன்னேற்றம், நோய் குணமாகும், பண வரவு, சத்துரு ஜெயம், காரிய வெற்றி, கௌரவம் ஏற்படும், வழக்கு வெற்றி, வருமான உயர்வு, பிரயாண நன்மை, வீட்டில் சுபகாரியம், பங்கு வியாபாரம் முன்னேற்றம், அலைச்சல், விசக்கடி பயம், தொழில் கஸ்ரம், காயப்படுதல், மனைவிக்கு நோய், குடும்பத்தினர் கலகம், பண விரயம், மனைவியுடன் மனஸ்தாபம், வெளியூர் பிரயாணம் தடைப்படும், வயிற்றில் ரோகம், கலகம், நம்பிக்கைத்துரோகம், காதல் தடை, மனைவியைப் பிரிந்து இருத்தல், கெட்ட சிநேகம், பெண்களால் உபத்திரம், உறவினர் பகை, புதிய வியாபாரம் அமைதல், வீண்பழி, தீவிபத்து, வேறு தேசம் செல்லுதல் என்பன ஏற்படலாம்.
சனி வக்கிரம், திடீர் அதிஷ்டங்கள் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 11,12,13




**புனர்பூசம் - 4,பூசம்,ஆயிலியம்**

கல்வி முன்னேற்றம், நோய் குணமாகும், விரோதிகள் அழிவு, காரியம் கைகூடுதல், புகழ் ஏற்படும், தனலாபம், நண்பர் உதவி, தூரதேசப்பிரயாணம், தொழில் ஆதாயம், பொருள் சேர்க்கை, அரசு ஆதரவு, வழக்கு வெற்றி, சந்தோசம், உடல் காயம் ஏற்படல், திருட்டு போதல், உறவினர் கலகம், சகோதரர்களால் செலவு, எதிரியுடன் கைகலப்பு, புத்திரர்களால் துக்கம், பதவி உயர்வு, பெண்களால் பொருள் வரவு, கடன் பகை, நண்பர் விரோதம், பயிர் நட்டம், மரண பயம், தூர தேசம் செல்லுதல், 14 ஆம் திகதிக்குப்பின்பு விசக்கடி பயம், பண விரயம், அலைச்சல், மனைவிக்கு நோய், தொழில் கஷ்டம், வெளியூர் பிரயாணம் தடைப்படும், சனி வக்கிரம், திடீர் யோகங்கள் ஏற்படலாம், கெட்ட பலன்கள் குறைவடையலாம்.:.
கூடாத நாட்கள்: 13,14,15




**மகம்,பூரம், உத்தரம்-1**

கல்வி முன்னேற்றம் உண்டு. குரு தரிசனம், நண்பரால் நன்மை, ஸ்திரி சுகம், குழந்தை கிடைத்தல் அல்லது உருவாகுதல், புத்திரர்களால் மகிழ்ச்சி, திருமணம் கைகூடுதல், அல்லது திருமணப்பேச்சு, நோய் சோகம், விரோதிகளால் பயம், அதிக பணச்செலவு, வயிற்று வலி, எதிரியால் தொல்லை, அரச பயம், மனக்கவலை, பணத்தட்டுப்பாடு, பிரயாண நட்டம், கர்ப்பச்சிதைவு, மான நஷ்டம், உறவினர் பிரிவு, வேலை இடத்தில் தகராறு, ரத்த காயம் ஏற் படல், பெற்றோர் உடல் நிலை பாதிப்பு, அக்கினி பயம், இடமாற்றம், வீண் மனஸ்தாபம், பிறமாதர் சேர்க்கை, எதிர்பாராத பணவரவு, 14 ஆம் திகதிக்குப்பின்-நோய் குணமாகும், காரியம் கைகூடும், தன லாபம், வழக்கு வெற்றி ஆகியன ஏற்படலாம், சனி வக்கிரம், நற்பலன்கள் குறைவடையலாம்.
கூடாத நாட்கள்: 15, 16,17




**உத்தரம் - 2,3,4, அத்தம், சித்திரை-1,2**

கல்வி முன்னேற்றம், ஐஸ்வரியம், தனவிருத்தி, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், சகோதரர் உதவி,தொழில் முன்னேற்றம், பதவி உயர்வு, வீடு, நிலம் வாங்குதல், இளைய சகோதரர்களுக்கு சுப காரியம், பரிசு, பட்டம் கிடைத்தல், புதிய பதவி, அயல் ஊர் பிரயாண லாபம், தாயார் சுகம், விவசாய செய்கை நட்டம், உறவினர் வருகை, வாகன லாபம், புதிய வாகனம் வாங்குதல், வெளியூர் பிரயாண நன்மை, ஜுரம் (காயச்சல்), வழக்கு சண்டை, மனக்கவலை, முயற்சி வீண் போதல், மனைவி விரோதம், அதிகமான செலவுகள், மார்பு வலி, காரியத்தடங்கல், வாகனச்செலவு அதிகரித்தல், குடும்ப கலகம் ஆகியன ஏற்படலாம். சனி வக்கிரம், திடீர் யோகம் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 18,19,20




**சித்திரை-3,4, சுவாதி, விசாகம் -1,2,3**

பணவரவு, கல்வியில் சிறு தடை, நோய் தீருதல், வழி மாறுதல், தொழில் லாபம், விரோதிகள் அழிவு, புதிய பதவி, மதிப்பு, எதிர்பாராத தனவரவு, ஆரோக்கியம், சத்துரு ஜெயம், ஆபரண லாபம், சந்தோசம், உறவினர் சிநேகம், காரிய சித்தி, குடும்ப உறவு மகிழ்ச்சி, இடமாற்றம், திருடர் பயம், முற்கோபம், வெட்டுக்காயம், பொருள் இழப்பு, பந்தயங்களில் தோல்வி, செலவு அதிகம், திருமணப் பேச்சு, குழந்தைப்பேறு, பெரியோர் சந்திப்பு, பதவி உயர்வு, நண்பர் வருகை, அன்னியப்பெண்களால் நன்மை, திடீர் திருமண யோகம், யாத்திரை செல்லுதல், பண விரயம், தந்தையார்க்கு தீங்கு, தாய் பகை, வெளியூர் பிரயாண நட்டம், விபத்து, மனைவி விரோதம், தூரதேச பிரயாணம், வாகனச்செலவுகள், குடும்ப கலகம், சனி வக்கிரம், திடீர் யோகங்கள் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 20,21,22




**விசாகம் - 4, அனுஷம், கேட்டை**

கல்வி உயர்வு உண்டு, வாக்குதிறன் வித்தை விருத்தி, லக்சுமி கடாட்சம், நல்ல வார்த்தை, அரசியல் செல்வாக்கு, கண் நோய், அரசாங்க விருது, நோய் தீருதல்,வாகன சுகம், திருமனப்பலன், புத்திரப்பேறு, வீண் கண்டம், பண நெருக்கடி,கண்வலி,பிறரால் ஏமாற்றப்படல், வஞ்சனை, கெட்ட சிநேகம்,எதிர்பாராத செலவு, கடன்தொல்லை, மருத்துவச்செலவு, வருமானம் குறைவு, கவலை, வேலைப்பழு, மனோ வியாதி, உறவினர் பிரிவு உடம்பில் காயம் ஏற்படல், வழக்கு பணச்செலவு, அவமானம், ஆயுத பயம் குடும்ப கலகம், தந்தைக்கு நோய், பெண்களால் பண விரயம், தொழிலில் கெட்ட பெயர், 14 ம் திகதியின் பின்பு-பண வரவு, நோய் தீருதல், தொழில் லாபம், இடமாற்றம், சத்துரு ஜெயம், தீஅபாயம் விபத்துக்கள், உறவினர் மரணம். சனி வக்கிரம், திடீர் யோகம் ஏற்படலாம். கூடாத நாட்கள்: 22,23,24




**மூலம், பூராடம், உத்தராடம் -1**

கல்வியில் சிறு தடை, திருமணப்பேச்சு தாமதம், அலைச்சல், உடல் நலம் கெடுதல், தன நட்டம், பிரச்சினைகள், உறவினர்களால் கஷ்டம், தாழ்மையான நிலை, செல்வாக்கு குறைதல், நோய் அதிகரித்து குணம் அடைதல், ஊர் சுற்றுவது, முற்கோபம், நண்பர் பகை, பொருட் சேதம், நாணயம் தவறுதல்,கடன் படல். இனசனவிரோதம், தன நாசம், கண் நோய், அன்னிய தேச வாசம், காலில் நோ, தொழில் நட்டம், கணவன் -மனைவி உறவு பாதிப்பு, வழக்கு மூலம் ஜெயில் தண்டனை, கெட்ட சிநேகம், வேலை இடமாற்றம், பதவி பறிபோதல், வீடு மாற்றம், மரணச்செய்தி, நண்பர் விரோதம், சனி வக்கிரம், திடீர் யோகங்கள் ஏற்படலாம். கஷ்ட பலன்கள் குறைவடையலாம். கூடாத நாட்கள்: 24, 25,26




**உத்தராடம்- 2,3,4 திருவோணம்,அவிட்டம்-1,2**

கல்வி முன்னேற்றம், தடைப்பட்ட திருமணம் கைகூடும், புது மனை புகுதல், பிள்ளை பிறப்பு அல்லது உருவாகுதல், பெண் சிநேகம், கோயில திருப்பணி, தர்மச்செலவு, திருமணப்பேச்சு, தொழில் நாசம், வீண் செலவு, அலைச்சல், மன விரக்தி, பதவி பறிபோதல், குடும்பப்பிரிவு, புதிய கடன் உண்டாகுதல், திருடர் பயம், அகால உறக்கம், அகால உணவு, பணத்தட்டுப்பாடு, நோய் அதிகரித்தல், நண்பர் விரோதம், யாத்திரை, வெளியூர் பிரயாணம், தன விரயம், சண்டை சச்சரவு, பூமி லாபம், இரண்டாம் தாரம் அமைதல், கௌரவக் குறைவு, கடன் தொல்லை, கெட்ட பேச்சு, பந்தயங்களில் வெற்றி, சனி வக்கிரம், நல்ல பலன்கள் குறைவடையலாம்.
கூடாத நாட்கள்: 27,28,29




**அவிட்டம்-3,4, சதயம், பூரட்டாதி -1,2,3**

கல்வி முன்னேற்றம், வெற்றிகள், உயர் பதவி, நல்ல உடல் நிலை, திரவிய லாபம், திருமண சுபகாரியம், புகழ், தொழில் லாபம், அரசாங்க நன்மை, வழக்கு வெற்றி, திடீர் அதிஷ்டம், நோய் தீருதல், எதிரிகள் நாசம், கடன் தீரும், வாகன வசதி. நீண்ட பிரயாண வெற்றி, தொழில் லாபம், ஊதிய உயர்வு, திடீர் பிரயாணம், நண்பர் வரவு, எதிர் பாராத பொருள் வரவு, வாகனம் வாங்குதல், பதவி உயர்வு, வழக்கு தள்ளுபடி, பண வரவு, நண்பர் உதவி, மறு தாரம் அமைதல், அக்கினி பயம், ஆயுத பீடை, எதிர்பாராத செலவு, ஆலய தரிசனம், புனித தல யாத்திரை, ஆபரண சேர்க்கை.14 ஆம் திகதிக்குப்பின்பு தொழில் நாசம், வீண் செலவு, பதவி பறிபோதல், குடும்ப பிரிவு, திருடர் பயம், நண்பர் விரோதம், சனி வக்கிரம், திடீர் யோகங்கள் ஏற்படலாம்.. கூடாத நாட்கள் 31, 1,2,3




**பூரட்டாதி - 4, உத்தரட்டாதி, ரேவதி**

கல்வி முன்னேற்றம் உண்டு, எடுத்த காரியம் முடியும், வழக்கு வெற்றி, தொழில் முன்னேற்றம், காரிய சாதனை, பொருள் வரவு, நண்பர் உதவி, பண வரவு, உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு, நோய் மாறுதல், வேலை கிடைத்தல், சகோதரார்மூலம் செலவு, வீண் பிரயாணம், இடமாற்றம், உடலில் காயம் ஏற்படல், ஸ்திரி யோகம், புதிய வீடு வாங்குதல், காதல் கைகூடுதல், பந்தயங்களில் வெற்றி, பதவி உயர்வு, சேமிக்கும் எண்ணம், திருமண சுப காரியம், வாகன விபத்து, தாய் வழித்துன்பம் என்பன ஏற்படலாம். சனி வக்கிரம், திடீர் யோகம் எற்படலாம்.
கூடாத நாட்கள்: 4,5,6

# சபரி மலை யாத்திரை



மதங்க முனிவரின் வளர்ப்பு மகளான சபரி என்ற பெண் தவம் புரிந்தது நீல மலைக்காடு. சபரி தவம் புரிந்து சாயுஜ்ய பதவி பெற்றபடியினால் அவள் பெயரில் சபரிமலை என்ற திருநாமத்தைப்பெற்றது. சபரிக்கு சாயுஜ்ய பதவியை வழங்கிய மணிகண்டன் என்று கூறப்படும் ஐயப்பன் யாமும் இந்த மலையில் கோவில் கொள்வோம் என்று கூறினார்.

“பூதநாதோ பாக்கியானம்’ என்ற வடமொழி நூலில் தா்ம சாஸ்தாவின் அவதாரம் கூறப்பட்டுள்ளது. ஒரு தடவை பரமேஸ்வரன் ஐயப்பனை பக்கத்தில் அழைத்து ‘மகனே ஐயப்பா நீ அவதரித்திருப்பதே மஹிஷியின் கொடுமையைப்போக்கி அவளை சம்ஹாரம் செய்து தேவர்களுக்கு ஷேமத்தை கொடுப்பதற்காக. பூலோகத்தில் மனித உருவில் பன்னிரெண்டு ஆண்டுகள் பூமியில் வசிக்க வேண்டும். அதாவது கேரளத்தில் பம்பை நதிக்கரையிலுள்ள காட்டில் ஒரு சாதாரண பாலகனாக உருக்கொண்டு அழுகை சத்தத்துடன் கிடக்கவேண்டும். அப்பொழுது பாண்டிய வம்சதிலகம் தா்ம சிந்தனையுடனான பந்தள மன்னன் வேட்டையாடி களைத்துவரும் சமயம், குழந்தை பாக்கியம் இல்லாத மன்னன் உன்னை எடுத்து வளா்ப்பான். அதன் பின் நீ காட்டில் சஞ்சாரம் செய்யும் சமயம் மஹிஷியை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு கூறி அவா் கழுத்தில் கனகமணி மாலை ஒன்றையும் அணிவித்தாா். சிவன் மணிகண்டன் பூமியை நோக்கி புறப்பட்டாா்.

ஸ்ரீ பரசுராமன் புண்ணிய தீா்த்தங்கள் எல்லாம் ஒன்று சோ்ந்து பயன் பெறவேண்டும் என்று விரும்பி பரமேஸ்வரனை நினைத்து தவம் செய்தான். தவத்தின் பயனாகத்தோன்றியது தான் பம்பை நதி என்பது புராண வரலாறு. அந்த பம்பை நதிக்கரையில் தான் மணிகண்டன் என்று கூறப்படும் ஐயப்பன் பந்தள ராஜனால் கண்டு எடுக்கப்பட்டு பரமேஸ்வரனின் ஆணையினால் கிழப்பிராமணனின் ரூபத்தில் வந்து, ஆணையிட்டு சந்தேகம் இன்றி இக்குழந்தையை வளர்க்க. கழுத்தில் மணி இருப்பதால் மணிகண்டா என்று நாமம் சூட்டு என்று கூறினாா்.

நெடுநாளாய் பிள்ளை இல்லாத பந்தளராஜனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ராஜராஜன் என்று பெயரிட்டார்கள். மன்னன் மணிகண்டனுக்கு முடிசூட்ட எண்ணி மந்திரியை அழைத்து மணிகண்டனுக்கு முடிசூட்டப்போவதாக அறிவித்தாா். அதை விரும்பாத மந்திரி அரசியிடம் சென்று “உன் மகன் இருக்க மணிகண்டனுக்கு அரச உரிமை கொடுக்க அரசா் முடிவு செய்துள்ளாா் என்றும் அதை தடுக்க வேண்டும்” என கூற “எவ்வாறு தடுக்க முடியும்” என்று அரசி கேட்க “உங்களுக்கு தலைவலி உண்டாகியுள்ளது” என்று சொல்லும்படியும், தானே ஒரு வைத்தியனைக்கொணா்ந்து மருந்துக்கு புலிப்பால் தேவையென்று சொல்லும்படி செய்விக்கிறேன் என்றும் கூறினாா்.

அதன் பிரகாரம் புலிப்பால் கொண்டு வருவதாக மணிகண்டன் காடு செல்ல அங்கே தேவா்களைக் கொடுமைப்படுத்தி மஹிஷியைச்சந்திக்க, பகவான் தா்ம சாஸ்தா மஹிஷியை சம்ஹாரம் செய்ய பூதகணங்களுடன் புறப்பட்டாா். பூதநாதனைக்கண்ட மஹிஷி தனது கொம்புகளை நிமிா்த்திக்கொண்டு நின்றாள். பகவான் மஹிஷியின் கொம்பினைப்பிடித்து தலைக்கு மேல் மூன்று முறை சுற்றி சுழற்றி எறிந்தாா். மஹிஷியின் உடல் அழுதை நதிக்கரையில் போய் விழுந்தது. மஹிஷி சாப விமோசனம் பெற்றாள். தேவா்கள் பூமாரி பொழிந்தனா். மஹிஷி பகவானை தொழுது வேண்டி நிற்க பகவான் இரு கரங்களினாலும் அவளை தடவி தனது சோதரியாக அவளை ஏற்று தன்னுடைய சந்நிதானத்தில் இடது புறத்தில் மாளிகை புரத்து மஞ்ச மாதாதேவியாக காட்சி அளித்து வருவாய் என்று அருளினாா். பகவான் மஹிஷியை சம்ஹாரம் செய்த பின் மணிகண்டன் தன்னை எதிா்நோக்கும் பந்தள மன்னனிடம் இந்திரன் ஆண்புலியாகவும் தேவா்கள் பெண் புலியாகவும் உருவெடுத்து, மணிகண்டன் ஆண்புலி மீது அமா்ந்து மற்றும் புலிகள் சமேதராக மன்னனிடம் சென்றான். அன்னையின் நோய் தீா்த்து புலிகளை அனுப்புங்கள் என்று மன்னனை வேண்டிக்கொண்டான்.

அச்சமயம் அகஸ்திய முனிவா் தோன்றி அரசனிடம் மணிகண்டனைப்பற்றிய வரலாற்றை கூறினாா். மணிகண்டனோ நான் பூமி வந்த காாியம் முடிந்தது என்னை அனுப்புங்கள் என்றாா்- மன்னன் பகவானே தங்கட்கு ஒரு கோயில் கட்ட முடிவு செய்துள்ளேன் அதை எங்கு கட்ட என்று அரசன் மணிகண்டனிடம் கேட்டாா். அதற்கு மணிகண்டன் ஒரு அம்பை எய்து அது எங்கு விழுகின்றதோ அங்கே கோவில் கட்டும்படி ஆணை இட்டாா். அவ்வம்பு சபரிமலை போய் விழுந்தது.

மன்னன் சபரிமலையில் பதினெட்டு படிகளுடன் கூடிய கோவிலை விஸ்வகா்மாவின் துணை கொண்டு அழகாகவும் சிறப்பாகவும் கட்டி முடித்தான். அவ்வாலயத்தை இன்றும் அன்றும் மக்கள் பயபக்தியுடன் வணங்குகின்றாா்கள்.

-வதனா

# அகவை 80 இல் அன்னை!



தங்கம்மா அப்பாக்குட்டி

ஆறுமுகநாவலா் சைவத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிய பணியை சைவா்களும், தமிழ் பேசும் மக்களும் என்றுமே மறக்க மாட்டாா்கள். அந்த வரிசையில் முக்கிய இடத்தை வகிப்பவா் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவா்கள். கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்கும் அதிகமாக போரினால் பாதிக்கப்பட்ட யாழ். மண்ணில் பல அறப்பணிகளைச்சளைக்காது செய்து வருபவா்.

7.1.1925 இல் பிறந்த அன்னை ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராவாா். இலங்கையின் பல பகுதிகளிலும் ஆசிரியராக பணியாற்றியவா். பண்டிதா் பாீட்சையில் சித்தியடைந்து இலங்கையிலும் வெளிநாடுகள் பலவற்றிலும் சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளதுடன் பல பட்டங்களையும் பெற்றிருக்கின்றாா்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் இருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ துா்க்காதேவி எழுந்தருளியுள்ள ஆலயம் சுமாா் 350 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையும், ஸ்ரீ காசியில் இருந்து கொண்டு வந்த துா்க்கா யந்திரத்தை உடைய பெருமையும் பெற்றது. இவ்வாலயத்தை புனருத்தாரணம் செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்ட நிா்வாக சபையில் 1964 ஆம் ஆண்டு ஒரு அங்கத்தவராக இணைந்து கொண்ட அம்மையாா் ஆலய வளா்ச்சிக்கு அருந்தொண்டாற்றினாா்.

பின்னா் 1965-1977 வரை திருப்பணிச்சபையின் தனாதிகாாியாக கடமையாற்றிய இவா் 1977 ஆம் ஆண்டிலிருந்து நிா்வாக சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டாா். ஆலய நிா்வாகம் என்றால் அது ஆண்களையே சாரும். என்ற சமூக அமைப்பு வகுக்கப்பட்ட சமூகத்தில் ஒரு பெண்ணாக இருந்து கோயில் பணிகளை வெற்றிகரமாக நடத்தி வருபவா்.

1964 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றதை தொடா்ந்து 1968 இல் இருந்து கொடியேற்று மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. 1978 இல் புதிதாக சித்திரத்தோ், தோ்முட்டி என்பன உருவாக்கப்பட்டன. தொடா்ந்து வளவனூா் ஸ்தபதி, சிற்பக்கலைஞா்களின் உதவியுடன் இராஜகோபுர திருப்பணிவேலைகள் நடைபெற்று 17.04.1981 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாறு தெல்லிப்பழை துா்க்கை அம்மன் கோயிலின் உந்துசக்தியாக விளங்குபவா் அம்மையாா். தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழா்காலம் ஒரு பொற்காலமாக கருதப்பட்டது. அக்காலத்தில் ஆலயங்கள் தனியே வழிபாட்டு இடமாக மட்டும் இருக்கவில்லை. அவை சமூக மையமாக இயங்கி வந்தன. அதே போன்று தெல்லிப்பழை துா்க்கை அம்மன் கோவிலை சிறப்பான ஒரு சமூக மையமாக நடத்தி வருகிறாா் அம்மையாா். சைவப்பெண் பிள்ளைகளுக்கு என இல்லம் அமைத்து அவா்களை அன்னையாகக்காத்து வருகின்றாா். சைவ நூல்களை வெளியிடுவதற்கு என திருமகள் அழுத்தகம், நல்லூாில் ஸ்ரீ துா்க்கா தேவி மணி மண்டபம், நூல் நிலையம், இந்து இளைஞா் மன்றம், அன்னதான மண்டபம், திருமண மண்டபம், அன்னையா் இல்லம், யாத்திாிகா் விடுதி போன்றவற்றை நிறுவி, அனைவரையும் ஒன்றிணைத்து குறைகளையெல்லாம் நிவா்த்தி செய்து வருகின்றாா்.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவ, சைவ சித்தாந்த பீடங்கள், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை, கைதடி அரசினா் முதியோா் இல்லம் ஆகியவற்றுக்கு பல இலட்சம் ரூபா பண உதவிகளை செய்துள்ளாா். தொடா்ந்தும் செய்து வருகிறாா். இவை தவிர தென்மராட்சி, தீவகம்,வன்னி ஆகிய பகுதிகளைச்சோ்ந்த வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவா்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவருகின்றாா்.

இவ்வாறு அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவா்கள் தனது கல்விச்செம்மையாலும், ஆளுமை திறனாலும் யாழ். மண்ணுக்கு ஆற்றும் சேவைகள் அளப்பாியன. இம்மாதம் 7 ஆம் திகதி தனது 80 ஆவது அகவையைக்கொண்டாடும் அன்னை தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்பதே உலகெங்கும் வாழும் சைவா்களின் பேரவா ஆகும்.

- தீபா



தெல்லிப்பழை துா்க்காபுரம் மகளிா் இல்லப்பிள்ளைகள்

# English -lesson

காலத்துக்கு காலம் தமிழ், ஆங்கிலம் கற்பிக்கும் முறை Syllabus எல்லாம் மாறிக்கொண்டு வருகின்றது. உதாரணமாக 'அ'எழுதாமல்'ப'எழுத ஆரம்பிக்கின்றார்கள். ஆங்கிலத்திலும் 'A-apple'என்று ஆரம்பிக்காமல் வேறு alphabet இல், words இல் ஆரம்பிக்கின்றார்கள். எனவே ஒவ்வொரு பாடத்திலும் வரும் முக்கிய ஆங்கிலச்சொற்களை எழுதி Vocabulories கற்கலாம் என நினைக்கின்றேன். பாடங்கள் politics, geography, history, hygiene and physiology, mathametics, science, administration என்று எழுதத்தொடங்குகின்றேன். ஆசிரியராகிய நாங்கள் என்னதான் கற்பித்தாலும் மாணவராகிய நீங்கள் தான் ஊக்கமாக அதை விரும்பி முயற்சி எடுத்து கற்க வேண்டும். இந்த முறை உங்களுக்கு ஆங்கிலம் கற்க இலேசாக இருக்கிறதா? இல்லை வேறு முறைகள் ஏதாவது இருக்குமானால் உங்கள் அபிப்பிராயங்களை எழுதி 'தமிழ் உலகம்' ஆசிரியருக்கு அனுப்புங்கள். நாங்கள் அவற்றை கவனத்தில் எடுப்போம்.

Politics or Civics or Government (அரசியல், குடியியல்)

Politics - அரசியல், country - நாடு, Government - அரசாங்கம்.

குறிப்பு: பல நூற்றாண்டுகளுக்கு முன் உலகத்தின் எல்லா நாடுகளிலும் குடி மக்களை ராசாக்கள் ஆண்டு வந்தார்கள். படிப்படியாக குடிசனம் பெருகி வர, மக்கள் சுதந்திரமாக வாழ, மக்கள் ஆட்சி தான் சுதந்திரமான, நீதியான ஆட்சி என்று புரட்சி செய்ததால் ஒரு சில முஸ்லிம் நாடுகளை விட இப்போ உலக நாடுகள் முழுவதும் மக்கள் ஆட்சி நடைபெறுகின்றது. இம்மாற்றங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் முதலில் தோன்றியதால் மக்கள் ஆட்சிக்குரிய சொற்கள் ஆங்கிலத்திலேயே தான் உருவாக்கப்பட்டது. எனவே இச்சொற்களுக்கு காலா காலத்துக்கு மதுரை தமிழ்ச்சங்கத்தால் தமிழ் சொற்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

Democracy - ஜனநாயகம். Abraham Lincoln gave the first definition as 'by the people of the people for the people'- "மக்களின் மக்களால், மக்களுக்கு" என்று வரைவிலக்கணம் கூறினார்.

Parliament - பாராளுமன்றம், Senators - செனற் சபை, Minister- அமைச்சர், Governor General - மகா தேசாதிபதி, Prime Minister-பிரதம மந்திரி, Cabinet of Ministers - அமைச்சர் சபை, Budget - வரவு செலவுத்திட்டம், Bill - மசோதா, Government party - அரசாங்கக்கட்சி, Opposition party - எதிர்க்கட்சி, Member of Parliament (M.P) - பாராளுமன்ற உறுப்பினர், Sovereignty- தானே தன்னை ஆளும் நாடு, High Commissioner- உயர்ஸ்தானீகர், poll வாக்களித்தல், polling station - வாக்குச்சாவடி, dictator - சர்வாதிகாரி, majority- பெரும்பான்மை, minority - சிறுபான்மை, parlimentary session - பாராளுமன்ற கூட்டம், deputy minister - பிரதி அமைச்சர், election - வாக்கெடுப்பு, municipality - மாநகரசபை, urban council - நகரசபை, village council - கிராம சபை, army- இராணுவம், air force- விமானப்படை, Press- எழுத்து ஊடகம், attorney at low - சட்டத்தரணி, High courts - உயர் நீதிமன்றம், Attorny General - சட்ட மாஅதிபர், House of Lords- பிரபுக்கள் சபை, town council - நகரசபை, independence /freedom- சுதந்திரம், extremist- மிகைவாதி, French revelution- பிரான்சிய அரசியற்புரட்சி, cost of living- விலைவாசி, emergency act- அவசர காலச்சட்டம், refugee - அகதி, terrorist- பயங்கரவாதி, terrorism- பயங்கரவாதம், asylum- தஞ்சம் புகுதல், ethnic proplem - மொழி, சமயப்பிரச்சினை, peace process - சமாதான முன்னெடுப்பு, cease- fire vigilant committe-போர் நிறுத்த கண்காணிப்புக்குழு, asylum - அகதிகளின் புகலிடம், human rights - மனித உரிமை. நான் கொழும்பு மனித உரிமை நிலையத்தினால் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களுக்கு மனித உரிமை உத்தியோகத்தராக 1997- 98 வருடங்களில் நியமிக்கப்பட்டேன். இது அரச சார்பற்ற ஒரு தனியார் நிறுவனமாகும்.

I was appointed as Human Rights officer in 1997-98 for the districts of Batticaloa and Amparai by Colombo Institute of Human Rights. This institute is an (N.G.O) Non -Governmental Organization.

பயங்கரவாதிகள் என சந்தேகப்படும் எவரையும் ஆதாரம் இல்லாவிட்டாலும் விசாரணைக்கென்று பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்ய அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

The Govenment has the right to arrest anyone who is suspected as a terrorist even without evidence but for enquiry under the terrorist Act.

## மொழி- Language

அடுத்த பாடத்திற்குப்போகுமுன் சில பிரச்சினை தரும் ஆங்கிலச் சொற்களையிட்டு சொல்லித்தர விரும்புகின்றேன். Before going to other subjects and vocabularies I would like to

* tell you about a few English words that confuse even English edu cated peoples.

The words are : will, shall, would, should and could.

**will**: a) In the 2nd and 3rd persons and often in the 1st (அதிகமாக தன்னிலைச்சொற்களுக்கு)

உதாரணம்: You will regret this; They will leave at once; கேள்வியாக Will you go to the party?

b) In the 1st person (தன்னிலை) expressing a wish or in tention.

உதாரணம்: I will return soon. (விருப்பத்தை அல்லது எண்ணத்தை வெளிப்படுத்தல்)

c) Expressing desire or consent (ஆசையை அல்லது சம்மதத்தை வெளிப்படுத்தல்)

உதாரணம்: will you have a sandwich? Come when you will ;The door will not open.

d) Expressing a request or a question (விண்ணப்பத்தை அல்லது கேள்வியை வெளிப்படுத்தல்)

உதாரணம்: Will you please open the window?

e) Expressing ability or capacity- செயல்படக்கூடிய தன்மையை அல்லது அளவை வெளிப்படுத்தல்.

உதாரணம்: The jar will hold a kilo.

f) Expressing habitual or inevitable tendency (பழக்கத்தையும் தடுக்க முடியாததையும் வெளிப்படுத்துதல்.

உதாரணம்: Accidents will happen; will sit there for hours.

g) Expressing probability expectation - நடக்கக்கூடியதையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்துதல்.

உதாரணம்: That will be my wife.

**Shall**: a) In the 1st person expressing the future tense - தன்னிலையில் எதிர்காலத்தை வெளிப்படுத்துதல்.

உதாரணம்: I shall return soon.

b) emphatic expression அழுத்தமாக வெளிப்படுத்தல்.

உதாரணம்: I shall have a party, you shall not catch me again (முன்னிலை, படர்க்கையில் பாவித்தல்)

c) (In the 2nd and 3rd persons) expressing a strong. assertion or command rather than a wish -

முன்னிலை படர்க்கையில் விருப்பத்தை வெளியிடுவதை விட கட்டளை பிறப்பித்தல். உதாரணம்: thou shall not steal.

d) (In 2 nd person questions) expressing an enquiry, to avoid a form of a request.

(முன்னிலை கேள்விகள்), விசாரணையிடுதல், வேண்டுகோளாகக்கூறுவதைத்தடுத்தல்.


உதாரணம்: Shall you go to France. (continued..........)

K.W.Selvarajah, Mordan, London

# Flying a Helicopter


Continued.....

## The three flying control the cyclic stick, collective lever and pedals




## Turning Right


For a right turn the pilot reduces the angle of attack of the tail rotor so that the torque (twisting force, blue) of the main rotor pulls the tail to the left and turns the craft right.



## The Helicopter flying control


### Straight Ahead

In straight flight. the thrust of the tail rotor (red arrow) is adjusted to balance the torque of the main rotor.



## Turning left

To make a left turn the pilot increases the angle attack of the tail rotor blades to push the tail to the right



Jesuraj - London

# தமிழ் உலகம் London

## தைபிறந்தது! சமாதானம் பிறக்குமா?

இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து 55 தடைவைகள் தை பிறந்து விட்டது! ஆனால் சாமாதானம் பிறக்கமுடியாத நிலையில் இலங்கை இருக்கிறது.

குழந்தை பெறமுடியாத பெண்களுக்கு இன்றைய மருத்துவ-விஞ்ஞானத்தில் குழந்தைப் பாக்கியத்தை சோதனைக்குழாய் மூலம் பெற முடிகிறது. ஆனால் உலக நாடுகள் பல சேர்ந்து இலங்கையில் சமாதானத்தை பிறக்கவைக்கப் படாதபாடுகள் படுகின்றன. புதிய யுத்திகளையும், திட்டங்களையும் சொல்லியவண்ணம் பல வழிமுறை களையும் காட்டி வந்தபோதும், மலடியைப்பிடித்து பிள்ளை பெறுஎன்றால் எப்படி? என தற்போதைய இலங்கை அரசியல் நிலை சொல்லுகிறது. மாற்று வழிகளுக்கு இடமே இல்லை என்ற இலங்கை அரசியல்வாதிகளின் போக்கானது, மேலும் கையோங்கியபடியே செல்கிறது. அடக்கி ஆளலாம் என்கின்ற எண்ணங்களும் ஏப்பங்களும் அசையாமல் நிற்கின்றன.

இந்நிலையில் சமாதானம் பிறப்பதற்கு, கடவுளே இறங்கிவந்து சொன்னாலும் கஷ்டமாகவே இருக்கும். அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்பார்கள். சமாதானத்தை அடித்தென்றாலும் பிறக்கவைக்க வேண்டும். அல்லது விவாகரத்துப்பெற்று புதிதாக திருமணம் செய்து பிள்ளை பிறப்பதுபோல், புது மண்ணில் சமாதானத்தை பிறக்கவைக்கும் நிலைதான் இலங்கையில் தோன்றுமோ?

தை பிறந்தால் என்ன! ஆடி பிறந்தால் என்ன!! இலங்கையில் சமாதானம் முழுமையாகப்பிறக்க வேண்டுமென்றால் ஐக்கிய இலங்கை என்ற தளத்தில் இன, மத பேதங்கள் இன்றிய சமுதாயத்தை காணமுன்வர வேண்டும். அதற்கான மனப்பக்குவம் ஏற்படவேண்டும். தவறின் நாடு நாடுகளாகவே வாய்ப்பதிகம்!

சு. கிருஷ்ணதாசன்,
நிர்வாகப்பொறுப்பாசிரியர்,
இலண்டன்.

தமிழ் உலகம் சஞ்சிகையில் அறு சுவை உணவு போல எல்லா விதமான நன்மை பெறக்கூடிய கருத்துக்கள் உள்ளடங்கி இருக்கின்றன. தமிழ் மக்கள் எத்தனை T.V சனல்கள் வந்தாலும் வாசிப்பதை தவற விட மாட்டார்கள். இதில் தமிழ் உலகம் சஞ்சிகை மட்டும் என்ன விதி விலக்கா?

மேலும் புதுப்புது தகவல்களைத் தொடர்ந்து அறியத் தாருங்கள். பயன் உண்டு. மேலும் நீண்ட காலம் இப்பணி தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன். வளர்க தமிழ் உலகம்.

திருமதி புவனம் தர்மரட்ணம்,
ஹரோ

## தமிழ் உலகம்

தமிழ் உலகம் சஞ்சிகை
தரமான மாத இதழ்
தமிழர்களின் இனிய இதழ்
தமிழும் சமயமும் சமூகமும்
தரணியில் நடைபெறும் விடையங்களும்
தவறாது திரட்டித்தரும்
தங்கமான தமிழ் இதழ் இது!.........

இல்லத்திற்கும் பயன்படும்
இலங்கையிலும் வெளி வந்து விடும்
இதமான சுவையான இதழ் இது
இளம்சிறார்களுக்கும் கலைஞர்களுக்கும்
இல்லத்தரசிகளுக்கும் பயன்படும் - தமிழ்
இழந்தோரும் படித்துப்பயன்பெறும்
இனிய தமிழ் உலக சஞ்சிகை இது!.....

அரசியலும் தாய் நாட்டின்
அவலங்களையும் எடுத்துரைக்கும்
அசத்தும் அற்புதமான
இனிய தமிழ் ஏடு இது
அவலங்களுடன்
வாழும் நம்மவர்களுக்கு அறிவை
அள்ளிக்கொடுத்து,
சிந்தனையைத்தூண்டி
அன்பை ஊட்டி, ஒற்றுமையை வளர்ப்பதும்
அத்தனை அம்சங்களும்
சிறப்போ..... சிறப்பு!

அன்போடு வாழ்த்துபவர்:-
வ.சிவராசா,
பிரதம ஆசிரியர்
'மண்' கலை,இலக்கியசமூக சஞ்சிகை
ஜேர்மனி

# செய்தொழில் தெய்வம் சிரிப்பு சீவியம்

ஜனவரி 10 ஆம் திகதி உலக சிரிப்பு தினமாகும். இத்தினத்தில் தமிழ் உலகம் எளிதில் மறந்து விட முடியாத கருத்தோவியர் 'சிரித்திரன்' எஸ். சிவஞானசுந்தரம் அவர்களை நினைவு கூருதல் பொருத்தமானது. 1996 மார்ச் மாதம் தனது சொந்த ஊரான கரவெட்டியில் 72 ஆவது வயதில் அவர் காலமானார். அவர் தன்னைச்சூழவுள்ள சமூகத்தை உன்னிப்பாக பார்த்தார். அவர் மனத்தை உறுத்திய, வேதனைப்படுத்திய விடயங்களை நகைச்சுவையாக வெளியிட்டார். அவரின் கருத்தோவியங்கள் அவற்றைப்பார்த்தவர்களை முதலில் சிரிக்க வைத்தன. பின்னர் ஆழமாக சிந்திக்கவும் வைத்தன. அவ்வாறு சிந்தித்தவர்கள் அவற்றில் மறைபொருளாக கிடந்த அர்த்தங்களை புரிந்து கொண்டதும் மீண்டும் சிரித்தனர். அவரின் கருத்தோவியங்கள் வாசகர்களைத் தெளிவு பெறச்செய்தன. அவர் மறக்க முடியாதவரானார்.

எமது தாயகத்தில் கருத்தோவிய கலையைத்தன் வாழ்வாகக்கொண்டு வாழ முற்பட்டவரே சிரித்திரன் சுந்தர். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் பிரித்தானியப்பிரதமர் சர்ச்சிலும் ஹைதராபாத் நிசாம் மன்னனும் இந்தியாவுக்கு எதிராக சதியாலோசனை செய்வது போன்ற கருத்தோவியம் ஒன்றையே அவர் முதன் முதலாக வரைந்து அனுப்பியிருந்தார். அது BLITZ பத்திரிகையில் பிரசுரமாகி, இந்தியாவில் தேசிய மட்டத்தில் புகழ் பூத்த கார்டுன் ஓவியர்களாக விளங்கிய சங்கர்,ஆர்.கே.லட்சமணன்,அபு, பால் தக்கரே போன்றோருக்கு மத்தியில் எம்மவராகிய சுந்தரும் தன் கருத்தோவியங்களை அக்காலத்தில் பம்பாய் பத்திரிகைகளில் உலவ விட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சுதந்திரமடைந்திருந்த காலத்தில் அமரர் சிவஞான சுந்தரம் அவர்கள் தாயகம் திரும்பியதும் தொடர்ந்தும் தன்னுள் இரண்டறக்கலந்து விட்ட திறமையை இத்துறையில் வெளிக்காட்டத்தவறவில்லை. இலங்கை சுதந்திரத்தைப்பெற்றுக்கொண்ட நாள் முதல் தமிழரின் அரசியல் உரிமைகள் ஒவ்வொன்றாகக்களையப்படும் வேளைகளில் எல்லாம் அமரர் சிவஞான சுந்தரம் அவர்கள் தன் தூரிகையால் துணிச்சலான கருத்தோவியங்களை வரைந்து கொண்டேயிருந்தார்.

அன்றைய காலகட்டத்தில் தினகரன் ஆசிரியராகவிருந்தவரான அமரர் கைலாசபதி அவர்களின் ஆதரவுடன் இவரது தூரிகைகள் செயற்பட ஆரம்பித்தன. 'சவாரித்தம்பர்' என்ற அந்த அழியாத கார்டுன் கதாபாத்திரம் உருவான வரலாறு இதுவாகும். 'சவாரித்தம்பர்' பார்ப்பதற்கென்றே பத்திரிகை வாங்கியோர் பலர். ஈழத்தமிழரின் கேலிச்சித்திரக்கலை வரலாற்றில் சவாரித்தம்பர் என்றும் இருப்பார். சவாரித்தம்பரைத் தொடர்ந்து அமரர் சிவஞான சுந்தரம் அவர்களின் பாத்திரங்களின் படைப்புகள் பல தோன்றின. சின்னக்குட்டி. மைனர் மச்சான், மிஸ்டர் அண்ட் மிசிஸ் டாமோடிரம், மகுடியார், மெயில் வாகனத்தார், ஸ்ரீமான் செல்லக்கிளி, வேலரும் மயிலரும் என்று மானிடநேயமும் சமூக நோக்கும் கொண்ட கற்பனைப்பிறவிகளாக வளர்ந்து கொண்டே சென்றன.

மைனர் மச்சான் என்ற பாத்திரம் சமகால, படித்த வேலையற்ற ஈழத்து இளைஞன் ஒருவனின் உருவகமாகும். அரசாங்க அலுவலகப்படிகளில் ஏறி இறங்கி, பதவி வெற்றிடம் இல்லை என்ற கதவடைப்புக்களை தரிசித்தும் மனம் தளராமல் வாழ்பவர். காதலுக்கு தூண்டில் போடுவார். அதிலும் மைனர் மச்சானுக்கு அதிஷ்டம் கிட்டாது. தொடர்ந்தும் நம்பிக்கை ஒளியுடன் தொடர்வார். சோகம் சுடும் வேளையில் மதுபானத்தை நாடுவார்.


மிஸ்டர் அண்ட் மிசிஸ் டாமோடிரம் என்ற இருவர் பாத்திரம் சற்று வித்தியாசமானது. பிறப்பால் தமிழ் இனத்தவராயினும் இத்தம்பதியினர் ஆங்கில மோகத்தில் அலைபவர்கள். அடுக்களை மொழி கூட அவர்களுக்கு ஆங்கிலமாகவே இருந்தபோதும் அவர்கள் தமிழ் கலாசாரத்தில் அக்கறை காட்டினார்கள். தமிழ் கலை கலாசாரங்கள் பற்றி மிசிஸ் டாமோடிரன் எழுப்பும் வினாக்களுக்கு மிஸ்டர் டாமோடிரன் தானே தமிழ்க்கலாசாரத்தின் பாதுகாவலர் போன்று பதிலிறுப்பார். ஒரு தடவை மிசிஸ் டாமோடிரன் கேள்வி எழுப்புகின்றார். What is கடைச்சங்கம் darling? என்று. மிஸ்டர் டாமோடிரன் பதிலளிக்கின்றார்.அது சங்கக்கடை (Corporative stores) என்று. தமிழரின் பாரம்பரியம் பற்றி எதுவுமே அறிய விரும்பாத தமிழர்களை சுந்தர் அம்பலப்படுத்திய விதம் அது.

'செய்தொழில் செய்வம் சிரிப்பே சீவியம்' என்ற பதாதையுடன் இவரது சிரித்திரன் சஞ்சிகை 1965 இல் கொழும்பில் பிரசுரம் ஆகி வந்தது.

அமரர் சிவஞானசுந்தரத்தின் சிரித்திரன் கருத்தோவியங்கள். அரசியலில் மட்டுமன்றி சமூகப்பிரச்சினைகளையும் சமூகத்தின் வாழ்க்கை முறைகளையும் வைத்து அமைந்தமை குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.இது சுந்தரின் தனிச்சிறப்பு. இவருடைய சிரித்திரன் கார்டுன் படிமங்கள் ஆக்க இலக்கியத்தைப்போன்று காலத்தின் கண்ணாடியாகவும், மண்வாசனையுடனும் அமைந்துள்ளன. அதே வேளை, பல கருத்தோவியங்கள் காலத்தையும் மேவி வாழும் தன்மையுடையனவாக காணப்படுகின்றன. இவையே சிரித்திரன் சுந்தரை அமரக்கலைஞராக எம்மிடையே நீண்ட காலம் வாழ வைத் திருக்கின்றது.

-நீரன்
















# தமிழ்உலகம் London

**வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்**

**அனைத்துலக தமிழ் மாத சஞ்சிகை**

Annual Subscription Application form

International Tamil Monthly Magazine

ஒரு வருடத்திற்கு £12 மட்டுமே

For one year £12.00 only

Name: ..................................................................

Address: ..............................................................

...............................................................................

...............................................................................

Tel: ......................................................................

E-Mail : ................................................................

Signature: .........................................................

Date: ................/.............................2004

சந்தாக்கட்டணம் : காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டணமாகவோ அனுப்புவதாயின் Tamilulakam என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

Subscription payments : Cheques and postal orders made payable to: Tamilulakam

அனுப்ப வேண்டிய முகவரி:

Tamilulakam
International Tamil Magazine
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom
Tele : 0044 20 8455 9001 Fax : 0044 20 8731 7870
E - mail : tu@globallanka.co.uk


இலங்கை வாசகர்கள் சந்தாக்கட்டணத்தை காசோலைகளாக அனுப்புவதாயின் Global Investment lanka (Pvt)Ltd என்னும் பெயருக்கு எழுதி No: 329, Galle Road, Bambalapitiya, Colombo-4 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் கட்டளைகளை அனுப்பு பவர்கள் Havelock Town அஞ்சல் அலுவலகத்தில் மாற்றுவதற்கு வசதியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

'தமிழ் உலகம்' வெளியாகும் நாடுகளும் அவற்றுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்களும்

Annual Subscription including postages

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |



# நிழல் யுத்தம்

*ஹீரோ விக்ரம் என்றால் நடிக்க மறுத்துவிடுகின்றார் ஜோதிகா. இப்படித்தடை போட்டவர் வேறு யாருமல்ல, ஜோதிகாவின் அன்புக்குரிய காதலர் சூர்ய நடிகர் தான்.

# திரைவல

* இயக்குர் சுசி கணேசனின் இயக்கத்தில் தான் நடிக்கும் 'சக்கர' படத்தில் ஜோடியாக ரீமா சென் னைப்போடும்படி சிபாரிசு செய்துள்ளாராம் பிரசாந்த்.

*புலம்பெயர் மண்ணில் வாழும் ஒரு கணவன்-மனைவி இருவருக்கிடையிலான உறவு, இருவருக்குமிடையில் நிலவும் நிழல் யுத்தம் பற்றிய கதையொன்றை 'நிழல் யுத்தம்' என்ற பெயரில் படமாக எடுத்துள்ளார் ஐரோப்பிய நாடொன்றில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர் அஜீவன். இப்படத்தை அவரே கதை, திரைக்கதை, வசனம் எழுதி தயாரித்துள்ளார்.

*கமல்ஹாசனும் ரஜினிகாந்தும் சமகாலப்போட்டியாளர்கள். இரண்டு பேரின் ரசிகர்களுக்குமிடையில் இதே போட்டி மனப்பான்மை நிலவிவருகின்றது. ஆனால் எதிர்வரும் புது வருடத்தன்று இரண்டு பேரின் படங்களுமே வெளிவரவுள்ளன. கமலின் 'மும்பை எக்ஸ்பிரஸ்' ரஜினியின் 'சந்திரமுகி' ஆகிய இரண்டுமே போட்டிக்கு தயாராகி வருகின்றன. சந்திரமுகி படத்தில் கதாநாயகியாக நடிக்க பலரும் போட்டி போட்டுக்கொண்டிருக்க, நயன்தாராவுக்கு அந்த அதிர்ஷ்டம் கிட்டியிருக்கின்றது. வஞ்சகம் செய்யாமல் ஜோதிகாவுக்கும் படத்தில் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. 'பாபா' படத்தில் விட்ட இடத்தை இப்படத்தின் மூலம் பிடித்துவிடுவதே ரஜினியின் இலட்சியம். இதற்கென உருவத்திலும் சிரத்தை காட்டி 10 வயது குறைந்திருக்கின்றார். 'தர்மத்தின் தலைவன்' படத்தில் இணைந்த வெற்றிக்கூட்டணி பிரபு-ரஜினி, இப்படத்தில் ஒன்றிணைகின்றனர்.



அடுத்த படத்திலும் மனீஷாவை நடிக்கவைத்து விட்டார் கமல்.



மும்பை எக்ஸ்பிரஸ்
கமல்-மனீஷா

*கப்டன் சிப்பாயா கின்றார். என்ன புரியவில்லையா? ரோஜா கம்பைன்ஸ் தயாரிப்பில் உருவாகும் புதிய படம் தான் 'சிப்பாய்'.இதில் கதாநாயகனாக நடிப்பவர் விஜயகாந்த்.

*தன் மகனை ஹீரோ வாக்க முயன்று வருகின்றார் நடிகர் வடிவேலு.



நயன்தாரா, ரஜினிகாந்த் படம் - 'சந்திரமுகி'

*தற்போது விஜய் நடிப்பில் வாகி வரும் 'சச்சின்'. படம் டமான பூஜையுடன் ஆரம்பமா அம்சமான காதல் கதை என் பட்ட போதும் 90 ஆம் ஆண் பகுதியில் ரஜினிகாந்த் நடித்த யான 'ராஜா சின்ன ரோஜா' கதை என்று ஒரு சிலரும், ' வளே' படத்தின் கதையைப் என்று ஒரு சிலரும் கூறிவரு

*தற்போது வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் 'மகா படத்தில் அரசியல்வாதிகள படி விளாசித்தள்ளி வசன வெளிப்படையாக சொல்லி "அப்படியென்ன இல்லாத உண்மையைச்சொல்வ

*நடிகர் வி படம்-'சுக்கிரன் விஜய் கெ

*சா கப

*'திருப்பாச்சி'படத்தில் விஜய்யின் தம்பியாக நடித்துக்கொண்டிருக்கும் மலேஷியா வாசுதேவனின் மகன் யுகேந்திரன். கூடவே மூன்று படங்களில் கதாநாயகனாக நடித்து வருகின்றார். வாரிசு நடிகர்களில் இவர் காட்டில்தான் அடைமழை.



* இதுவரை நடித்திராத வில்லன் வேடத்தில் 'பேர் அன்ட் லவ்லி' படத்தில் நடித்து வருகின்றார் அப்பாஸ்.

*'எம்.குமரன் சண் ஒப் மகாலக்ஷ்மி' படம் சுமாராக ஓடியதால் நம்பிக்கையோடு 'மழை'யில் ஒப்பந்தமாகிவிட்டார் ரவி.



ரவி

## இதைக்கேளுங்க.....!

ிஜய் நடிப்பில் உரு
சச்சின்'. படம் பிரமாண
புடன் ஆரம்பமானது.
தல் கதை என்று கூறப்
90 ஆம் ஆண்டு காலப்
னிகாந்த் நடித்து வெளி
சின்ன ரோஜா' படத்தின்
ஒரு சிலரும், 'ப்ரியமான
ின் கதையைப்போன்றது
சிலரும் கூறிவருகின்றனர்.





ாது வெளிவந்து சுமாராக
டிருக்கும் 'மகா நடிகன்'
அரசியல்வாதிகளை கண்ட
சித்தள்ளி வசனங்களைப்பேசியிருந்தார் நடிகர் சத்யராஜ். "இப்படி
டயாக சொல்லியிருக்கின்றீர்களே பயமில்லையா?" என்று கேட்டால்,
யன்ன இல்லாததைச்சொல்லி விட்டேன் எல்லாம் உண்மைதானே.
மையைச்சொல்வதற்கு எப்பொழுதுமே நான் தயங்குவதில்லை" என்கிறார்.

*நடிகர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ சந்திரசேகரனின் 60ஆவது படம்-'சுக்கிரன்'. படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் ரவி கிருஷ்ணா. விஜய் கௌரவவேடத்தில் நடிக்கப்போகின்றார்.




*சர்வதேச விருதைக்குறிவைத்து சந்தோஷ் சிவன் எடுக்கப்போகும் அலிகள் பற்றிய படத்தில் குஷ்புவை நடிக்கக்கேட்டுள்ளனர்.

*நடிகர் பிரகாஷ்ராஜ் இப்போது 'கண்ட நாள் முதல்' என்ற படத்தை எடுத்து வருகின்றார்.


*தனுஷ் திருமணத்தால் சோர்ந்து போய் சோக கீதம் பாடிக்கொண்டிருப்பார் என்று நினைத்தால் அவரோ அசத்த ஆரம்பித்து விட்டார் என்று சிம்பு பற்றி திரையுலகினர் குறிப்பிடுகின்றனர். 'தொட்டி ஜெயா' படத்தில் பிஸியாகியுள்ளதோடு தொடர்ந்து சொந்தப் படம் ஒன்றையும் எடுக்கவுள்ளார்.

விஜய்யின்
ண்டிருக்கும்
ன் மகன்
ன்று படங்
நடித்து வரு
ளில் இவர்
ழ.



சிம்பு
படம் - தொட்டிஜெயா'

# சினிமா உலகம் 1939 முதல் 1960 வரை



K.W.செல்வராஜா

**ஹரிச்சந்திரா:** P.U.சின்னப்பா, P. கண்ணாம்பா,T.S. பாலையா, கிருஷ்ணன், மதுரம் நடித்த படம். கதை எல்லோரும் அறிந்த கதைதான். இப்படத்தில் P.U.சின்னப்பாவினதும் P.கண்ணாம்பாவினதும் நடிப்பு அவர்கள் ஹரிசந்திராவாகவும் சந்திரமதியாகவும் மாறி விட்டது போல் இயற்கையாக இருந்தது. இதை சிவாஜி கணேசன் நடித்த ஹரிச்சந்திராவுடன் ஒப்பிட்டால் இருவரது 'உத்தம புத்திரனை' போல் இப்படத்திற்கு புள்ளிகள் கூடுதலாகக் கிடைக்கும் என்பது வெள்ளிடைமலை.

**குபேர குசேலா்:** P.U.சின்னப்பா, T.R. ராஜகுமாரி நடித்த படம். ஏழை குசேலர் கண்ணன் அருளால் செல்வந்தர் ஆனபின் அவர் படாடோப வாழ்க்கையை சித்தரிக்கும் படம். ஏழையாய் இருந்தபோது அவர் கண்ட நிம்மதி அழிந்து விட்டதை கடைசிக்காலத்தில் உணர்ந்து தனக்கு பழைய எளிமை வாழ்வே வேண்டும் என்று கண்ணனிடம் கேட்டு, பெற்று நிம்மதி அடைகிறார். அக்காலத்தில் P.U.சின்னப்பா இப்படத்தில் பாடிய "மாலை சூட வந்தேன் மல்லிகா! மனதுவை மாசில் குசேலன் உந்தன் நேசன் மண மாலை சூட" என்று பாடும் பாடல் பிரபல்யமானது. என் ஒரே அண்ணன் திரு.K.S.அருள்ராசாவின் விவாகம் பேசியிருந்த காலத்தில் இப்பாடலை அவருக்கு கிண்டலாகப்பாடியதை மறக்க முடியாது. ஏனெனில் அவரின் மனைவியின் பெயர் மல்லிகா.

**மங்கையற்கரசி:** இதுவும் P.U.சின்னப்பா, P. கண்ணாம்பா நடித்த படம். இக்கதை தமிழ் இலக்கியத்தில் உள்ளது. தாசி லோலனான P.U.சின்னப்பா ஒரு முறை இருட்டில் ஒரு பெண்ணிடம் முறை தவறி நடக்க முயலும்போது அப்பெண்ணின் குழந்தைகள் பால் குடிக்கும் அவயத்திலிருந்து அவன் முகமெல்லாம் பால் பாய்ந்து தெளிக்க அப்போது தான் அப்பெண் தன் சொந்த தாய் என்பதை உணர்ந்து வெட்கி ஓடி அன்றிலிருந்து இப்பழக்கத்தை விட்டு திருந்தி வாழ்கின்றான். நல்ல நடிப்பும் படிப்பினையான படமும்.

**சுதர்சன்:** இதுவும் P.U.சின்னப்பா நடித்த இந்து சமயக்கதை, கிருஷ்ணனின் பக்தனான சுதர்சன் தன் வீட்டில் களியைப்பிசைந்து கொண்டிருக்கும்போது அவர் குழந்தை தவழ்ந்து வந்து அவர் காலின் கீழ் வர பக்திப்பரவசத்தால் தன்னையும் மறந்து குழந்தையையும் சேர்த்து பிசைய குழந்தை இறந்து விடுகின்றது. மனைவி வந்து கண்டு அவரை உலுப்பியபோது தான் இவ்வுலகத்துக்கே அவரது சிந்தனை வந்தது. பின்னர் கண்ணன் அருளால் குழந்தை உயிரோடு வருகின்றது. உணர்ச்சி மிக்க நல்ல நடிப்புள்ள பக்திப்படம்.

**என் மகன்:** கிருஷ்ணமூர்த்தி, U.R ஜீவரெட்ணம் நடித்த படம். இதில் U.R. ஜீவரெட்ணம் ஒரு தாதியாக வருகின்றார். அவரின் பழைய பாடலான "தெருவில் வாராண்டி தெருவில் வாராண்டி வேலன் தேரில் வாராண்டி" ஞாபகத்துக்கு வரக்கூடும். அவரின் இனிமையான பாடல்கள் பல இப்படத்தில் உண்டு.

**சுகம் எங்கே?:** K.R ராமசாமி நடித்த படம். இதில் கதாநாயகனாக வருகிறார். இப்படமும் பாடல்களுக்காக பிரசித்தி பெற்றது. "செந்தமிழ் நாட்டுச் சோலையிலே சிந்து பாடித்திரியும் பூங்குயிலே தென்றலடிக்குது என்னை மயக்குது தேனமுதே இந்த வேளையிலே" என்ற ராமசாமியின் பாடல் இனிமையும் நல்ல மெட்டும் கொண்டது. அக்காலத்தில் நான் சென்ரல் கொலிஜில் படிக்கும்போது பாடசாலை மத்தியில் நடக்கும் துடுப்பெடுத்தாடும் (Cricket) போட்டிகளின்போது "சென்ரல் அடிக்குது வின்சன்ரை மயக்குது" என்று பாடுவோம். (வின்சன்ற் அருகில் உள்ள பெண்பாடசாலை)

**ரத்த பாசம்:** அக்காலத்தில் தமிழ் நாட்டு நாடக சபாக்களில் T.K.S. சகோதரரின் நாடகசபா பிரபல்யம் அடைந்திருந்தது. இதை சண்முகம், பகவதி என்னும் சகோதரர் நடத்தினார்கள். நாடகமாக நடித்த இந்தக்கதையே 'ரத்த பாசம்' என்னும் சினிமாப்படமாக வெளிவந்தது. இதில் T.K. .சண்முகம், T.K.பகவதி மிகவும் திறம்பட நடித்துள்ளார்கள். சண்முகம் ஒரு சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியராக வந்து கதாநாயகியை காதலிக்கின்றார். இக்கதை இரு சகோதரரையும் அவர்கள் பாசத்தையும் சித்தரிக்கும் கதையாகும்.

**இன்ஸ்பெக்ரர்:** இப்படத்திலும் T.K. .சண்முகம்,T.S. பகவதி திறம்பட நடிக்கின்றார்கள். T.K.சண்முகம் பொலிஸ் இன்ஸ்பெக்ரராக வந்து மிகவும் திறமையாக நடிக்கின்றார். அக்காலத்து நாடகமேடை நடிகரல்லவா? இப்படத்தில் வரும் இனிய பாடலான "எண்ணும் போதிலே இதயம் வேகுதே எந்தன் வாழ்வில் அன்பு கொண்டால் துன்பமே தானா?" A.M. ராஜாவும் ஜிக்கியும் ஆரம்பகாலத்தில் பாடியுள்ளனர். என் மனைவிக்குப் பிடித்தமான பாடல். என் பிள்ளைகளும் பொதுவாக எல்லோரும் இப்பாடலை விரும்பிக்கேட்பார்கள். (தொடரும்)

கே.டபிள்யூ.செல்வராசா, மோடன், இலண்டன்.



“என் அன்பு புனிதமானது. அதுக்கு மதமோ, பணமோ குறுக்கே நிற்க முடியாது. ஆனால் அப்பாவை இப்போதைக்கு சமாளிக்க முடியாது. என்ரை காதல் விவகாரம் தெரிஞ்சால் எனக்கு சிறைவாசம் தான். முதலில் எனக்கும் ஒரு வேலை கிடைக்கட்டும். அதன்பின் அப்பாவைச்சமாளிக்க என்னால் முடியும் என்று நினைக்கிறன். அதுவரை பொறுத்துக்கொள்ளுங்கோ” என்று கெஞ்சினாளாம் அவள்.

“அர்ச்சனா எங்கடை படிப்பும் முடிஞ்சு போய்ச்சுது. உன்னை என்னால் சந்திக்கவும் முடியாது. உன் அப்பா உனக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்பார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் தான் இலவு காத்த கிளியாக ஏமாறப்போகிறவன்” அவர் தன் அமைதியை இழந்து பேசினாராம். “காதலுக்கு பொறுமை தேவை. ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கக்கூடாதா அன்வர்” அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாளாம்.

“உன் பொறுமையும் நீயும் அது உனக்குத்தான் சரி. பொறுமை,பொறுமை என்று காத்திருந்து உன்னை இழந்துவிட நான் தயாராயில்லை. உன்னை இன்னொருவனுக்குத் தானம் பண்ணிவிட்டு தேவதாஸ் மாதிரி ‘உலகே மாயம் வாழ்வே மாயம்’ என்று பாடிக்கொண்டு திரிய நான் தயாராயில்லை. ஆனபடியால் நானே உன் அப்பாவிடம் உன்னை எனக்குத் தரும்படி கேட்கப்போகிறேன்” அன்வர் உறுதியுடன் கூறினாராம்.

“வேண்டாம் அன்வர். அப்பா உங்கள் மனம் நோகும்படியாக நாலு வார்த்தை சொல்லி விட்டாரென்றால் அதைத் தாங்கிக்கொள்ளும் வல்லமை எனக்கில்லை”

“அப்ப எங்கடை கலியாணமும் பிள்ளையார் கலியாணம் எண்டு சொல்லேன்”

“என்மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லைத்தானே அன்வர்”

“நம்பிக்கையும் நம்பிக்கை இல்லாததும் வெறும் பேச்சோடு போகட்டும். எனக்கு நீ தேவை. அதுக்காக உன் அப்பாவிடம் நான் கேட்கப்போகிறேன். அதை நீ ஏன் மறிக்கின்றாய்?”

“நான் மறிக்கவில்லை அன்வர். காயோ பழமே அதையும் நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள்”

“எனக்கு நீ, உனக்கு நான்.அதுக்குக் குறுக்கே என்ன நிண்டாலும் எனக்குப் பிடிக்காது. உனது அப்பாவோடு கதைத்து எனக்கொரு நல்ல முடிவு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு”

“இப்படி ஒரு முடிவு நீங்கள் எடுத்தபின் நான் எப்படித்தடுக்க முடியும்?”

இப்படி இருவரும் பேசி முடித்து விட்டுப் பிரிந்து சென்று விட்டனராம்.

“இதன் பின் என்ன நடந்தது மாமா?” மலர்விழி திகைப்புடன் கேட்டாள்.

“அன்வர் விடவில்லை. மறு நாள் என் வீட்டுக்கே வந்து விட்டார்” அவர் கதவைத் தட்டியபோது,

“யாரது நான் குரல் கொடுத்தேன். என் குரல் அதிகாரத்தொனியில் உள்ளிருந்து ஒலித்தபோது அந்தக்குரலுக்குரியவர் நான் தான் என்பதை அன்வர் உணர்ந்து கொண்டாராம். சிறிது நேரத்தில் நான் கதவைத்திறந்து கொண்டு அங்கு போனேன். எனது முகத்தில் கடுமை தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் என்னைக்கண்டதும் அன்வர் சற்றுத் தடுமாறிப்போனார் என்று நினைக்கிறேன். ஆனால் சமாளித்துக்கொண்டு அவர் என்னுடன் பேசினார்.

**8**

“ஐயா என் பெயர் அன்வர். உங்கள் மகள் அர்ச்சனாவோடு கம்பஸில் ஒன்றாகப் படித்தவன்” தன்னை என்னிடம் அறிமுகஞ் செய்தார் அன்வர்.

“அர்ச்சனாவோடு படிச்சது இருக்கட்டும். ஏன் இவ்வளவு தூரம் என் வீடு தேடி வந்தாய். அதைச்சொல்லு” நான் கடுமையாக நின்றேன்.

“நான் வயது வந்த ஆண்பிள்ளைகளை வீட்டுக்குள்ளே எடுப்பதில்லை. நோட்ஸ் கொப்பி, புத்தகம் ஏதாவது அவளிடமிருந்து வாங்கவேண்டும் என்றால் சொல்லு. நானே வாங்கித்தந்திடுறேன்” என்று சொன்னேன்.

“ஐயா நான் அர்ச்சனாவிடம் வரவில்லை. உங்களுடன் தான் ஒரு முக்கிய விடயம் பேசவேண்டும் என்று வந்தனான்” அன்வர் பயத்தோடு சொன்னார்.

“என்னிடம் அப்பிடி என்ன முக்கிய விஷயம். எனக்கு நிறைய வேலை இருக்கு. நிற்கக்கூட நேரம் இல்லை. விஷயத்தைச்சுற்றி வளைக்காமல் சொல்லு” நான் அவசரப்படுத்தினேன்.

அன்வரின் உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டியது. தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு “உங்கடை மகளும் நானும் ஒருவரை ஒருவர் விரும்புறம். எங்கள் இரண்டு பேரையும் ஒன்று சேர்த்து வைக்க வேண்டும் என்று கேட்கத்தான் உங்களிடம் வந்தேன்” என்று என்னிடம் கேட்டார் அன்வர்.


ஆனால் என் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. “எங்கள் குடும்பம் இனம், மதம் என்ற ஒரு வரையறைக்குள் வாழும் குடும்பம். அந்த வரையறையை மீறுவதும், மானத்தை இழப்பதும் ஒன்று தான் எங்களுக்கு. நாம் வாழை மரம் போன்றவர்கள். தன் குலையை இழந்தால் மீண்டும் காய்க்காத தவமுடையது அது. நாமும் எமது குடும்ப மானத்தை, அதன் கௌரவத்தை இழந்தால் வாழ மாட்டோம். இனிமேல் என் மகளை மறந்து விடு. அவளோடு கதைக்கவோ கடிதத்தொடர்பு வைக்கவோ கூடாது. வைத்தால் தண்டனை உனக்கல்ல. அர்ச்சனாவுக்குத்தான் என்பது நினைவிருக்கட்டும்” என்று சொல்லி கதவைச்சட்டென்று சாத்தினேன் நான்.

“அர்ச்சனா சொன்னதைக்கேட்டோமா? சில காலத்தின் பின் அவரோடு கதைத்திருக்கலாம். நான் அவசரப்பட்டு விட்டேன் போலிருக்கிறது. பாவம் அர்ச்சனா அவளுக்கு இதனால் எத்தனை நெருக்கடியோ தெரியாது. அவள் தண்டிக்கப்படக்கூடாது. இனிமேல் அவளோடு தொடர்புகள் வேண்டாம். காலம் கனிந்து வரும்போது பார்ப்போம்” என்று மனதுக்குள் புலம்பியபடி சென்று விட்டாராம் அன்வர்.

அதன் பின் அன்வர் தும்பறைப் பல்கலைக்கழகம் சென்று அங்கு விரிவுரையாளராக்கடமை ஏற்றாலும் அவரது மனதில் நிறைந்திருந்த அர்ச்சனாவின் நினைவுகள் அவ்வப்போது அவர் மனதை ஆட்டிப்படைத்து விடுமாம். அர்ச்சனா பல தடவை சொல்லியும் கேளாது அன்வர் என்னோடு கதைத்ததை நினைத்து நீ என்று நினைத்து நெருப்பைக்குடித்து விட்ட உணர்வில் துடித்துப்போவாராம்.

“என் மனதுக்கினிய அழகிய, வாச

முள்ள ஒரு மலர்தான் அவள். ஆனால் அவ்ளைச்சுற்றி என்னை நெருங்க விடாமல் தடுப்பது




முள் அல்ல முள் வேலி அல்லவா?'' என்று தடுமாறிய அன்வர் "என் விழியே எனக்கெதிராக விழி நீரில் கதை எழுதி விட்டதே. இது விதியா அல்லது சதியா என்பது தான் எனக்குத் தெரியவில்லை'' என்று தான் கலங்கியதாக அவர் எனக்குச்சொன்னார்.

காலம் கரைந்து கொண்டிருந்தது. அன்வர் தும்பறைப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக ஒரு வருடம் கடமையாற்றிய பின் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் தமிழ் ஆசிரியராக வேலை கிடைத்ததாம்.

நான் அவரிடம் சென்ற போது அவர் ஆசிரியராகியும் ஏழு வருடங்கள் ஓடி விட்டதாம். அப்போது அர்ச்சனா தனக்குக் கிடைப்பாள் என்ற நம்பிக்கையை கூடத் தான் இழந்து விட்டதாக அவர் என்னிடம் கூறினார்.

"ஐயா இத்தனை ஆண்டுகளின் முடிவில் நான் அவளை மறந்திருப்பேன் என்று நினைக்கின்றீர்களா? இல்லவே இல்லை. நான் என் கற்பித்தல் தொழிலின் மடியில் இருந்ததாலும் உங்கள் கௌரவப் பிரச்சினையாலேற்பட்ட பிடிவாதத்தால் நான் தளர்ந்து போனேனே ஒழிய அவளை மறந்து விடவில்லை. என்ன செய்கிறாளோ, ஏது செய்கிறாளோ என்று நான் ஏங்காத நாள் கிடையாது ஐயா'' என்று அன்வர் என்னிடம் சொன்னார் மலர்.

"மாணவர்களை மனிதனாக்குவது தான் கல்வி. அத்தகைய ஒரு புனிதமான தொழிலை ஏற்றுள்ள நான் என் கவலைகளை ஒதுக்கி வைத்து விட்டு என் கடமையைச்செய்ய வேண்டியிருந்தது. அவ்வளவு தான்'' என்று தன் கதையை மீண்டும், மீண்டும் சொன்னாரே ஒழிய அன்வர் என்னிடம் எதையும் கேட்பதாயில்லை.

"தம்பி நீங்கள் உங்கள் கதைகளைச் சொல்லிக் கொண்டு போறியளே ஒழிய எங்கள் பக்கக் கதைகளைக் கேட்கிறியள் இல்லை. அர்ச்சனாவைப்பற்றி அவள் எங்கே இருக்கிறாள்? எப்பிடி இருக்கிறாள் ? என்று ஒரு வார்த்தை கூடக்கேட்கிறியள் இல்லையே'' நான் அமைதியாகக்கேட்டேன் மலர்.

"அதுக்கு என்ன மாமா சொன்னார்?'' மலர்விழியின் மனம் பரபரத்தது.

"ஐயா நான் என்னத்தைக்கேட்கிறது? நான் கேட்டால் மட்டும் நீங்கள் சொல்வீர்களா? நீங்களும் உங்கள் வரட்டு கௌரவமும் .............'' என்று சற்றுக்கோபத்துடன் இழுத்தார் அன்வர்.

"தம்பி நீங்கள் இப்ப குறிப்பிடுச்சொல்லுவது ஏழு வருடங்களுக்கு முன்பிருந்த குமாரசாமியை. அப்ப எனக்கிருந்த வரட்டுக்கௌரவம் இப்ப இல்லை. என் தவறை நான் உணர்ந்து பல வருடங்களாகின்றன''

"ஐயா இப்ப நீங்கள் உங்கள் தவறை உணர்ந்தென்ன. அர்ச்சனாவை இத்தனை காலமும் உங்கள் சிறைக்கைதியாகத் தானே வைத்திருந்திருந்திருப்பீர்கள்?''

"தம்பி நீங்கள் நினைப்பது போல அர்ச்சனாவுக்கு நான் பல கட்டுப்பாடுகள் போட்டது உண்மை தான். உங்களைச் சந்திக்கக் கூடாது. உங்களுக்குக்கடிதம் எழுதக்கூடாது என்பதில் குறியாயிருந்தவன் நான். ஆனால் அவளின் நடவடிக்கை என்னை அடியோடு மாற்றி விட்டது. ஏனெனில் அவள் சித்தப்பிரமை பிடித்தவள் போலதனக்கென இறுக்கமான கட்டுப்பாட்டை போட்டுக் கொண்டு வீட்டு மூலைக்குள் முடங்கி விட்டாள்''

"நான் சொன்ன போது அன்வர் தொண்டைக்குள் மீன் முள்ளுச்சிக்குப்பட்டவர் போல தவித்தார்''

"எனக்குத் தெரியும் அவள் என்னைப் பிரிந்து மகிழ்ச்சியாக வாழமாட்டாள் என்று. இதைக்கேட்கத்தானா நான் அவளுக்காக இத்தனை நாளாகக் காத்திருந்தேன். எனது வாழ்க்கை சோகமாகத்தான் முடியும் என்பது என் உள்ளுணர்வுகளுக்கு எப்பவோ தெரிந்து தான் இருந்தது. ஆனால் அவளுக்கு இப்படி ஆகும் என நான் எதிர்பார்க்கவில்லை'' சொல்லும்போது அவரது முகம் இருண்டு கறுத்தது.

"தம்பி பதட்டப்படாதேயுங்கோ பொறுமையாகக்கேளுங்கோ. அவள் உணவு உண்பது குறைவு. அதையும் நாம் கட்டாயப்படுத்தி தான் உண்ண வைப்போம். உறக்கம் குறைவு.அதைத் தொலைத்து விட்டு நிற்கிறாள் அவள். அது மட்டுமா கிடைத்த வேலையைக் கூட உதறித்தள்ளி விட்டு குழந்தை போலச்சுருண்டுபோய் மூலைக்குள் கிடப்பதைப்பார்க்க எனக்கே பயமாக இருக்கு'' இப்படி நான் சொன்ன போது அன்வர் இடிந்தே போய் விட்டார்.

"அர்ச்சனாவுக்கு வேலையில்லையா? உணவுஉறக்கம் இவற்றைத் தொலைத்து விட்டு பைத்தியக்காரி போலாகி விட்டாளா? நான் நம்பமாட்டேன். என் அர்ச்சனா சந்தோஷமானவள்''

இப்படியாக அன்வர் கலங்கியபோது நான் குற்றவாளிக்கூண்டில் நிற்பது போல உணர்ந்தேன் மலர்.

இவ்வாறாக இருவரும் பேசிக் கொண்டிருந்த பொழுது குரலொன்று இடையிட்டது.

"வெறுந்தாத்தா தேத்தா குடியுங்கோ'' என்றபடி தேநீர்கோப்பைகளடங்கிய தட்டோடு அவர் முன் நின்றாள் அபிநயா.

"என்ன காருண்யா தேநீரை அபிநயாவிடமா கொடுத்து விட்டாய்? அவள் காலில் ஊற்றிக் கொள்ளப் போகின்றாள்'' குமாரசாமி சற்றுக் கோபமாகச் சொன்னார்.

"நான் தேநீர் ஊற்றவில்லை தாத்தா. அபிநயாதான் கோப்பைகளைக்கழுவி தேநீர் போட்டது''

"உண்மையா காருண்யா என் போத்தி தேநீர் போட்டாளா?'' அவர் ஆச்சரியப்பட்டார்."இல்லை மாமா அவள் பாத்திரங்கள் சுத்தமாகக்கழுவித் தேநீரும் ருசியாகப்போடுவாள்'' மலர்விழி மெல்லச்சிரித்தாள்.

"அப்ப நான் குடிக்கத்தான் வேணும்'' தேநீர்க்கோப்பை ஒன்றை எடுத்துக் குடித்தார்."நல்ல ருசியாக இருக்குது மலர். இதெல்லாம் என்ரை பேத்திக்கு நீயா பழக்கி வைத்திருக்கின்றாய்?''

அவர் ஆச்சரியத்தோடு கேட்டார்?

(தொடரும்)

# முகத்தில் இரண்டு புண்

## சிறுவர் கதை



அமைதியாக அந்த வள்ளிபுனம் கிராமத்தில் அழகிய மாமரச்சோலையில் ஓலையால் வேயப்பட்ட ஒரு குடிசை வீடு இருந்தது. ஊரூராகத்திரிந்து கொடுப்பதை வாங்கி உண்டு, உறங்கி வாழ்வைக் கழித்து வந்தவன் கந்தசாமி. அன்று அந்த பரதேசி அந்த குடிசை வீட்டுத்திண்ணையில் சென்று அமர்ந் தான். வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. சற்று நேரம் திண்ணையிலிருந்தவனுக்கு வயிறு பசியெடுத்தது.

"அம்மா வயிறு பசிக்குது. சாப்பிட ஏதாவது கொடுக்கிறீங்களா?" என்று வினயமாக சத்தமிட்டான். சிறிது நேரம் செல்ல கதவு திறக்கப்பட்டது. ஒரு அழகிய இளம் பெண் இரு கைகளாலும் கதவை தொட்டபடி தட்டுத்தடுமாறி வெளியே வர முயன்று கொண்டிருந்தாள். அவளை கூர்ந்து பாத்தான் கந்தசாமி. அந்த பேரழகியான பெண் பார்வை இழந்தவள் என்று தெரிந்தது. அவன் வேதனைப் பட்டான். தான் அவர்களை வேதனைப்படுத்தி விட் டதாக உணர்ந்தான். "நான் உங்களைத் தொல்லைப் படுத்தி விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். போட்டு வருகிறேன்" என்றான். ஆனால் அப்பெண் விடவில்லை. "நான் பார்வையற்றவள். குடும்பத்தில் இன்னொருவர் ஊமை. சிறிய தங்கை செவிடு. ஆனாலும் நீங்கள் பசியோடு போகக்கூடாது. சாப் பிட்டு விட்டுச்செல்லுங்கள்" என்று அன்புடன் கூறினாள்.

பரதேசிக்கு பசி தாங்க முடியாத தால் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிட்டான். இத்தனை அழகும், கருணையுள்ளமும் கொண்ட இவளை ஆண்டவன் பார்வையற்றவளாக படைத்து விட்டு, பரதேசியாகிய எனக்கு மட்டும் பார்வையைத்தந் திருக்கின்றானே! இது கொடுமை என்று மனதிற்குள் வெதும்பினான். பின்னர் அவன் மனதில் ஒரு முடிவு தோன்றியது. தனது கண்களை அவளுக்கு தானமாக கொடுப்பது என்பதே அது. அவளுக்கு ஆனந்த மான வாழ்வு கிட்டும். கருணையுள்ளம் படைத்த அவள் எனக்கும் உணவு தருவாள். எனது வாழ்வும் போகும் என்று நம்பினான்.

தன் விருப்பத்தை கூறி, அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அறுவைச்சிகிச்சை மூலம் கந்த சாமியின் கண்கள் அந்த அழகிக்கு மாற்றப்பட்டன. பார்வை பெற்ற அந்த அழகிக்கு ஒரே குதூகலம். பெரும் பணக்கார வீட்டிலிருந்து திருணம் பேசினார்கள். அவளுக்கு யோகம் அடித்து விட்டது. மாளிகை வீடொன்னறின் எஜமானியும் ஆகிவிட்டாள்.

இவ்வாறு ஒரு வருடம் வரை கழிந்திருந்தது. இப்போது அந்த பார்வையற்ற கந்தசாமி ஒரு பிச்சைக் காரனாகவே இரந்துண்டு வந்தான். ஒரு நாள் மீண்டும் அப்பகுதிக்கு வந்தான். பழைய நினைவுகள் மனதில் அலை மோதின. அந்த பார்வை பெற்ற பெண் எப்படியிருப்பாள்? என்னைக் கண் டதும் தனது தந்தையைக் கண்டதுபோல புளகாங்கி தமடைவாள். என்னை தன்னுடனேயே இனிமேல் இருந்து விடுமாறு அன்புடன் கட்டளையிடுவாள். ஏ்னறவாறு கற்பனைகளுடன் அந்த வீட்டை கண்டு பிடித்து அங்கு சென்றான். இப்போது அது ஒரு மாளிகை. அங்கு திண்ணையுமில்லை. 'கடிநாய் கவனம்' என்று எழுதப்பட்ட ஒரு அறிவித்தல் தான் இருந்ததாம்.

'அம்மா..... அம்மா' என்ற சத்தம் கேட்டு எட்டிப்பார்த்தாள் அந்தப்பெண். "யார் அங்கே? வீட்டில் ஆண்கள் இல்லை. கத்தினால் நாய்கள் கடித்து விடும். அங்காலை போய்விடு" என்று அதட்டினாள் அவள். குரலை வைத்து அவளை அடையாளம் கண்டு கொண்ட கந்தசாமி என்னைத் தெரிய வில்லையா? நான் தான் கந்தசாமி. என் கண்களை திறந்து பார்! என்று சற்று உணர்ச்சி வசப்பட்டு கூறினான் அவன்.

"உம்மை எனக்கு எப்படித் தெரியும். கந்தசாமி என்கிறீர்.... இந்தப்பெயரில் எனக்கு தெரிந்தவர்கள் இல்லை" என்றாள் சற்று உரத்த குரலில், அதிகாரத் தோரணையில். என்னைத் தெரியவில்லையா? எனது கண்களுக்குகே என்னைத் தெரியவில்லையா?" என்று கந்தசாமி அலறத் தொடங்கினான். அவன் நெஞ்சம் கொதித்தது.

ஓடு...ஓடு...ஓடிப்போ... நாய்கள் அவிழ்த்து நிற் கின்றன என்று அவளும் கத்தினாள். ஓடு..ஓடு... என்று நாய்களையே ஏவுவதற்கு இன்னும் நேரமா வேண்டும்! கந்தசாமி அவனது கைத்தடியை ஊன்றியபடி ஓடத்தொடங்கினான். ஓடியபடியேயிருந்தான்.

- தாரா



பெயர்: செல்வி: டிலக்ஷனா ஜோன் பீற்றர் எட்மன் மரியசீலன்
முகவரி: இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
வயது: 05 (7.4.1999)
பாடசாலை: றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம், முல்லைத்தீவு.
பொழுது போக்கு: நடனம் ஆடுதல், பாட்டுப்பாடுதல், கதை சொல்லல், சித்திரம் வரைதல்.

# தமிழ் உலகம் மழலைகள் மன்றம்



பெயர்: த.யதுகுலன்
முகவரி: 40, லில்லி அவனியு, கொழும்பு -06.
வயது : 9 (10.11.1995)
வகுப்பு: தரம் -5
பாடசாலை: கொழும்பு இந்துக்கல்லூரி, கொழும்பு-04
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், புத்தகங்கள் வாசித்தல், கலைகளில் ஆர்வம்.



பெயர்: செல்வன் உதேஷ் ரஞ்ஜித்,
முகவரி: B3 3/11 சொய்சாபுர தொடர்மாடி, மொறட்டுவ.
வயது : 8 (14.06.1996)
வகுப்பு- தரம் -5
பாடசாலை: Kusinara International School, Moratuwa.
பொழுது போக்கு: படங்கள் வரைதல், வர்ணம் தீட்டுதல்.

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்தவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

அது மட்டுமல்லாது, அடிக்கடி அங்கத் தவ சிறுவர்களுக்கிடையில் பல விதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசு களை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.


எனவே விரையுங்கள் செல்வங்களே! தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத் தவர்களாகச்சேர, நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்கள் பெயர், முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றையும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப் படத்துடன் அனுப்பிவையுங்கள். உலகிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம்.

தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.

முழுப்பெயர்..............................
வயது :..............................
முகவரி:..............................
..............................
தொலைபேசி :..............................

# கொன்றை வேந்தன்



***56) நைபவர் எனினும் நொய்ய உரையேல்.***
(கேட்பவர் மறுவார்த்தை கூறாமல் வருந்துவோர் ஆயினும் அவரிடத்தும் கீழான சொற்களைச்சொல்லாதே)
(நைபவர்- வருந்துபவர், நொய்ய- இழிவான)

***57) நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவார்,***
(பார்வைக்குச்சிறியவர் என்று சொல்லப்படுவோரும், தாம் செய்யும் செயலால், உயர்ந்தோரால் விரும்பப்படுபவர் ஆவர்.(வெய்யவர்- விரும்பப்படுபவர்)

***58) நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.***
(தவம் என்று சொல்லப்படுவது, யாதொரு உயிரையும் கொன்று, அதன் ஊனைத்தின்னாமல் இருத்தலாம் )

***59) பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.***
(ஒருவன் செய்த பயிர் நன்கு விளைவதனாலும் விளையாமையாலும் அவனிடத்தில் இருக்கும் புண்ணியத்தன்மை அறியப்படும்.)

***60) பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.***
பாலோடு கலந்த சோறாயினும் பசிக்கும் வேளை அறிந்து அதனை உண்.

- தொடரும்

# விடுகதைகள்

1) தன் தலையைத் தானே விழுங்கும் அது என்ன?

2) உரிக்க, உரிக்க தோல் அது என்ன?

3) உயர எறிந்தால் தரையில் விழுவான், தரையில் எறிந்தால் உயர எழுவான். அவன் யார்?

4) மழையில் நனைவான், வெய்யிலில் காய்வான், வெளியில் விரிவான், வீட்டில் சுருங்குவான் அவன் யார்?

5) பல் இருக்கும், கடிக்காது, அது என்ன?


### விடைகள்

1) ஆமை
2) வெங்காயம்
3) பந்து
4) குடை
5) சீப்பு

# மழலைகள் கைவண்ணம்



T. அர்ச்சனா,
தரம் -6,
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு-4



பா. அருஷன்,
தரம்-7,
கொ/இந்துக்கல்லூரி,
கொழும்பு-04.

## ஆண்டு பிறந்தது

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது
ஆண்டு பிறந்ததடா!
அன்பும், அறமும் அறிவும் வளர்ந்திட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது,
ஆண்டு பிறந்ததடா!
அன்னை நன்னாடும், மொழியும் சிறந்திட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது ஆண்டு பிறந்தது,
ஆண்டு பிறந்ததடா!
வேண்டும் நலங்கள் விரைவில் கைகூடிட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது
ஆண்டு பிறந்ததடா!
அனைவரின் வாழ்விலும் ஆனந்தம் பொங்கிட
ஆண்டு பிறந்ததடா!

குழந்தைக்கவிஞர்
அழ.வள்ளியப்பா

# தெரிந்து கொள்ளுங்கள்

*** கிணறுகளில் எவ்வாறு நீர் கிடைக்கின்றது?**

மழை நீரானது நிலத்தினுள் கீழிறங்கும். நீரை உட்புக விடும் மண் அடுக்குகள் ஊடாக நீர் கீழே பொசியும். நீரை உட்புக விடாத அடித்தளப்பாறை வந்ததும் நீர் அம்மட்டத்தில் தேங்கி நிற்கும். இவ்வாறு தேங்கி நிற்கும் நீரையே நாம் கிணறு மூலம் பெறுகின்றோம்.

*** சுதந்திர வர்த்தக வலயம் என்றால் என்ன?**

ஒரு நாட்டின் குறித்த ஒரு பிரதேச எல்லைக்குள்: வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களும் இணைந்து தீர்வைகளற்ற இறக்குமதிப்பொருட்களையும் உற்பத்திச் சாதனங்களையும் உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களையும் பயன்படுத்தி சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடிய கைத்தொழிற்பொருட்களை உற்பத்தி செய்கின்ற அமைப்பே சுதந்திர வர்த்தக வலயம் ஆகும்.

# நாடுகள்


1) இந்தியா
தலைநகரம்
-புதுடெல்கி
சனத்தொகை
- 918, 570,000
நாணய அலகு
- இந்திய ரூபாய்



2) கனடா
தலைநகரம்
-ஒட்டாவா
சனத்தொகை
- 29,141,000
நாணய அலகு
- கனடியன் டொலர்



3) சிங்கப்பூர்
தலைநகரம்
- சிங்கப்பூர்
சனத்தொகை
- 2,821,000
நாணய அலகு
- சிங்கப்பூர் டொலர்



# கவிவலம்

## கொல்லி

ஓர் அன்னையின் வயிற்றில்தான்
அவளது ஜனனமும்
பிறப்பதன் காரணம்?
பெரு வெளியாகியது
அவள் மனம்
ஓரணு வடிவில் மட்டும்
வாழ்வு என்ற வேட்கை

ஏன் பிறக்கின்றோம்?
வாழ்வு என்ற விடை
பெரு வெளியை இடைவெளியின்றி
நிரப்பிக்கொண்டது

வாழ வழி......?
பதிலாகக்கிடைத்த பதில்
'பணம்'
வறுமையின் விரக்தி
விஸ்வரூபம் எடுத்தது
விழைவு,
சோசலிசம் பேசுகின்ற
சில முதலாளிகளுக்கு
அவள் சோசலிஷப்
பொருளானாள்

அவளுக்கும் இது தனி வழிதான்
சூரியனின் துயிலில் மட்டும்
அவளிடம் அவர்களின் சரசங்கள்
பகலவன் பார்க்க பாட்டாளிகளிடம்
சுரண்டல்கள்
அவர்கள் ரத்தத்தில்
வைரசுகள்

அவர்களது மனமோ
பாஷிஸம்
இன்று அவளோ
வைரசுகளுடன் விளையாடி
வைராக்கியத்துடன்
சுரண்டும் பெரிய முதலாளி வர்க்கம்
சமூக ஓட்டைகளில்
சில கசிவுகள்

'கொல்லி'
அவளின் பெயரானது.
வாழ்வு பெரு வெளியிலிருந்து
வெளியேறிக்கொண்டிருக்க
விரக்தியும், முரண்களும், அவமானமும்
உட்புகுந்தன
வெளி,
ரத்த கறை படிந்த
குரு ஷேத்திரமானது
அதில்
பிணங்களும்
முண்டங்களும்
நிறைந்து கிடந்தன
மீண்டும் ஓர் முண்டத்தின் சரசம்
அது உடல் அளவில் மட்டுமே

அவள் மனம் வெறுமையில் மிதந்து
அதைத்தன்னுள் அடக்க முற்படுகின்றது
முடியவில்லை
'சாவு' என்ற விடை விஸ்வரூபம்
எடுக்கத் தொடங்கியது

*அ.த. அன்பாளன்,*
*நிறைவாண்டு தமிழ்த்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம*

## பொய்முகங்கள்

மாநிலத்தில் மாயைதான் மலிந்து
கொண்டிருக்கின்றது
மனிதா இதை நீ மறந்து விடாதே!
மனிதரில் எல்லோரும் பசுத்தோல்
போர்த்திய புலிகளே

வஞ்சக மனதாலே வாயார வாழ்த்தி-பின்
வீழ்த்த எண்ணுகின்ற வீணான மானிடர்கள்
புகழ் கிடைத்தால் பூரிப்பாய்ப்பேசி-பின்
பரிகாசம் கொள்ளும் பண்பற்ற மானிடர்கள்

பாசம் வைப்பது போல் பாசாங்கு செய்து
பகல் வேஷம் போடும் பச்சோந்திகள்
முகஸ்துதிக்காய் முன்னால் நன்றாகப்பேசி-
நாம்
நகர்ந்து செல்கையில் நச்சு வார்த்தை
பேசும்

நாகரிகமற்ற மனிதர்கள்

நயமான வார்த்தை பேசி-நாடகமாடி
நட்பை நாசம் செய்யும்
நேசமற்ற மனிதர்கள்

மொத்தத்தில் சொன்னால்
பந்தத்தில் மட்டுமல்ல-நாம்
வாழ்கின்ற இந்த பரந்த உலகிலும்
நாம் காண்பன யாவும் -வெறும்
பொய் முகங்களே!

முறைபூர் முழுநிலா மங்கேஷ்
லண்டன்.

## அதிசயம்

நைகரா வீழ்ச்சியை இரவினில் கண்டேன்
ஓவென்ற பேரோசை! காற்றினில் பூந்தூறல்!
மலைகளில் உயர்ந்தது இமயம்
நதிகளில் நீளம் நைல்நதி
நீர் வீழ்ச்சிகளில் உயர்ந்தது நைகரா என்பர்

வீழ்ச்சி குறிப்பது தாழ்வை அல்லவா?
பின்னர் அது எப்படி உயரமாகலாம்?

உயரம் தாழ்வு என்பதெல்லாம்
நாம் நிற்கும் இடத்தைப்பொறுத்ததே!
நாம் கிழே நிற்பதனால் தான்
நைகரா உயரமாக தெரிகின்றது!
மேலே நாம் நிற்போமானால்
அதை ஆழமான நீர்வீழ்ச்சி என்போமா?

அல்லது அதற்கென ஒரு சொல் இல்லையா?
ஆழம், நீளம், உயரமென்பதெல்லாம்
வெறும் ஒப்பீட்டு வார்த்தைகளே!

யாமறிந்த மொழிகளிலே என்று
அன்று பாடினான் பாரதி!
யாமறிந்தவற்றிலே மட்டும்
என்று தான் இயம்பினான் அவன்!

நாம் எங்கு நிற்கின்றோம்,
எமக்கு என்ன தெரியும்
என்பதைப்பொறுத்ததே
எமது பார்வையின்
பெருமையும் சிறுமையும்!
குழந்தையின் உள்ளம் மட்டும்
எமக்கிங்கு இருந்து விட்டால்
குடத்து நீரிலும் அதிசயம் தெரியும்!

*நிலக்கிளி, டென்மார்க்.*

## பூமிக்கு ஒரு போர்வை

பூமி அம்மா போர்வை ஒன்று
போர்த்திருக்கின்றாள்-அந்தப்
புதுமையான போர்வை என்ன?
உனக்குத் தெரியுமா?

உடலில் இறுகப்போர்த்திடாமல்
வான வெளியிலே-மேகம்
ஓடுகின்ற எல்லைக்(கு) அப்பால்
மூடியிருக்கின்றாள்!

வண்ண வண்ண நிறங்கள் கொண்ட
கம்பளி அல்ல; - அது
மனிதன் நெசவு தறியில் நெய்த
போர்வையும் அல்ல!

கைகளுக்குள் அகப்படாத
வாயுப்போர்வையாம்;- எங்கள்
கண்களுக்குப்புலப்படாத
மாயப்போர்வையாம்!

வானில் உள்ள நீல வண்ண
ஓசோன் வாயுவை- நன்றாய்
வாரி அள்ளி பூமி செய்த
வானப்போர்வையாம்!

ஓசோன் என்னும் வாயு சேர்ந்து
உண்டானதாலே - புவியின்
'ஓசோன் படலம்' என்றே இதனைச்
சொல்வார் விஞ்ஞானி!

பூவைப்போல மிருதுவான
ஓசோன் போர்வையால் - எங்கள்
பூமி அம்மா நம்மையெல்லாம்
மூடிக்காக்கின்றாள்
சூரியக்கதிரும் ஊதாக்கதிரும்
பூமியைத் தாக்காமல் - இந்த
ஓசோன் போர்வை மட்டு மட்டாய்
உள்ளே விடுகின்றது!

ஓசோன் போர்வை அமைந்த பின்தான்
உலகம் முழுதிலும் -பல
உயிர்கள் தோன்ற முடிந்த(து) இதை
மனதில் வைத்துக்கொள்!

அணுவின் குண்டை வெடிப்பதாலும்
அமில வாயுக்கள் - வானில்
உயர எழுந்து கலப்பதாலும்
ஓசோன் அழிகின்றது!

ஓசோன் போர்வையில் கழிவுகள் வந்தால்
பொத்தல் ஏற்பட்டால் - அந்த ஓட்டையின்
ஊடு ஊதாக்கதிர்கள்
பூமிக்கு வந்து விடும்!


ஊதாக்கதிர்கள் அதிகம் வந்தால்
உலகம் அழிந்திடுமே!- ஐயோ!
ஓசோன் போர்வையில்
உலக மக்களே,
ஓட்டை போடாதீர்!

*– புதிய பூக்கள்*

# குறுக்கெழுத்துப்போட்டி இல.15

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.





பெயர்:..........................................................................................

முகவரி:........................................................................................

..................................................................................................

## இடமிருந்து வலம்

1) நாட்டைக் கைப்பற்றும் நோக்கம் கொண்ட போர் நடவடிக்கை (7)
6) ஓலையால் பின்னப்பட்டு கதவாகவோ, மறைப்பாகவோ பயன்படுத்துவதை இப்படிச்சொல்வதுண்டு. (3) (குழம்பியுள்ளது)
7) பதப்படுத்தி காய வைத்த சில வகை மரக்கறித்துண்டுகளை இப்படிச்சொல்வதுண்டு. (4)
10) மெல்லிய ஆடை (3)
11) பயிற்சி - இப்படியும் சொல்லாம் (6) (குழம்பியுள்ளது)
14) யாப்பிலக்கணப்படி எழுதப்பட்ட செய்யுள்(1)
16) உள்ளீடற்ற நெல் (3)
19) எப்படியாவது செய்து முடிப்பது என்ற மாற்ற முடியாத தீமானம் (4)
20) ஒருவர் மனதில் நினைத்து வந்த காரியம் எவ்வாறு முடியும் என்பதை சில குறிகளால் அறிந்து கூறும் முறை (4)
22) இதமான குளிர்ச்சி (3)
27) நம்பிக்கை தரக்கூடிய மாற்றங்களும், சுபிட்சமும் நிறைந்த காலம் (5)
32) மாடு, குதிரை போன்ற விலங்குகளின் காலின் அடிப்பகுதியின் கடினத் தன்மையுடைய பகுதி (4)
34) விவரங்களை ஏதேனும் ஓர் அடிப்படையில் ஒழுங்குபடுத்துவதை இப்படிக்கூறுவர் (5) (குழம்பியுள்ளது)

## வலமிருந்து இடம்

5) துணிச்சலாக ஏமாற்றுபவன் (4)
9) சாப்பிடப்பயன்படுத்தும் தட்டு (4) (குழம்பியுள்ளது)
15) அறிவு (3)
19) மயானம் - இப்படியும் சொல்லலாம் (5)
21) இது ஏற்பட்டால் சந்தோஷம் போய் விடும் (5) (குழம்பியுள்ளது)
23) செயல்படுவதில் நிதானம் இழந்து காட்டும் பரபரப்பு (5) (குழம்பியுள்ளது)
24) இலங்கையில் இங்கு இருக்கும் கிறிஸ்தவ தேவாலயம் புகழ் பெற்றது (2)
26) உற்பத்தி, விற்பனை, முதலியவற்றுக்காக பொருட்களை பெருமளவில் வாங்குதல் (5)
28) தாவரங்களின் இனப்பெருக்கத்துக்கான துகள் (6)
30) சுளகு- குழம்பியுள்ளது (3)
31) இசைக்கு ஆதாரமான இது 16 என்பார்கள் (5)
33) மழைக்கால இரவுகளில் ரீங்காரமிடும் ஒரு வண்டு (5)


## மேலிருந்து கீழ்

1) சொத்து - இப்படியும் சொல்லலாம் (4)
2) இது ஒரு சிறுவர் விளையாட்டு (6)
4) வீழ்ச்சிக்கு பின்னரான ஆற்றலோடு கூடிய எழுச்சி (5)
5) இலங்கையை ஆண்ட வீரம் நிறைந்த ஒரு தமிழ் அரசன் (5)
8) கள்ளு விற்கும் இடம் (4)
12) எதிரி (4)
13) ஆதரவற்ற பெண் (3)
14) அடக்கு முறையைப் பிரயோகித்து நடத்தும் ஆட்சி முறை (4)
17) பெண்களின் கைவிரல்களுக்கு உவமையாக கூறப்படும் பூ (4)
18) இது மருந்தாகப் பயன்படும் (4)
25) முகத்தின் வசீகரத்தோற்றம் (4)
27) வாக்குச்சீட்டில் போடுவது (4)

## கீழிருந்து மேல்

13) வளர் பிறையின் எட்டாவது நாள் (4)
29) உட் கூரையின் உச்சிப்பகுதி (3)
35) மிகக்கடுமையான கோபம் (4)

## குறுக்கெழுத்துப்போட்டி இல: 13 இற்கான விடைகள்



குறுக்கெழுத்துப்போட்டி இலக்கம் -13 இற்கான சரியான விடையை அனுப்பி ஒரு வருடத்துக்கான தமிழ் உலகம் இலவசப்பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறும் அதிஷ்டசாலி.

K.V.ஜினேந்திர பிரகாஷ், 11. இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு -06.

ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளைப்பெறும் இரண்டாவது அதிஷ்டசாலி

ஆர்.வி.லவன், 70/55, 1/1, சென்.பெனடிக்ற் மாவத்தை, கொழும்பு -13.

ஆறு மாதங்களுக்கான தமிழ் உலகம் இலவச பிரதிகளைப்பெறும் மூன்றாவது அதிஷ்டசாலி.

பிரான்சிஸ் அமலதாஸ், 33, AV.LOUIS ARAGON,94800,VILLEJUIF,FRANCE

## குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும். சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ் உலகம் இலவச பிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் பரிசாக வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப்போட்டிக்கான அட்டவணையுடன் உங்கள் விவரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு 31/1/2005 ஆம் திகதிக்கு முன் எமக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**e- mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**Meewella Building,7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1044**
**Fax : 0094 112 59 1047**
**e- mail : tugloballanka@sltnet.lk**

# எதிர்காலம் இருட்டில் அல்ல

மூலைப்பக்கமாக மதகு சிதிறக்கிடந்தது. சிதறிக்கிடந்த கொங்கிறீற் மதகுக்கு கீழே அதே கோலத்தில் நேசனின் ஒரு பாதி உடல் கிடந்தது. ஒன்றரை வயது குழந்தையை கட்டிப்பிடித்தபடி அப்படியே கிடந்தான். குழந்தைக்கு ஒரு காயமும் இல்லை. ஆனால் இருவரும் பிணமாகக் கிடந்தனர். வேறு சிலரும் கூட உடல் சிதறிக்கிடந்தது தெரிந்தது. ஆட்கள் கூடினர். அந்த ஊரே கூடி விட்டது. இறந்த உடல்களை இழுத்து எடுக்கும் முயற்சிகள் தொடங்கின. உறவினர்களின் ஓலங்களும் ஒப்பாரிகளும் ஒரு புறம். காயமடைந்தவர்களை ஏற்றி அகற்றும் முயற்சிகளில் இளைஞர்கள் ஈடுபட்டனர். ஒரே களேபரம்.

“இன்னும் அரை மணித்தியாலத்தால் அடுத்த தடவை வந்திடுவான்கள் அதுக்கிடையில எல்லாத்தையும் செய்திட்டு இடத்தை காலி செய்யவேணும்” அனுபவமிக்க ஒருவர் எச்சரிக்கை செய்தார். குண்டு வீச்சு விமானங்கள் ஒரு தடவை குண்டு வீசிய இடத்திற்கு மீண்டும் வந்து நோட்டம் விடுவதும் குண்டுகளை மீண்டும் வீசுவதும் வழக்கம். ஊரில் மொத்தம் ஐந்து மரணங்கள். சிதறிய உடல்களை சிதைந்த உள்ளங்கள் அடக்கம் செய்தன.

“மஞ்சி தனிச்சுப்போனாள்.... பாவம், இந்தச்சின்ன வயதில அவளின்ர வாழ்வும் முடிஞ்சுது!”எப்போதும் மஞ்சிக்காக கருத்துக் கூறுபவளான நேசனின் மூத்த சகோதரி புலம்பினாள். “தன்ர சொந்தம், பந்தம், சாதி, சமயம் விட்டு ஒருத்தனுக்காக வந்தவள். இப்ப அவனும் இல்லை. இப்படி எத்தனை காலத்திற்கு?” பக்கப்பாட்டு பாடினார் ஒரு முதியவர்.

மஞ்சியின் புரட்சிபற்றி ஊரில் அனைவருமே அறிந்திருந்தனர். நகரத்தின் மிகப் பிரபலமான கல்லூரியில் உயர்தரவகுப்பில் வெற்றிகரமாகப்படித்து வந்தவள் மஞ்சி. படிப்பில் புலி. பணப்பற்றாக்குறை இல்லாத வீட்டுப்பிள்ளை. தனியான வாடகைக்கார் ஒன்றில் பாடசாலைக்கு அனுப்பப்பட்டாள். அவளது படிப்பில் தந்தையாருக்கு இருந்த கரிசனையினை அவர் செய்து கொடுத்திருந்த பிரத்தியேக வசதிகள் காட்டின. நல்லியல்புகள் நிறைந்தவன் தான் நேசன். அவன் இங்கிதமாகப்பேசுவதும், பக்குவமாக நடந்து கொள்வதும் மஞ்சியை மட்டுமல்ல, அவளது பெற்றோரையே முதலில் கவர்ந்திருந்தது. ஒரு நம்பிக்கையான சாரதி என்ற வகையில் அவனுக்கு பெருமதிப்பை அவர்கள் கொடுத்திருந்தனர்.

அவனது கார் அந்த ஒழுங்கையின் மூலையில் திரும்பும்போது ஒரு ஹோர்ன் அடிக்கும். அது வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றுவதற்காக அல்ல. நான் வருகின்றேன்... சில வினாடிகளில் உன் வீட்டின் வாசலில் நிற்பேன் என்று மஞ்சிக்கு தெரிவிக்கும் ஒரு அறிவித்தல். செவிகளைத்தீட்டி வைத்துக்கொண்டு தயாராக நிற்கும் மஞ்சிக்கு அது புரியும். நடப்பும் அப்படியே இருக்கும். கல்லூரி யூனிபோம் அணிந்தபடி புத்தகப் பையையும் கையிலெடுத்துக்கொண்டு அவள் படலையை நோக்கி வரவும் நேசனின் கார் வாசலில் நிற்கவும் சரியாக இருக்கும். பக்குவம் சொல்லுவதற்காக அம்மாவும் வந்து காரில் அவள் ஏறும் வரை பார்த்து “கவனம் பிள்ளை” என ஒரு தடவை சொல்லி வைப்பாள். அப்பாவும் படலை வரை சென்று அனுப்பி வைப்பார். ஒரேயொரு பெண்பிள்ளையில் அப்படியான கவனம். அவர்களுக்கு அவள் இப்போதும் பத்து வயது பிள்ளை என்ற நினைப்பு.

கார் புறப்பட்டதும் உரையாடல் காரினுள் ஆரம்பித்து விடும். படிப்பில் தொடங்கி ...காலைச் சாப்பாட்டில் தாவி...... பாதி வழி செல்லும் போதே சினிமா பாணியில் தொடரும். அவளுக்கு மட்டும் தனியாக ஒரு காரும், பரீட்சை நெருங்கி வருகின்றது என பெற்றோர் மனதில் ஏற்பட்டிருந்த பக்குவ உணர்வும் போதிய கவசங்களாக இருந்தன. இந்த மறைப்பிற்குள் விடயங்கள் தீவிரமாக முன்னேறின. உயர்தரப்பரீட்சை முடிந்து விட்டால் கல்லூரிக்குப்போவது நின்று விடும். சந்திப்புக்கள் இருக்காது என்பதே அவர்களை ஏங்க வைத்துக் கொண்டிருந்தது. அதனால் பரீட்சைக்கு முன்னரே காரியங்களை முடித்து விட வேண்டும் என்பதில் இருவரும் உடன்பாடு கண்டிருந்தனர். இருவரும் தத்தமது வீட்டாரிடம் கூறி அனுமதி பெற்று மணம் செய்து கொள்வது இப்பிறவியில் நடவாது. ஏனெனில் அவர்கள் பிறவியில் வேறுபட்டவர்கள். ஒரே ஊரில் வெவ்வேறு சாதிகளுக்குள் பெற்றோரே தமது பிள்ளைகளுக்கு மணம் செய்து வைக்கும் பக்குவம் ஏற்பட இன்னும் ஆயிரம் வருடங்களாவது செல்லும். இதனால் பீட்சை திகதி வந்ததும் இருவரும் எவருக்கும் கூறாமல் ஓடிச்சென்று விடுவது என்று தீர்மானித்திருந்தனர். ஓடியுமிருந்தனர்.

இது தொடர்பில் ஊரில் புயலாக எழுந்த சம்பவங்கள் ஒரு சம்பிரதாயம் போல காலத்தால் மறக்கப்பட்டுப்போனது. எங்கோ ஓடி மறைந்திருந்த சோடி ஒரு வருடத்தின் பின் ஊரில் தலை காட்டியதும், அடுத்த கிராமத்திலுள்ள நேசன் வீட்டில் வந்து வாழத்தொடங்கியுமிருந்தபோது மஞ்சியின் மூத்தவனுக்கு வயது ஒரு மாதம் மட்டுமே. மாலை வேளைகளில் மஞ்சியின் அப்பா கனகசிங்கம் மாஸ்ரர் அந்த அம்மன் கோவில் வீதி வழியாக சைக்கிளில் செல்வார். அவ்வேளைகளில் அவருக்கு வரும் ஆத்திரம் அவரது வாழ்க்கையில் வேறு எப்போது வந்திருக்காது. நேசனின் குடிசைப்பக்கம் தலையைத்திருப்பாமலே பார்ப்பார். அந்தக்கார் மரநிழலில் நிற்கிறதா என்று மட்டும் கவனிப்பார். அதுவே அவரது ஒரே மகளை அவரிடமிருந்து பறித்த எதிரி.

அவருக்கும் ஒரே மகள் மஞ்சிக்குமிடையே உறவு முற்றாக அற்றுப்போய் விட்டதற்கு காரணிகளாக எவை இருந்தன என எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. மஞ்சியின் தாயார் திருட்டுத்தனமாக பிறரின் கண்களில் அதிகம் படாமல் மஞ்சியை கோவில் திருவிழாக்களின்போது சந்தித்து வந்தாள். ஈழப்போர் உச்சக்கட்டங்களை அடைந்து விமானங்கள் தினசரி வந்து குண்டுகளை வீசும் வரலாறு தொடங்கிய காலங்களிலும் கூட இரு குடும்பத்தினரதும் மன இறுக்கம் தளர்ந்ததில்லை. அது ஒரு யாழ்ப்பாண ‘மொடல்’. ஆனால் அன்றைய குண்டு வீச்சும், பலியெடுப்பும் தான் ஓரளவு மன இறுக்கங்களை மாற்றியவை எனலாம். நேசனால் ஏற்பட்ட உறவுகள் அவனின் மறைவோடு மறைவது போல ஒரு தோற்றம் தெரியத் தொடங்கியது.

***

விதியின் வரையறைகளை மாற்றுவதற்கு எடுத்த முயற்சிகளில் மனிதன் படு தோல்வியடைந்தே வந்திருக்கின்றான் என்பது பற்றி சந்திரன் ஆய்வு நடத்தியதில்லை. மஞ்சி நேசனுடன் ஓடியபோது தானும் கனடாவிற்கு ஓடிய சந்திரன் ஊர் திரும்பாமலே வாழ்ந்து வந்தவன். இப்போதுதான் மன இறுக்கம் தளர்ந்த நிலையில் ஒரு மாத லீவில் ஊருக்கு வந்தான். மஞ்சியின் வாழ்வு இவனோடு விதியினால் பிணைக்கப்பட்டிருந்தது போலும். மஞ்சிக்கு நடந்தவை பற்றியெல்லாம் சிறு விவரமும் விடாமல் அறிந்தும் ஆராய்ந்தும் இருந்தான். மஞ்சியைப்பார்த்து பேச வேண்டும் என்னும் திட்டம் மனதில் மறைவாக இருந்தது. அன்று மஞ்சி தனது மகனைப்பாடசாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வீடு சென்ற வேளை மோட்டார் சைக்கிளை மெதுவாகச்செலுத்தி அவளருகே கொண்டு சென்ற சந்திரன் கதை கொடுத்தான். “மஞ்சி உன்னுடைய நேற்று வரையான வரலாறு எனக்கு நன்றாகவே தெரியும். இனி என்ன உத்தேசம்?” உடனடியான பதில் எதுவும் வரவில்லை. எதைப் பேசுவது? எப்படிப்பேசுவது என்று புரியாத தடுமாற்றம் அவளுக்கு. பல வசனங்கள் உதடு வரை வந்து அடங்கின.

சந்திரன் சுருக்கமாக பேசினான். “மஞ்சி! நடந்ததுகள் வரலாறாக அப்படியே மனங்களில் இருக்கட்டும். நீ இனி உன் வீட்டோடு போய் அப்பா, அம்மாவோடை இருக்கலாம் தானே” அவள் ஏதோ பேச வாய் திறந்தாள். அதற்குள் சந்திரனே மீண்டும் பேசினான். “வாழ்க்கையே முடிஞ்சுபோச்சு என்று வேதாந்தம் பேச நினைக்காதை. நான் எல்லா ஒழுங்கும் செய்யிறன். உன் அம்மா வந்து உன்னைக் கூப்பிடுவா. இனி உனக்குப்புது வாழ்வு இல்லை என்று நினைக்காதை. நான் ஒரு மாதம் தான் நிற்பன். மிச்சம் பிறகு பேசலாம். சரி வாறன்” மோட்டார் சைக்கிள் ஸ்ராட் ஆகியது.

சந்திரனே மஞ்சியை கட்டப்போறவன் என்று பெற்றாரும் உற்றாரும் ஒரு காலத்தில் நம்பியிருந்தது அவளைப்பொறுத்த வரை மறக்கப்பட்ட கதையாக இருந்தது. ஆனால்

மஞ்சி மட்டும் அந்த நம்பிக்கையை அன்று கூட வைத்திருக்கவில்லை. உண்மையில் தான் திறமைச்சித்திகளுடன் டாக்டராக வரப் போகிறாள் என்றே பெற்றோருடன் சேர்ந்து அவளும்அப்பாவித்தனமாக நம்பியிருந்தாள். பள்ளிப்படிப்பில் மட்டரகமாக புள்ளிகளைப் பெற்ற சந்திரனை அவள் பெரிதாக மதித்ததுமில்லை. ஆனால் மஞ்சி ஓடிவிட்டாள் என்ற கதை புயலாக அடித்த வேளைதான் சந்திரனிலும் சில உணர்வுகள் வெளிப்பட்டன.

அவனும் மஞ்சியை தன் மனதில் மிக ஆழத்தில் வைத்திருந்தான் என்பது வெளித் தெரிந்தது. காலம் கனிந்து வரும்போது எல்லாம் தானாக நடக்கும் என அதனை அந்த இளவயதிலும் தீவிரப்படுத்தாமல் இருந்தவன். பரீட்சையும் கைவிட்ட நிலையில் விரக்தி தாங்காமல் வெளிநாடு சென்றான்.

வேதனையும் விரக்தியும் அவனை தீவிரப்படுத்தியது.அவன் இதயத்துள் புதைந்திருந்த ஒரு வித அவமான உணர்வு அல்லது தாழ்வுணர்ச்சி இத்தனை காலமாக கடிதம் போடுவதற்கு கூட அவனுக்கு இடமளித்திருக்கவில்லை.

மஞ்சியுடன் பேசிய கையோடு நேரே மஞ்சி வீடு சென்ற சந்திரனிடம் பெரும்மன மாற்றம் ஏற்பட்டு இருப்பது வெளிப்படையாக தெரிந்தது. "மஞ்சியை இனி அங்கே விட வேண்டாம். கூட்டி வாருங்கோ மாமி. முடிவைக்கேளுங்கோ. நான் போறதுக்கிடையில பாஸ்போட் ஒழுங்குகளைச் செய்துவிடுவன். நான் போய் விசாவிற்கும் ஏற்பாடு செய்வன். ரிக்கற் அனுப்புறன். கட்டுநாயக்கா எயார் போட்டில ஏத்திவிடுங்கோ. அவள் தனிச்சுப் போகேல்லை மாமி" என எல்லாக்கேள்விகளுக்குமான பதிலை ஒரே வார்த்தையில் கூறி விட்டு சட்டென்று சென்று விட்டான்.

இராசம்மாவுக்கு மூளை கலங்கிப்போச்சு. கடந்த ஒரு வருடமாகவே தனியனாகி விட்ட மகளை நினைத்து கலங்கியிருந்தவள். தன் பாட்டில் புறுபுறுத்தபடி சிறிது நேரம் கிடந்தாள். தகப்பனிடம் விடயத்தை எடுத்துக்கூறும் துணிவு இல்லை. அவர் நியாயங்களை அடுக்கிக்கொண்டே போவார். இராசம்மாவே பதில் சொல்ல வேண்டியிருக்கும். போதாததற்கு அவரும் இருதய நோயாளி. பெயருக்கு மாத்திரம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதிர்ச்சி தகவல்களை கூறவும் கூடாது. பாசத்திற்காக நியாயங்களை அவர் விட்டுக் கொடுப்பதில்லை. அவர் மனதை மாற்றுவது இலேசான வேலையுமல்ல.

கடைசி முயற்சியையும் எடுத்துப்பார்க்க முடிவு செய்த இராசம்மா மனதை மாற்றும் போரில் இறங்க தீர்மானித்தாள். இரு பிள்ளைகளுக்கு தாயாகி ......இரண்டு பேர்களை பலி கொடுத்து, பிறந்த வீடும் வெறுத்து, புகுந்த வீட்டிலும் உறவு இன்றி தனியாகி விட்டவளுக்கு கடவுள் வழங்கும் மன்னிப்பே சந்திரன் வடிவில் வந்து நிற்கின்ற நிலையை உதாசீனம் செய்து விட பெற்றவளுக்கு துணிவு வருமா?

வந்த வாழ்வு பறி போய் விட்டது. தண்ணீரினுள் தவறி வீழ்ந்து விட்ட மஞ்சி அங்கு நின்ற ஓடமொன்றினுள் இடம் பிடித்துக் கொள்கின்றாள். அது அவளின் மகனுக்காக என்று எல்லோரும் புரிந்து கொண்டனர். அவளின் நடத்தைகளில் அதுவே தெரிந்தது.

பின் விறாந்தையில் சாய்மனைக்கதிரையில் கிடந்தபடி பொய்யிற்கு ஒரு செய்தித்தாளையும் உயர்த்தி பிடித்துக்கொண்டு சத்தமாக வாசிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த கனகசிங்கத்தாரிடம் வாய் கொடுத்தாள். "என்னப்பா...நெடுக இப்படியே விட்டால் என்ன முடிவு? மருமகன் சந்திரன் வந்து சொல்லிப்போட்டுப் போறான். ஒரு மாதம் தான் நிற்பானாம். அதுக்கிடையில் பாஸ்போர்ட் விசா ஒழுங்குகளை செய்யப்போறானாம். மஞ்சியை வீட்டுக்கு கூட்டி வரச்சொல்லிப் போட்டுப்போறான்"

அன்று சீறிச் சினக்காமல் கனகசிங்கத்தாரின் உடன்பாடான பதில் வந்தது. இத்தனை அமைதியான பதில் மிகவும் அரிதாகத்தான் கிடைக்கும். அவருக்கு தொடங்கியிருந்த நெஞ்சுவலிக்கு மனதிற்குள் நன்றி கூறியபடி இராசம்மா அடுத்த கட்டத்திற்குள் காலடி எடுத்து வைத்தாள். "நான் சந்திரனுக்கும் சொல்லுறன். மஞ்சியையும் போய் கூட்டிக்கொண்டு வரப்போறன்......" இறுதியான அனுமதியையும் கேட்பவள் போல.


"ஓமப்பா. சந்திரனுக்குள் இவ்வளவு துணிச்சல் இருப்பதை மதிக்கத்தான் வேணும். உனக்கு சரியென்று தெரிஞ்சதை செய்!" இராசம்மா அலுவலில் இறங்கினாள். விடயங்கள் துரிதமாக முன்னேறின. பாஸ்போட் எடுத்தாயிற்று. விசா ஒழுங்குகள் செய்தாயிற்று. ஆனாலும் சில மாதங்கள் எடுக்கத்தான் செய்தன.

கட்டுநாயக்கா விமான நிலையம் வரை செல்வதற்கும் தனியான வாகனம் ஒழுங்கு செய்யப்பட்டது.வீடு முழுவதிலும் ஒரு இரகசியமான ஆரவாரம். புதிய மருமகன் வீட்டார் எல்லோரும் கூடி நின்றனர். வெளிநாட்டுக்காரருடன் இணைந்து இழுபடும் இக்காலப் போக்கை அனுசரித்து நடக்கப்பழக்கப்பட்ட அவர்கள் விருப்புடன் சம்பிரதாயங்களில் ஈடுபட்டு நின்றனர்."விடியப்புறம் இரண்டரைக்கு பிளைற். இரண்டு மணித்தியாலயம் முந்தி அங்கை நிற்க வேணும். சரியாக இன்று 3 மணிக்கு வெளிக்கிட்டால் சரி"ஏற்பாடுகளில் மும்முரமாக நின்ற சந்திரனின் தம்பி கீரன் சொன்னான். அவசரப்படுத்துவது போல இருந்தது.


மஞ்சி நேராக அப்பாவிடம் சென்றாள். கடவுச்சீட்டும் விசாவும் ரிக்கெற்றும் எல் லாமே ஒரே கரும பீடத்தினூடு கிடைத்தது போலிருந்தது. பாலைவனத்தில் மழை பொழிந்தது போல் எழுந்த மகிழ்ச்சியில் கனகசிங்கம் மாஸ்ரர் தனது வயதில் பத்து குறைந்திருப்பதை உணர்ந்தார். கண்கள் மட்டும் சொரிந்தன.உடனே அவரும் விமான நிலையம் புறப்பட்டார். சரியாக பி.ப 3.00 மணி காரின் கதவுகள் அடித்து சாத்தப்பட்ட சத்தம் அந்த அயல் முழுவதும் கேட்டது.

காரின் கதவு சாத்தப்படும் சத்தத்தை உன்னிப்பாக அவதானிக்க பழகியிருந்த அயலவரின் செவிகள் அன்று பூரித்தன. மஞ்சி மகனை மடியில் இருத்திக்கொள்ள கார் கட்டுநாயக்க நோக்கி புறப்பட்டது.

-தாரா



# ரஷ்ய அணுவிபத்தின் அதிர்வலைகள் சுவீடனை இன்றும் உலுப்புகின்றதாம்..!






ரஷ்யா-செர்னோபல் அணுஉலை விபத்துச் சர்ச்சை சுவீடன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள கருத்தினால் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. அணு சக்தியைப் பொறுத்தவரை அதனை ஆக்க வேலைக்கு மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என விஞ்ஞானிகளிடையே பொதுவான கருத்து உள்ளது.

ஆனால் அப்படி நடந்ததுமில்லை நடக்கப்போவதுமில்லை என்று கட்டியம் கூறும் விதமாக நிகழ்வுகள் நடந்த வண்ணமிருக்கின்றன.

ரஷ்யாவில் செர்னோபல் அணுஉலை விபத்து 1986 இல் நடைபெற்றது. ஆனால் விபத்து நடைபெற்று கிட்டத்தட்ட இரு தசாப்த காலங்கள் முடியும் தறுவாயான இன்றும் அதன் பாதிப்புகள் ரஷ்யாவின் அயல் நாடான சுவீடனில் காணப்படுகின்றன என விஞ்ஞானிகள் சமீபத்தில் தெரிவித்துள்ளனர்.

சுவீடனின் தென்பகுதியில் புற்று நோய் குறித்த மருத்துவ ஆய்வுகள் இந்தப்புற்று நோய்க்கு காரணம் செர்னோபல் அணு உலை விபத்துதான் என தெரிவித்தன. 1986 முதல் 1996 வரை அந்நாட்டில் 11 லட்சம் புற்று நோயாளிகளிடையே இந்த ஆய்வுகள் நடைபெற்றன. ஆய்வறிக்கை முடிவுகளே அணு உலை விபத்தின் பாதிப்பு சுவீடனில் இன்றுமுள்ளதை வெளிப்படுத்தியுள்ளன.

மனிதர்களின் தவறான கையாள்தலினால் சீர் செய்ய முடியாதளவுக்கு பெருமளவு பாதிப்புகள் ஏற்பட்டு விடுகின்றன என தீவிர சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இதே போன்றே ரஷ்யாவிலும் குழந்தைகளிடம் புற்றுநோய் விகிதம் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கான காரணம் ஆராயப்பட்டபோது,

செர்னோபல் அணுஉலை விபத்தின் காரணமாக நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் புல்வெளிகள் பாதிக்கப்பட்டன. கதிரியக்கம் அவற்றுடன் கலந்து விட்டது. இப்புற்களை கால்நடைகள் உணவாக உட்கொண்டன. கால்நடைகள் வழங்கிய பாலிலிருந்து செய்யப்பட்ட பால் மாவைக்குடித்த குழந்தைகள் புற்று நோயால் பாதிக்கப்பட்டன என்று அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் எது எப்படியிருப்பினும் அணு ஆயுதங்களை பயன்படுத்தும் நாடுகள் தமது வருங்கால சந்ததிகளின் நலன்களின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும். என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

## காளானிலிருந்து இறப்பர் தயாரிப்பு

காளான் உணவாகவும் வைன் மற்றும் அழகுசாதனப்பொருட்கள், பற்பசை, மருந்து வகைகள் ஆகியன தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றிலிருந்து இறப்பரை உற்பத்தி செய்ய முடியும் என்று சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு காளானிலிருந்து தயாரிக்கப்படும் இறப்பரை 'பயோரப்பர்' என அழைக்கின்றனர். ஆய்வளவில் வெற்றி பெற்றுள்ள இது வர்த்தக ரீதியாகவும் வெற்றி பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இணையத்தள அகராதி

GLOSSARIST

Dictionary.com

இணையத்தளத்திலும் ஆங்கில அகராதிகள் உள்ளன. அருஞ்சொற்களை தொடுத்துள்ள தளங்களும் உள்ளன.

http://www.glossarist.com

இந்த தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் நீங்கள் தேடும் சொல்லை வழங்கினால் அந்த சொல்லுக்குரிய பொருளை உடன் அறிந்து கொள்ளலாம்.இத்தளத்தில் துறைசார்ந்த ரீதியாகவும் சொற்களை தேடிக்கொள்ள முடியும். அகராதியில் தேடுவதற்கு சிரமமான சொற்கள் கூட இத்தளத்தில் புதைந்து கிடப்பது தான் இதன் விசேட அம்சம்.

http://www.dictionary.reference.com என்ற தளத்தில் சொற்களை ஒலியாகக்கேட்டுக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் அவற்றை சரியாக உச்சரிக்கும் விதத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆசிரியர், மாணவர்களுக்கு உபயோகமான தளங்கள் இவை.

இதே போன்று சான்பிரான்சிஸ்கோ கடற்கரையில் கற்கள் மீது கற்களை அடுக்கி ஒருவர் சாதனையை செய்து கொண்டிருக்கின்றார். இதற்காக அவர் ஒரு தனியான ஒரு வெப்தளத்தையும் தொடங்கியுள்ளார்.

http://www.rock-on-rock-on.com என்ற இந்த வெப்தளத்தில் இவர் நிறுத்தியிருக்கும் கற்களின் படங்களைப் பார்க்கலாம். இந்த கற்கள் அனைத்தும் அவரது பிரத்தியேகமான தெரிவு. அவரது வேலை பற்றி அறியும் பகுதியும் உள்ளது. இவர் தெரிவு செய்யும் கற்களின் மாதிரிகளின் படங்களும் உள்ளன.

# கணினி ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை மாற்றுவதனால் நன்மையா.......?

கணினி பாவனையாளர்களுக்காக பல புதிய புதிய ஒப்ரேற்றிங் சிஸ்ரங்கள் நாள் தோறும் அறிமுகமாகிக் கொண்டிருக் கின்றன. விண்டோஸ் 95, விண்டோஸ் 98, விண்டோஸ் 2000, விண்டோஸ் XP, லினக்ஸ் இப்படி பல ஒப்ரேற்றிங் சிஸ்ரங்கள் பாவனையில் உள்ளன.

ஆனால் இவை எல்லாமே ஒரே மாதிரியான ட்ரைவர்களைக் கொண்டவை யல்ல. இவை பலருக்குத் தெரிவதில்லை. ஒரு ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள் அதனை விட்டு விட்டு புதிய ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை மாற்றுவதால் சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. இது தொடர்பில் அவதான மாக நடந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் விண்டோஸ் 98 ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை பயன்படுத்திக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவரது வீட்டுக்கு வந்த நண்பர் ஒருவர் விண்டோஸ் XP பற்றிக்கூறவே அவரிடமிருந்து இறுவெட்டைப்பெற்று தனது கணினியினது ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தையும் விண்டோஸ் XPக்கு மாற்றிக் கொண்டார்.

விண்டோஸ் XPயின் வண்ணமயமான ஸ்கிரீன் சேர்வர்களைப் பார்த்து மனமகிழ்ச்சி யடைந்தார். சில மணிநேரம் சென்றது. பாட்டுக் கேட்போம் என்று ஸ்பீக்கரை போட்டார். ஸ்பீக்கரில் இருந்து எந்தவித ஒலியும் எழவில்லை. அதற்கான ட்ரைவர்கள் எல் லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தார் எல்லாம் சரியாக இருந்தன.

உடனே தனது நண்பரை வர வழைத்து அவரிடம் விடயத்தைச் சொன்னார். நண்பரும் பரிசோதித் துப் பார்த்தார். அவராலும் கண்டு பிடிக்க முடியாது போகவே ஒரு கணினி பொறி யியலாளரிடம் கூறினர்.




அவர் வந்து பரிசோதித்து பார்த்தார். ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை மாற்றியது தான் இதற்குக்காரணம் என்று கண்டுபிடித்தார்.


ஏற்கனவே அந்த கணினியில் இருந்தது Aztech நிறுவனத்தின் Sc1283d சவுண்ட் கார்ட். இந்த கார்ட் விண்டோஸ் 95, மற்றும் 98 ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தில் மட்டுமே தொழிற்படும்.

இதனால் பொறியியலாளர் மேற்குறிப் பிட்ட கணினி பாவனையாளருக்கு அந்த ஸ்பீக்கர் தொழிற்பட வெண்டுமெனில் புதிய சவுண்ட் கார்ட் வாங்க வேண்டும். இல்லை யேல் ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தை பழையபடி 98 ஆக மாற்ற வேண்டும் என்று கூறினார்.

இது ஒரு சிறிய உதாரணம் மட்டுமே. ஆனால் இது போன்ற பல உதாரணங்கள் இங்கு உள்ளன. சவுண்ட் கார்ட் மட்டுமல்ல, மொடம், சில மென்பொருட்களும் ஒபரேற் றிங் சிஸ்ரத்துக்கு சிஸ்ரம் வேறுபடலாம்.

ஆனால் அதற்காக பழைய ஒப்ரேற் றிங் சிஸ்ரத்தையே பயன்படுத்த வேண் டும் என்பது கருத்தல்ல. புதிய ஒப்ரேற் றிங் சிஸ்ரத்துக்கு மாறுவதால் புதிய பல வசதிகளும் கிடைக்கவே செய்கின் றன. அதே நேரத்தில் பயன்படாத, புதிய ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தில் தொழிற்பட முடியாத சில வன்பொருள்களை மாற்ற வும் தயாராக இருக்க வேண்டும்.

# செயற்கை சிலந்தி வலை



இயற்கையாகக் கிடைக்கும் அனைத் தையுமே தற்போது நவீன தொழில்நுட்பத் தின் மூலம் செயற்கையாக உருவாக்கு வதில் மனிதன் அதிக அக்கறை காட்டி வருகின்றான், இந்த வகையில் இது வரை சிலந்தியைத்தவிர வேறு யாராலும் உரு வாக்க முடியாது என்றிருந்த சிலந்தி வலையை மனிதன் தனது கூட்டு முயற்சி யால் உருவாக்கியுள்ளான்.

இது தொடர்பாக பல ஆய்வுகள் நடை பெற்ற போதும், இஸ்ரேலில் சமீபத்திய ஆய்வில் நடைபெற்ற ஆய்வின் விளைவாக செயற்கைச் சிலந்தி வலை உருவாக்கப் பட்டுள்ளது. மூன்று பல்கலைக்கழகங்கள் இணைந்து கூட்டாக மேற்கொண்ட ஆய்வின் விளைவாக இந்தச்சிலந்தி வலை உரு வாக்கப்பட்டுள்ளது. ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு பல்கலைக்கழகம், ஜேர்மனியின் முனீச் பல்கலைக்கழகம், இலண்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஆகிய மூன் றுமே அவை.

இது மிகவும் உறுதியாக உள்ளது. செயற்கை இழையான நைலோனை விட 6 மடங்கு உறுதியானது. குண்டு துளைக் காத புல்லட் குருப் எனப்படும் உடைகள், அறுவைச்சிகிச்சையில் தையலுக்குப்பயன் படுத்தப்படும் நுண்ணிய இழைகள் தயாரிப் பதில் சிலந்தி வலையின் இழைகள் பயன் படுகின்றன.

ஆனால் இயற்கையாகக் கிடைக்கும் சிலந்தி வலைகளை மட்டுமே பயன்படுத்தி தனது தேவையை நிறைவு செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் இந்த செயற்கை சிலந்தி வலை பயன்பாடு தேவைக்கேற்ற கண்டு பிடிப்பு என கூறப் படுகின்றது. இச்சிலந்தி வலை அடிப் படையில் புரதங்களால் ஆனது. இந்த சிறப்புப் புரதங்களை சிலந்தியினால் மட் டுமே உருவாக்க முடியும்.இந்த வகை யில் சிலந்தியிலுள்ள இவ்வாறான புரதங் களை உருவாக்கும் மரபணுக்களை தனியாகப் பிரித்தெடுத்து மரபணுக்களை உருவாக்கும் அறிவியலைப்பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. -ஷாம்.

# இழந்த கல்வியை மீட்க நாமே போராட வேண்டும் – யாழ்ப்பாண மாவட்ட கல்வி நிலை பற்றிய ஒரு பார்வை.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நிலை பற்றி தற்போது மிக்ககவனமாக நோக்கும் காலத்தில் இத்துறைசார்ந்தவர்களது கவனம் இது பற்றி அதிகளவு திரும்பியுள்ளது. ஒரு காலத்தில் உயர் நிலையில் இருந்த இப்பிரதேசக்கல்வி நிலையின் வீழ்ச்சிக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், தர்க்கரீதியான சமாதானம் எதுவும் பொருந்தாததாகவே காணப்படுகின்றது. போர்ச்சூழல், வறுமையின் விசச்சூழல், வெளிநாட்டு மோகம், நாகரிக மாற்றம், புதிய தொடர்பு சாதனங்களின் தவறான திசையிலான பிழையான பாவனை என அடுக்கிக்கொண்டே போபவைகள் எல்லாம் சகல மாவட்டத்திற்கும் பொதுவானதாக இருப்பினும் அவற்றின் தாக்கம் பொதுவானதாக சிறிய அளவிலேயே இருக்கின்றது.

### நகரப்பாடசாலைகளின் நடவடிக்கை

பிரபல நகரப்பாடசாலைகள் அதிகளவு மாணவர்களை புலமைப்பரீட்சை மூலமும், ஏனைய பரீட்சைகள் மூலமும் தெரிந்தெடுத்துக்கொண்டாலும் கற்பித்தல் நடவடிக்கைகள் ஒழுக்க நடவடிக்கைகளில் சரியாக வழிகாட்டாது விடுவதனால் கல்விப் பெறுபேறுகளில் அதிக வீழ்ச்சியை அடைந்து விடுகின்றது. ஒரு சில மாணவர்களின் உயர்ந்த பெறுபேறுகளை மட்டும் விளம்பரப்படுத்துகின்றன. எனினும் முழுப் பாடத்திலும் சித்தியடையாது விடும் பெரும் தொகையை இக்கல்லூரிகளே தம்முள் அடக்கியிருப்பதனை வெளிப்படுத்துவதில்லை. 2003,2004 க.பொ.த உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகளின் பகுப்பாய்வு அறிக்கை மூலம் அவை வெளிக்கொண்டு வரப்பட்டன.

### கிராமப்புற பாடசாலைகள்:

கிராமப்புற பாடசாலைகள் தம்மிடமிருந்த 'சாறுகளைப்' பறி கொடுத்து விட்டு ஏனைய மாணவர்களைச்சிரமத்துடன் உயர்ந்த பெறுபேறுகளைப்பெற்று மாவட்ட பெறுபேறுகளின் பெறுபேற்று வீதத்தை உயர்த்த உதவுகின்றன.

### கல்வி விபச்சாரம்

தமது பிள்ளைகளை நகரப்புற பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்துவிட்டு அவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புக்களையும் ஒழுங்கு செய்து, பாடசாலை நேரத்தில் கூட தனியார் கல்வி நிலையங்களுக்கும் சென்று தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு துரோகம் செய்வதுடன் 'கல்வி விபச்சாரத்தில்' ஈடுபடும் பல ஆசிரியர்களின் சேவை மனப்பான்மையற்ற தன்மையும் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகவே உணரப்பட்டுள்ளது.

### தனியார் கல்வி நிறுவனங்களின் தாக்கம்:

புதிய கல்வித்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கற்பித்தல் முறைக்கும், செயல்முறை, கணிப்பீட்டுத்திட்ட ஒப்படை என்பவற்றின் பெறுபேற்றின் தன்மைக்கும் சார்பான கற்பித்தல் முறையின் தன்மைக்கேற்பதான பரீட்சையின் வினாத்தாள்களுக்கு விடையளிக்கமுடியாத தனியார் கல்வி நிறுவனங்களின் 'கற்பித்தல் முறையும்' மற்றொரு காரணமாகவுள்ளது. போட்டிப்பரீட்சை முறைக்குள் எப்படியாவது தமது பிள்ளை வென்று விடவேண்டுமென்ற பெற்றாரின் அவாவால் ஏற்பட்ட அவர்களின் பலவீனத்தை தமது பலமாக்கிக்கொண்டு இத்தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றன. ஈற்றில் பரீட்சைப்பெறுபேறுகள் வெளிவரும்போதுதான் தாம் ஏமாற்றப்பட்டதை இவர்கள் உணர்கின்றபோது ஒரு வகை சமூகப்பிறழ்வு கொண்ட, பிரச்சினைக்குரிய கலாசார சீரழிவுக்குள் தம்மை ஈடுபடுத்தி விரக்தி கொண்டவர்களாக மாறும் சமூகத்து அங்கத்தவர்களான இளைஞர் கூட்டம் ஒன்று உருவாகின்றது. இவர்கள் தேசிய விரோத செயற்பாடுகளுக்கு துணை போபவர்களாகவும் மாறி வருவது அவதானிக்கப்பட்டதாகும்.

### கலாநிதி கன்னங்கராவின் கல்விக்கொள்கை.

கிராமப்புற மக்களதும் பொருளாதாரத்தின் பின் தங்கிய மக்களதும் கல்வி உயர்வுக்காக கொண்டு வரப்பட்ட கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவின் கல்விக் கொள்கையாகிய இலவச கல்வித்திட்டம், சுயமொழிக்கல்விப்போதனை, மத்திய மகா வித்தியாலயங்களின் உருவாக்கம் என்பன இன்று கேள்விக்குறியாகியுள்ளன. தனியார் கல்விக்கூடங்களும் சர்வதேச பாடசாலைகளும், மத்திய மகாவித்தியாலயங்களின் எதிர்பார்த்த செயற்பாடுகளற்ற தன்மையும் இதற்கு வலுவூட்டுகின்றன.

### மத்திய மகாவித்தியாலயங்கள்

சுய மொழிக்கல்விப்போதனையூடாக இலவசக்கல்விபெற்று ஐந்தாம் தரத்தில் புலமைப்பரிசில் பெறும் கிராமத்து மாணவர்கள் மத்திய மகாவித்தியாலயங்களில் விடுதி வசதியுடன் புதிய பரிமாணத்துடன் தமது கல்வியை விருத்தி செய்த முறை நின்றுவிட்டது. யாழ்ப்பாணத்தில் நான்கு பாடசாலைகள் இதற்காகத்தெரிவாகி அமைக்கப்பட்டன. இராணுவத்தாக்குதலால் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் உடைந்து போனது. வயாவிழான் மத்திய மகாவித்தியாலயம் உயர் பாதுகாப்பு வலயத்துள் அமிழ்த்தப்பட்டுள்ளது. 'ஒபரேஷன்' லிபரேஷன் அழித்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எழுந்துவரப் பலகாலம் நீடித்தது. வேலணை மத்திய மகாவித்தியாலயம் மக்களின் போராட்டத்தின் பின் அரைகுறையாக விடுவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து மத்திய மகா வித்தியாலயங்களின் நிலை இவ்வாறாகி விட ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முறை கிராமப்புற மாணவர்களை ஒதுக்கித்தள்ளி அமுக்கி வைத்துள்ளது.

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை

நகர பகுதிகளில் பிரபல்யமான 'பெரிய இடத்து' பிள்ளைகள் படிக்கின்ற ஆரம்ப பாடசாலைகள் அதிக மாணவர்களை உள்வாங்குகின்றன. இங்கு வறுமைக்கோட்டுக்கு மேல் உள்ளோர் மட்டும் கற்கும் வாய்ப்பே அதிகமுண்டு. 'உயர்ந்தோர் குழாம்' என கல்வி, அரச தொழில், வர்த்தகத்தில் உயர்நிலை வகுப்போரின் பிள்ளைகளே அரச புலமைப்பரிசில் வழங்கலுக்கான தகுதியான வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கிராமப்புற மாணவர்களது இடத்தை சவீகரித்து விடுகின்றனர்.

அரசின் 5 வீத ஒதுக்கீடு உண்மையான புலமைப்பரிசில் பெறவேண்டிய மாணவருக்கு கிடைக்காது போக அதனைச்சுவீகரிக்கும் வசதிகூடிய மாணவர்கள் பிரபல்ய பாடசாலைகளுக்கான அனுமதிக்காக மட்டும் இப்பரீட்சைப் பெறுபேற்றை பாவிக்கின்றனர். இவர்கள் முன் தடுத்து நிற்காதிருப்பின் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவ்வுதவிப்பணம் கிடைத்திருக்கும். அரசின் இதற்கான ஒதுக்குப்பணம் கூட அரசுக்கே மீண்டும் சென்று விடுகின்றது. தேவைப்படின் வசதிகூடிய மாணவர்களுக்கு கல்வித்திணைக்களம் தாமாக வேறு பொதுப்பரீட்சை ஒன்றின் மூலம் பிரபல்ய பாடசாலைக்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யலாம். அவ்வாறாயின் கிராமப்புற பிள்ளைகளுக்கு சேர வேண்டிய பணம் அரச நிதி மூலத்துக்கு மீளச்செல்லாது தடுக்க வாய்ப்பும் ஏற்படும். முன்பு இருந்த வசதி தற்போது இன்மையும் கல்விப் பெறுபேறு வீழ்ச்சிக்கு இன்றும் ஒரு காரணமாகும்.

க.இராசதுரை,அதிபர்,
யாழ். மத்தியகல்லூரி

# உலக விநோதங்கள்

-ஷாம்




கடந்த 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகு அமெரிக்க பயணிகள் விமானம் வியட்நாமிற்கு கடந்த மாதம் 10 ஆம் திகதி வந்தது. விமானத்தை அந்நாட்டு மாண விகள் வெள்ளை ஆடை அணிந்து வரவேற்றனர்.



அழகிப்போட்டிகள் திருமணமாகாத பெண்களுக்கு மட்டுமா? திருமணமாகி விட்டாலும் நாங்களும் அழகிகள் தான் என்று கங்கணம் கட்டி அழகிப்போட்டி யொன்றையே நடத்தி விட்டனர் மும்பை யில். விழாவில் ஆடல், பாடல் நிகழ்ச்சி களும் களை கட்டின.



ஜப்பானின் பிரபல கண்ணாடிப் பொருட் கள் தயாரிப்பு நிறுவனங்களுள் ஒன்றான ஹஜாரியோ சமீபத்தில் 71 லட்சம் ரூபா செலவில் இந்த கண்ணாடியாலான வயலினைத் தயாரித்துள்ளது.

ஜப்பானின் பிரபல பொம்மை மொடலான 'ஹலோ கிட்டி' மாதிரி வடிவமைப்பைக்கொண்ட கரடி பொம்மை யொன்றை ஜேர்மனிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.



அவுஸ்திரேலியாவின் கடற்கரைப் பகுதியான அடிலெயிட் பகுதியில் கடந்த ஒரு சில நாட்களுள் ஐந்து பேரை தன் வயிற்றுக்குள் தள்ளி ஏப்பம் விட்ட சுறா தான் இது. இப்பகுதியில் சுறாக்களின் நடமாட்டம் மனிதர்களை அச்சங் கொள்ள வைத்துள்ளது.





சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற கண்காட்சி யொன்றில் மைசூர் அரண் மனையைப் போன்ற வடிவத்தில் 19 அடி உயரமும் 60 அடி அகலமும் கொண்ட இந்த இராட்சத கேக் வைக்கப்பட் டிருந்தது.



வெளிநாட்டு நாணயங்களை உயர்ந்த மாற்று வீதத்தில்
துரிதமாக மாற்றிக்கொள்வதற்கு நாட வேண்டிய இடம்

Devi Forex (Pvt) Ltd, NO. 131, Sea Street, Colombo-11, Sri Lanka.
'Added Value'
Tel: 0094 11 2388960, 2388757, 2432502 Fax: 2327101, E- mail. devi131@visual.lk

# கலகலப்பும் கும்மாளமும்

அங்கம் –8 மூலக்கதை - தாரா உரையாடல் – சித்திரம், ஆனந்த்



# ரஷ்யாவின் கபல்னிகோவ் டெனிஸிலிருந்து ஓய்வு



கபல்னிகோவ்

டெனிஸ் உலகில் ஒரு காலத்தில் கொடி கட்டிப்பறந்தவர் ரஷ்ய வீரர் யேங் கேனி கபல்னிகோவ். உலகின் முதல் நிலை வீரராகத் திகழ்ந்த இவர் டெனிஸ் உலகிலிருந்து விடைபெற்று விட்டார்.

தமது ஓய்வு குறித்து கபல்னிகோவ் கூறியதாவது:-"நான் முறைப்படி அறிவிக் காவிட்டாலும் டெனிஸிலிருந்து எப்போதோ ஓய்வு பெற்று விட்டேன். சிலர் நான் தற் காலிக இடைவெளி விட்டிருக்கின்றேன் என நினைக்கின்றார்கள். ஆனால் டெனி ஸில் எனக்கான காலம் முடிந்து விட்டது"

"நான் 19 வயதில் டெனிஸ் விளை யாடத் தொடங்கினேன். இளம் வயதில் விளையாடியதைப்போல இப்போது என்னால் விளையாட முடியாது.என்னை விட 10 வயது குறைந்தவர்களுடனே இப் போது போட்டி போட வேண்டியுள்ளது. அவர்களின் போட்டியை என்னால் சமா ளிக்க முடியவில்லை. நான் இடது கையால் விளையாடி தோற்கடித்த நபர் களிடமெல்லாம் இப்போது வலது கையால் விளையாடியும் வெல்ல முடியவில்லை. இதுவே டெனிஸில் எனக்கான நேரம் முடிந்து விட்டது என்பதை உணர்த்தி விட்டது.

" எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் என் ரசிகர்களை நான் சோர் வடைய வைக்க விரும்பவில்லை" என்றார்.

## மொடல் அழகியை கரம் பிடிக்கிறார் பிரேஸில் கால்பந்து வீரர் றொனால்டோ

பிரேஷில் கால்பந்து அணியில் முன் னணி வீரர்களில் ஒருவர் றொனால்டோ. உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவ ரான இவர் ஸ்பெயின் நாட்டில் உள்ள ரியல் மாட்ரிட் கழகத்திற்காக விளையாடி வருகின்றார்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இவர் மிலினி என்ற கால்பந்து வீராங்கனையை திருமணம் செய்து கொண்டார். இவர் களுக்கு மூன்று வயதில் ஆண் குழந்தை இருக்கின்றது. இதற்கிடையே இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரிந்து சென் றனர்.இந்நிலையில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த மிகவும் பிரபலமான 'மொடல்' அழகியான மேனிலாவுடன் றொனால் டோவுக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் ஒன்றாக சுற்றித்திரிந்தனர்.

பின் கடந்த ஜூலை மாதம் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அதன்போது இன்னும் ஒரு மாதத்தில் திரு மணம் நடக்கும் என றொனால்டோ கூறினார். ஆனால் உடனடியாக திருமணம் நடக்க வில்லை.இந்நிலையில் இன்னும் சில வாரங் களில் றொனால்டோ - டேனிலா திருமணம் பாரிஸில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.இதை உறுதி செய்ய முடியவில்லை என்றும் அதே நேரத்தில் இது தொடர்பாக மறுப்பதற்கு எதுவும் இல்லை என்னும் றொனால்டோவின் நண்பர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஐ.சி.சி. தலைமையகம் இடமாற்றம்


இங்கிலாந்து அரசு வரிச்சலுகை அளிக்காததையடுத்து லண்டனிலிருந்து தலைமையகத்தை வேறு இடத்திற்கு மாற்ற சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட் டுச்சபை (ஐ.சி.சி) முடிவு செய்துள்ளது.

முன்னதாக இங்கிலாந்து அரசின் வரவு- செலவுத்திட்டம் வெளியிடும்போது வரிச்சலுகை அளிப்பது குறித்து அறி விக்கப்படும் என்று இங்கிலாந்து விளை யாட்டுத்துறை ஐ.சி.சியிடம் தெரிவித் திருந்தது. ஆனால் சமீபத்தில் அறிவிக் கப்பட்ட பட்ஜெட்டில் இது குறித்து எது வும் தெரிவிக்கப்படவில்லை.

இது தொடர்பாக விளையாட்டுத் துறை அமைச்சகத்துடன் ஐ.சி.சி நிர்வா கிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆயி னும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. எனவே லண்டனிலிருந்து வேறு இடத் திற்கு தலைமை அலுவலகத்தை மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

"பிரித்தானிய அரசு எங்களுக்கு வரிச்சலுகை மறுத்து விட்டது. இது எங் களை மிகுந்த ஏமாற்றமடையச் செய் தது. என ஐ.சி.சி தலைவர் ஈஷான் மணி தெரிவித்துள்ளார்"

## தரவரிசையில் முன்னேறுகிறார் சச்சின் டெண்டுல்கர்



சச்சின் டெண்டுல்கர்

சர்வதேச கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் கீழ் நோக்கிச் சென்று கொண் டிருந்த சச்சின் டெண் டுல்கர் மீண்டும் முன்னிலை பெற்று வருகின்றார். டெண்டுல்கர் காயம் காரணமாக (டெனிஸ் எல்போ) பல ஆட்டங்களில் விளையாடாமல் இருந்தார். பின்னர் மூன்று மாத கால இடை வெளிக்குப்பிறகு களமிறங்கிய அவரால் முன்னரைப்போல சிறப்பாக விளையாட முடியவில்லை. இதனால் சர்வதேச கிரிக்கெட் தரவரிசைப்பட்டியலில் 12 ஆவது இடத்திற்கு அவர் பின் தள்ளப்பட்டார்.

இந்நிலையில் பங்களாதேஷிற்கு எதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட் டத்தில் ஆட்டமிழக்காது 248 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் தரவரிசையில் மீண்டும் சச்சின் முன்னேறி வருகின்றார்.

இதன்படி அதில் டெண்டுல்கர் 6 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இரண்டாவது இடத்தில் இருந்த ஷேவாக் நான்காவது இடத்திற்குத்தள்ளப்பட்டுள்ளார். முத லிடத்தை ராகுல் டிராவிட் தக்க வைத் துள்ளார். மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் பிரையன் லாரா இரண்டாமிடத் திலும் தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.

# மணமக்கள் தேடல்



## மணமகன் தேவை

மட்டக்களப்பை சேர்ந்த 26 வயதுடைய பெண்ணுக்கு UK, ஐரோப்பா, கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: பூசம், உயரம்: 5’2"

REF:SLF238

பிரித்தானியா நிரந்தர விசா பெற்ற 33 வயதுடைய வைத்தியத்துறையில் தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் படித்த மணமகன் தேவை.
நட்சத்திரம்: அச்சுவினி, உயரம்: 5’3"

REF:UKF222

யாழ்–புங்குடுதீவைச்சேநர்ந்த பிரான்சில் நிரந்தர விசாவுடன் கணக்காளராகப் படித்துக்கொண்டிருக்கும் 28 வயதுடைய பெண்ணுக்கு UK இல் இருக்கும் படித்த மணமகன் தேவை. நட்சத்திரம்: பூராடம், உயரம்: 5’6"

REF:FRF220

பிரித்தானியாவில் ஒரு வருடமாக விசாவுடன் (Student) படித்துக்கொண்டிருக்கும் 29 வயதுடைய பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்: சுவாதி, உயரம்: 5’3"

REF:UKF219

மட்டக்களப்பைச் சேரந்த 30 வயதுடைய BA பட்டதாரிப் பெண்ணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன்கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம்: புணர்பூசம், உயரம்: 5’4"

REF:SLF217

சுவீற்சர்லாந்துப் பிராஜ உரிமை பெற்ற 23 வயதுடைய மருத்துவமனையில் வேலைபார்க்கும் பெண்ணுக்கு, UK அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை.
நட்சத்திரம்: உத்தரம், உயரம்: 5’2"

REF:CHF214

பிரித்தானியாவில் பிறந்த வங்கித்துறையில் உத்தியோகம் பார்க்கும் 30 வயதுடைய பெண்ணுக்கு படித்த உத்தியோகத்தில் இருக்கும் ஆங்கில மொழி நன்றாகப்பேசத் தெரிந்த மணமகன் தேவை. நட்சத்திரம்: ரேவதி, உயரம்: 5’3"

REF:UKF112

பிரித்தானியாவில் 6 வருடங்களாக இருக்கும் 44 வயதுடைய ஆசிரியப்பெண்ணுக்கு இலண்டனில், ஐரோப்பாவில் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: உத்தரட்டாதி, உயரம்: 5’5"

REF:UKF204

பிரித்தானியாவில் நிரந்தர விசாவுடன் இருக்கும் 24 வயதுடைய இலண்டனில் B.Sc படித்த பெண்ணுக்கு மணமகன் வேவை. நட்சத்திரம்: புணர்பூசம், உயரம்: 5’2"

REF:UKF203

யாழ்–கொக்குவில் மேற்கைச்சேர்ந்த தற்போது பிரித்தானியாவில் நிரந்தர விசாவுடன் இருக்கும் 26 வயதுடைய படித்த பெண்ணுக்கு UK இல் வேலைபார்க்கும் மணமகன் தேவை. நட்சத்திரம்: திருவோணம், 7 இல் செவ்வாய், உயரம்: 5’2"

REF:UKF200

யாழ்–நல்லூரைச் சேர்ந்த தற்போது பிரித்தானிய குடியுரிமை பெற்ற 23 வயதுடைய வங்கியில் வேலைசெய்யும் பெண்ணுக்கு, படித்த மணமகன் தேவை.
நட்சத்திரம்: புணர்பூசம், 8 இல் செவ்வாய், உயரம்: 5’5"

REF:UKF198

சுவீடன் நாட்டு பிரஜா உரிமைபெற்று மருத்துவமனையில் பணிபுரியும் விவாகரத்துப் பெற்ற 42 வயதுடைய கிறீஸ்தவப் பெண்ணுக்கு இலங்கை, இலண்டன், கனடா அல்லது ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை.உயரம்: 5’6"

REF:SWF196

யாழ்–கைதடியைச் சேர்ந்த, 21வயதுப் பெண்ணுக்கு இலண்டன், கனடா அல்லது ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை.
பெண்ணுக்கு 7இல் செவ்வாய். உயரம் 5’6"

REF:SLF195

கொழும்பில் CIMA படித்துக்கொண்டிருக்கும் 22 வயதுப் பெண்ணுக்கு இலண்டன், அல்லது கனடா நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை.
நட்சத்திரம்: திருவோணம், உயரம் 5’5"

REF:SLF193

மட்டக்களப்பைச் சேர்ந்த 34வயது பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா, ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை.உயரம்: 5’4"

REF:SLF149

யாழ்–சாவகச்சேரியைச் சேர்ந்த, தற்போது பிரித்தானியவில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம் – திருவாதிரை, உயரம் : 5’ 4"

REF:UKF144

யாழ்–கந்தர்மடம், இந்தியாவில் 13 வருடங்களாக இருக்கும் மின்னியல் பட்டதாரியாக தேர்ச்சி பெற்ற 25 வயதுடைய பெண்ணுக்கு UK அல்லது ஐரேப்பாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம் – அனுஷம், உயரம்: 5’5"

REF:INF137

## மணமகள் தேவை

சுவிற்சர்லாந்தில் நிரந்தர விசா பெற்ற 38 வயதுடைய ஆணுக்கு இலங்கை, UK, கனடா, அவுஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவில் மணமகள் தேவை. நட்சத்திரம்: ரேவதி, உயரம்: 5’6"

REF:CHM235

யாழ்–பருத்தித்துறையைச் சேர்ந்த, இங்கிலாந்தில் 8 வருடமாக இருக்கும் 26 வயதுடைய ஆணுக்கு UK,கனடா, அவுஸ் திரேலியா அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் தேவை.
நட்சத்திரம்: பூராடம், உயரம்: 5’9"

REF:UKM221

யாழ்–உடுப்பிட்டியைச் சேர்ந்த, இங்கிலாந்தில் இருக்கும் 27 வயதுடைய வேலைபார்க்கும் ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் தேவை.
நட்சத்திரம்: சுவாதி, உயரம்: 5’5"

REF:UKM218

யாழ்–திக்கத்தைச் சேர்ந்த, பிரான்சில் இருக்கும் 34 வயதுடைய ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் வேவை. நட்சத்திரம்: பூரம், உயரம்: 5’6"

REF:FRM216

யாழ்–கொடிகாமத்தைச் சேர்ந்த, பிரித்தானியாவில் 4 வருடங்களாக இருக்கும் 30 வயதுடைய ஆணுக்கு UK அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகள் தேவை.
நட்சத்திரம்: உத்தரம், உயரம்: 5’5"

REF:UKM215

பிரித்தானியாவில் வேலை செய்து கொண்டிருக்கும் 28 வயதுடைய ஆணுக்கு UK விசாவுடன் கூடிய படித்த சராசரி அழகுடைய மணமகள் தேவை.நட்சத்திரம்: பரணி, (உதயத்துச் செய்வாய்) உயரம்: 168cm

REF:UKM208

பிரித்தானிய பிரஜா உரிமை பெற்ற 32 வயதுடைய ஆணுக்கு ஆழகிய மணமகள் தேவை.நட்சத்திரம்: ரோகிணி, உயரம்:5’8"

REF:UKM206

யாழ்–உடுப்பிட்டியைச் சேர்ந்த தற்போது பிரித்தானியாவில் 4வருடங்களாக இருக்கும் 23 வயதுடைய வேலை பார்க்கும் ஆணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகள் வேவை.
நட்சத்திரம்: அத்தம், உயரம்: 5’9"

REF:UKM202

பிரித்தானியாவில் 5வருடங்களாக இருக்கும் 32 வயதுடைய B.Sc(இலங்கை) முடித்து, தற்பொழுது கணினிப்பொறியியல்த்துறையில் படிக்கும் ஆணுக்கு UK விசாவுடன் கூடிய மணமகள் வேவை.
நட்சத்திரம்: பரணி, உயரம்: 5’7"

REF:UKM201

அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற 33 வயதுடைய B.com படித்த விவாகரத்துப்பெற்ற ஆணுக்கு Uk அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகள் வேவை.
நட்சத்திரம்: அத்தம், உயரம்: 5’5"

REF:UKM199

யாழ்–நல்லூரைச் சேர்ந்த தற்போது பிரித்தானிய குடியுரிமை பெற்ற 26 வயதுடைய (A/L) படித்த ஆணுக்கு படித்த மணமகள் தேவை. நட்சத்திரம்: ரேவதி, 2இல் செவ்வாய், உயரம்: 5’5"

REF:UKM197

பிரித்தானியாவில் நிரந்தா விசாவுடன் கணக்காளராகப் பணிபுரியும் 26 வயதுடைய ஆணுக்கு மணமகள் படித்த தேவை. நட்சத்திரம்: ரேவதி, உயரம்: 5’4"

REF:UKM194

பிரித்தானியாவில் இருக்கும் 34 வயதுடைய இலங்கை Bsc பட்டதாரிக்கு மணமகள் தேவை.
நட்சத்திரம்: திருவாதிரை, உயரம்: 5’7"

REF:UKM153

Supermarket முகாமையாளராக பணிபுரியும் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற 31 வயதுடைய ஆணுக்கு A/L படித்த மணமகள் தேவை. உயரம்: 5’5"

REF:UKM148

UK இல் சொந்தக்கடை வைத்திருக்கும் 24 வயதுடைய ஆணுக்கு UK, ஐரோப்பா அல்லது கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை.
நட்சத்திரம்: மிருகசீரிடம், 7இல் செவ்வாய், உயரம்: 5’8"

REF:UKM145



பிரான்சில் Perfume factory இல் வேலைபார்க்கும் 38 வயதுடைய ஆணுக்கு இலங்கையில் அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகள் தேவை.

REF: FRM131

10 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் தென்மராட்சியைச்சேந்த முகாமையாளராகப் பணிபுரியும் 34 வயதுடைய ஆணுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை

REF: UKM119

யாழ்–சாவகச்சேரியை சேர்ந்த பிரித்தானியாவில் குடியுரிமையுடன் இருக்கும் 32 வயதுடைய இயந்திரவியல் பொறியியலாளருக்கு 25 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் தேவை. தமிழ், ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரிந்த பெண் விரும்பத்தக்கது.
ஏழில் செவ்வாய்

REF: UKM121

**மேலதிக விபரங்களுக்கு
தமிழ்உலகம் சஞ்சிகையுடன்
தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல. 0044 20 8455 9001**

**மணமக்களை இணைப்போம்**


வட இந்திய, தேன் இந்திய,
சீன, சைவ, அசைவ
உணவுகளையும் வட, தேன்
இந்திய ஸ்வீட் வகைகள்
மற்றும் கார வகைகளையும்
குறித்த நேரத்தில் தரமானதும்
சுவையானதாகவும்
பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய ஒரே இடம்.....!
CHETTINAD
RESTAURANT
ஐரோப்பிய, அவுஸ்திரேலிய
நாடுகளுக்கு ஸ்வீட்
வகைகள் விஷேடமாக
தயாரித்து தரப்படும்
No.: 293, Sea Street, Colombo-11,
Sri Lanka.
Tel: 0094 11 2432863,
0094 11 2472167
Fax: 0094 11 2448126
Branch:
No.: 22, 37th Lane, Colombo - 06.
Tel: 0094 11 2588271, 0094 11 2362035


For BHARATHANATYAM CLASSES
AND CINEMATIC CLASSES
Malayalee Association of the UK
PLEASE CONTACT : MS. CHITRA
MOBILE : 07747054468 (UK)


K.T.
COLOMBO TASTE
Srilankan &
South Indian
Cuisine
100 இடியப்பம் சொதி, சம்பலுடன் £14 மட்டுமே
அத்துடன் உடன் றொட்டிக்கும் நாடுங்கள்
கொழும்பு சுவையகம்
Proprietor
C.Mohan
Telephone
020 8991 6834
Mobile:
07958 938 939
5 Bilton Road, Perivela, Greenford, Middx
UB6 7AY, England


KAMALAM'S
SALE CENTRE
இலங்கை, இந்தியா, தாய்லாந்து
மற்றும் உலகின் பல பாகங்களில்
இருந்தும் இறக்குமதி
செய்யப்படும் உடன்
மரக்கறி வகைகள்!
கடலுணவுப்பொருட்கள்:-
மீன், இறால், நண்டு, கணவாய்
பத்திரிகைகள், வார சஞ்சிகைகள்,
புதிய, பழைய திரைப்படங்கள்
Audio, Video, CD, DVD
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பேர்லின் மாநகரில் ஒரே ஸ்தாபனம்
கமலம் வர்த்தக நிலையம்
All international calling cards
Available for retail & whole sale
KAMALAM'S
Sale Centre
Fulda Str-12
12045 Berlin
Germany
Te: 030 623 9362
Fax: 030 623 7126

# உங்கள் தாய்நாட்டில் ஒரு வீடு

* வீடுகள், காணிகள் வாங்குவதற்காக 80% வரை கடன் வசதிகள் செய்துதரப்படும்.

* வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கான காணி - நில வரிகளுக்கான ஆலோசனைகள்.

* மூன்று - கிழமைகளில் உங்கள் வீட்டுக்கடனுக்கான அங்கீகாரம் பெற்றுத்தரப்படும்.
(விண்ணப்பதாரரின் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் காலத்தில் தங்கியிருக்கும்)

வருட வட்டி வீதம் - 13%, கடனை மீளச்செலுத்தும் தவணை 5 முதல் 7 வருடம் வரை, குறைந்த தொகைக்கடனாக ரூபா.500,000/=

**உங்கள் முதலீட்டில்! எங்கள் சேவை!!**


மேலதிக தகவல்களுக்கு :-


*FURTHER INFORMATION*
*Please contact*

NDB HOUSING
We'll make your home happen!

**Head - Business Development**
**NDB Housing Bank Limited**
NO. 712 Galle Road, Colombo 03
Tel: +94 11 255 2552 (Direct), +94 11 255 2003(General)
Fax: +94 11 255 2001
E-mail rukshila@ndbhousing.com, delrene@ndbhousing.com
website www.ndbhousing.com

**Radiance Consultancy Ltd**
37 Tenby Avenue
Harrow, Middx, Ha3 8RU, England
Tel +44 208 922 8840, +44 7963 804 999
E-mail radianceuk@aol.com





இலண்டனில் முன்னணி
**Video** படப்பிடிப்பாளர்கள்


020 82702426
079 0412 5826
077 8212 7962

ILFORD- ESSEX
LONDON - U.K






ENGLISH & CONTINENTAL FOOD




**SPIRITS**
**WINE**
**BEER**
**CIDER**

**TRUMPET FOOD & WINE**

10 Queensbury Station Parade
Queensbury, Middlesex HA8 5NR
England.

Tel: 020 8952 9926
Fax: 020 8952 0201

# J R Universal Exchange

All major & exotic currencies and Travellers cheques

## The best in West

**மத்திய இலண்டனில் பணமாற்று சேவையில் முன்னணியில் திகழ்பவர்கள்**

J R Universal Exchange

**வெளிநாடுகளில் இருந்து இலண்டனுக்கு விஜயம் செய்யும் நீங்கள் உங்கள் பணத்தை கூடிய பெறுமதியாக்க நாடுங்கள்**

J R Universal Exchange
52 Queensway
London W2 3TY
England
Tel/Fax: 020 7229 5269




# AAUM CAR RENTAL

**இலண்டனில் இருந்து விசேட Bus சேவை!**

Wales கந்தவேல் முருகன் கோவிலுக்கு செல்ல விரும்பும் பக்தர்களுக்கான பிரயாண ஒழுங்குகளை செய்து தருகிறார்கள் AAUM CAR RENTAL நிறுவனத்தினர்கள்.

**நபருக்கு £29.50 மட்டுமே (சுற்றுப்பயணம்)**

**உங்கள் பதிவுகளுக்கு தொலைபேசி**

**020 8749 3900** (Mr Raja)

**மேலும்** Cars, Vans, Minibus MPV **களை குறைந்த கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

AAUM
CAR RENTAL
281 The Vale
Acton
London W3 1QA









# CAAVERI PRODUCTS

80 Mark house Road
Walthamstow
London E17 8DG
England

Tel: 0044 20 8520 1923
Mobile: 0044 79 8445 6887
Fax: 0044 20 8509 7487

சர்வதேச ஏற்றுமதியாளர்கள்












உங்களுக்குத்தேவையான சகல மளிகைப்பொருட்கள் இலங்கை, இந்திய, தாய்லாந்து நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**மளிகைப்பொருட்கள், மரக்கறிகள், கடல் உணவுப்பொருட்கள், சஞ்சிகைகள்**

**உலகின் சகல நாடுகளுக்கும் துரித கெதியில் பணமாற்றுச்சேவையா? உடன் நாடுங்கள்**

**020 8905 7765**

VIDEO
AUDIO
CD, VCD,
DVD

MARUTHI VIDEO

**MARUTHI CASH & CARRY**

15 - 17 Queensbury Station Parade, Queensbury, Middlesex HA8 5NR, England.
Tel: 020 8952 6655 www.maruthi.co.uk




கடந்த பல வருடங்களாக கிழக்கு இலண்டன் மக்களின் தேவையினை பூர்த்தி செய்து ஆதரவைப்பெற்ற பிரபாஸ் தமிழ்க்கடை இப்பொழுது மேற்கு இலண்டனில் உள்ள Rayners Lane இல் வாகன தரிப்பிட வசதி, மற்றும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் தமது புதிய வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்

இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்,
புதிதாக மரக்கறி வகைகளுக்கென
குளிரூட்டப்பட்ட முறையில்
உடன் மரக்கறி, பழவகைகள்,
கடல் உணவுப்பொருட்கள்,
உடன் இறைச்சி வகைகள்,
குளிர்பான வகைகள், மதுபான வகைகள்,
தொலைபேசி அட்டைகள், இலங்கை, இந்திய
வாராந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள்
மற்றும் புதிய, பழைய திரைப்பட
Audio CD, VCD, DVD
என்பனவற்றை தரமானதாகவும்
மலிவாகவும் மேற்கு இலண்டனில்
ஒரே இடத்தில் பெற நீங்கள்
விரைய வேண்டிய இடம்


## ‘பிரபாஸ் தமிழ்க்கடை’

415, Alexandra Avenue
Rayners Lane,Harrow
HA2 9SG

Tel: 020 8866 0977










வெம்பிளியில் ஓர் திரைப்படக் களஞ்சியம்!



# Maruthy Entertainment
# மாருதி என்டர்டெய்மென்ட்

**DVD Player - Only £ 99 & 10 DVD free**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - நாடகங்கள், பட்டி மன்றங்கள், அரட்டை அரங்கம், மற்றும் Devotional CD's, Carnatic CD's & Sinhala CD's உலகின் சகல நாடுகளுக்குமாக பணமாற்று சேவையுடன் Money Transfer Service for all countries



Special Offers → Original Tamil, Hindi, Malayalam & Telugu DVD, VCD, CD's, Audio, Video & MP3 For Wholesale & Retail

**'மாருதியில் இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை'**

Original Tamil, Hindi, Malayalam, Telugu & Singala VCD, DVD, CD's, & Audio, Video, MP3 For Sale, Rent and Mail Order

மேலதிக தொடர்களுக்கு:
K. Sundar
Maruthy Entertainment
44A, 1st Floor,
Ealing Road
Wembley HA0 4TL
England
Tel: 020 8902 2663
Mobile: 079 8539 9521

புதிய திரைப்படங்கள் 10 for £10

Sri Lanka Branch
Symphony Music Corner
257E, Galle Road,
Wallawata, Colombo-6,
Sri Lanka
Tel: 0094 112 505 733




# For sale in Wellawatte - Sri Lanka


* Condimonium property on 11.62 perches
* 2 units - each with 3 B/Rooms and all facilities
* On land side - about 150 metres from Galle Raod
* Architect designed/supervised
* Foundation strong enough for another floor.

**For further details:**

**Contact - Mano - 94 - 112 - 363955**
**email: manodevi@dialogsl.net**

# T K Siya Bhavan

SRI LANKAN & SOUTH INDIAN CUISINE



திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து விசேட நிகழ்வுகளுக்கும் குறித்த நேரத்தில் தரமான பல்சுவை உணவு வகைகளை வழங்கும் ஒரே நிறுவனம் T K Siya Bhavan

கலை, கலாசார, பண்பாட்டு நிகழ்வுகளுக்கான அழைப்புகளுக்கு அதி விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

7 THE PARADE, SUDBURY HEIGHTS AVENUE,
GREENFORD, MIDDLESEX, UB6 OLZ, ENGLAND

**Tel : 020 8902 8083**
**Mobile : 07958 31 95 63**

உங்கள் நோக்கம் எங்கள் சிந்தனையுடன் இணைந்து சர்வதேசம் எங்கும் பரவிட...

**'தமிழ் உலகத்தில்' விளம்பரம் செய்யுங்கள்**




# வெள்ளவத்தையில் உங்கள் நலன் கருதி இப்போது...

திருமணம் மற்றும் அனைத்து விதமான தேவைகளை வண்ண வண்ண டிசைன்களிலும் நவீன நாகரீகமாகவும் உங்களை அலங்கரிக்கும் ஒரே இடம்

சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரினதும் அபிமானம் பெற்ற ஆடையகம்

நவீன நங்கையரின் நம்பிக்கையான தெரிவு





## Siva Emporium

118,Galle Road,Wellawatte,Colombo-06.
Tel No:(011) 2 586321,0777 588820

# SATHIY STORES & JEWELLERS

Basel



உலகின் சகல நாடுகளுக்கும் துரித கதியில் பணமாற்றுச்சேவை! அவசர தேவைகளை முன்னிட்டு சில மணி நேர சேவை

நம்பகமான - பாதுகாப்பான - விரைவான

துரித சேவைக்கு நாடுங்கள் சக்தி தமிழ்க்கடை

Fast cash - Send today - Collect with in 1 hour



## Indian Bazaar

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நகைகள் தரமாகவும் மலிவாகவும் இங்கு கிடைக்கும்



SATHIY STORES
&
JEWELLERS
K.SATHIY
ELISABETHEN ANLAGE-11
4051 BASEL
SWITZERLAND

TEL : 061 383 8686
FAX : 061 383 8688
H.P : 079 669 4207

# Yaalini Europe Ltd

**New Fashion Tamil Trader**

The UK's No.1 and Europe's leader in imports, exports and wholesale of quality Srilankan and Indian products including fresh vegetables

We supply many more leading brands

LARICH LION Elephant Soft Drinks

Our own products include:
Yaalini products, Thiru products, Yaalsea products and Yaalini Frozen Foods

The No.1 Brand for Tamil Foods

## J&K Group

unit 10, Kimpton Business Centre, Minden Road
Sutton, Surrey SM3 9PF,UK

Tel : 020 8641 1161 (10 lines) Fax : 020 8641 8668



# MORELAND International

M

**Land and Development**

| வீடுகள், காணிகள் விற்பனைக்கு | |
|---|---|
| Colombo-03<br>26p- with a old building<br>Rs.3 Million per perch<br>Alfred place.Col.3 | NUGEGODA<br>24 Perches<br>Large house with 4 Bed Rooms<br>Edirisinghe Road<br>Rs: 8 Million |
| COLOMBO - 6 (Kohuwela)<br>Bare Land - 12 Perches<br>Per Perch - Rs:450,000/=<br>Dutugemunu Street,Rs: 5.4 Million | COLOMBO - 6<br>Bare Land - 12 Perches<br>Per Perch - Rs:650,000/=<br>Jayasinghe Road,Rs: 7.8 Million |
| COLOMBO - 6 (Kirulappone)<br>9.5 Perches with old house<br>Robert Gunewardene Mw<br>Rs: 3.5 Million | COLOMBO - 7<br>Bare Land - 11 Perches,<br>Per Perch - Rs:2.7 Million<br>Kensey Road, Col-7 |
| COLOMBO - 06<br>47 th Lane 27 perches<br>with (G+6 Approval)<br>RS.2Million Per Perch | BATTARAMULLA<br>39 Perches<br>3 Bed Room house with large garden.<br>100 mtrs to Parliament grounds<br>Rs: 16.2 Million |
| NUGEGODA<br>Bare Land - 12 Perches<br>Per Perch - Rs:250,000/=<br>Jambugasmulla Road,Rs: 3 Million | Colombo -06<br>Facing Galle Road<br>35 Perches<br>Per Perch-Rs.3.2 Million |

For more Information Contact - 0773082427, 2591044

# SAI TRADER GmbH

Fresh, Frozen and Dry Foods Importers & Wholesalers

உடன் மரக்கறி, பழ வகைகள், குளிர்-அதிகுளிரூட்டப்பட்ட உணவு வகைகள், இலங்கை மதுபானம் போன்றவற்றின் நேரடி இறக்குமதியாளர்களும் மொத்தவிற்பனையாளர்களும்.

இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, கனடா, டொமினிக்கா போன்ற நாடுகளிலிருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்டு சுவிஸ் தமிழ் வர்த்தக நிலையங்களுக்கு அதி துரித கதியில் விநியோகம் செய்கின்றோம்

SAI TRADER GmbH
Raaterstrasse 24
8175 Windlach
Zurich
Switzerland

**Tel: 0041 1 885 86 50**
**Fax: 0041 1 885 86 51**






# SEKAR SWISS

சேகர் தமிழ்ப் பதிப்பகம் & தருஷ் காட் சுவிஸ்




அனைத்து தொடர்புகளுக்கும்:

**Tel & Fax: 0041 32/951 25 08**

web: www.sekar.ch.

Net Try
SUPERMARKET
புதிய நிர்வாகத்தின் கீழ்
சகல விதமான இலங்கை, இந்திய,
தாய்லாந்து மரக்கறி வகைகள்
மளிகைப்பொருட்கள்
அனைத்து மீன்வகைகள்
தமிழ், ஹிந்தித் திரைப்படங்கள்
OFF - LICENCE
உலகின் சகல நாடுகளுக்குமான பணமாற்றுச்சேவையுடன்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
Net Try Supermarket
27 WATLING AVENUE
BURNT OAK, EDGWARE
MIDDX HA8 0LF, ENGLAND
TEL: 020 8952 5959

GANAPATHY
CASH & CARRY
For All Your Groceries & Seafood
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள், பழவகைகள், சகலவிதமான உடன் மரக்கறிவகைகள், கடலுணவுப்பொருட்கள், அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள் ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம்...
WINE MART
Incorporated in the Ganapathy Chain
உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்
34 - 38 Ealing Road, Wembley
Middx HA0 4TL
TEL : 020 8795 4627
FAX : 020 8903 3185

Vahizan Disc World
Get up to 10% off !!!
From our online shopping!!!

வாகீசன் டிஸ்க் வேள்ட்
எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் MP3,AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.
WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU, RPG,AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!
Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com
Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com

RATHY JEWELLERS

நாள் தோறும் புத்தம் புது வடிவங்களுடன்
எப்போதும் மலிவு விலை
28 Ealing Road,Wembley
Middlesex HAO 4TN,England
Tel: 020 8903 3063 Fax: 020 8903 9711

# GLOBAL TOWERS
## HOTEL

COLOMBO - SRI LANKA


உங்கள் விடுமுறை நாட்களின்
உல்லாச சுகத்தைத் தருவது
Global Tower Hotel மட்டுமே




Marine Drive , Colombo- 06







* நீச்சல் தடாகம்
* உணவகம் (சிற்றுண்டிச்சாலை)
* 24 மணிநேர அறை பராமரிப்பு
* நீராவிக்குளியலறைகள்
* 24 மணிநேர பாதுகாப்பு
* உடற்பயிற்சி நிலையம்
* மதுபானசாலைகள்
* 3 படுக்கையறைகளுடன் சமையல் அறை
* முழுமையான சேவை வசதிகள்
* மத்திய குளிரூட்டி வசதிகள்
* பளிங்குக்கல் கொண்ட நிலம்



* Double Room from US $ 45/day
* 4 Star Hotel

For all the facilities of a prestige hotel with the privacy and comfort of your own high specification apartment, rent an apartment at Global Towers for any period of time . . .
From a short overnight stay to a year-long lease, the apartments can cater for up to 8 people and also offers single occupancy rates

Each fully furnished apartment consists of 3 double bedrooms and 3 bathrooms en-suite.

பதிவுகளுக்கு அழையுங்கள்

0044 20 8455 9001 (UK)
0094 11 259 1000 (Sri Lanka)

www.globallanka.com
E-mail: info@globallanka.co.uk

A Project by Global Lanka

Global Investment Lanka Holdings Limited Finchely Road - London NW11 7PE.UK

# Global Towers Hotel
## Colombo, Sri Lanka



Your holiday suite in Sri lanka with all our hotel facilities at your disposal

- Swimming pool
- Restaurant
- 24 hour room service
- Sauna & Jacuzzi
- 24 hour security
- Gym
- Pool & Sports Bar



3Bed Suites feature

- Fully fitted kitchen
- 3 double bedrooms
- 3 bathrooms en-suite
- Fully serviced
- Central air conditioning
- Fully furnished
- Marble flooring

Suites & Room Rates

| | |
|---|---|
| Single Rooms | US$ 45 |
| Double Rooms | US$ 55 |
| 2Bed 2 Bath Suites From | US$ 90 |
| 3Bed 3 Bath Suites From | US$ 110 |

30% Discount for booking of one month or more

www.globallanka.com





CALL NOW FOR BOOKINGS
T: 0044 20 8455 9001
E: info@globallanka.co.uk

# Global Travel Express

## MOST COMPETITIVE PRICES TO SRI LANKA / INDIA

Flight + stay in 4* Hotel in Colombo

7 Nights £560 14 Nights £685

Prices include flights + Accommodation on Twin sharing Room + Breakfast + Return Airport Transfers in Colombo

Valid for Travel Between 07 JAN AND 18 MAR 2005 - * CONDITIONS APPLY

**Tickets to any other Destination at Competitive Prices

Open on Saturdays till 2

PROTECTED

IATA

Global Travel Express
899 – 901, Finchley Road
London NW11 7PE
United Kingdom
Tel 0208 455 9001
travel@globallanka.co.uk